ஹரி

ஞானரத்திரக் குறவஞ்சி

ஞானதிரவிய உரை.

காப்பு—கொச்சக்கலிப்பா

பொன்னுலகு பொருந்துமனப் பொருளறியத் தனமறிய
மின்னுலகில் மெய்ஞ்ஞானம் விளங்குகிற வஞ்சிதனே
உன்னுமத் தன்னினைவி லுன்னியுதிப் பொருநான்காய்த்
தன்னிறையைத் தன்நினைவாய்த் தரிப்பதுவே காப்பாமே.

இதன்பொருள்:—ஞான உலகமான சுவர்ன லோகத்தில் குடி கொண்டிருக்கும் தருதியைப் பெறுகிறதற்குக் காரண கருவியாகிய மனமாயை என்னும் அந்த காரங்களை அறுத்து விடக் கூடிய உபாய வழிகளை அறிகிறதற்கும், அதற்குறிய நிரவிய சாதனங்களான கல்வி, யுகம், ஞானம், மௌனம், கியானம் பின்சரயாத வைராக்கியம் ஆகிய வேண்டுமான ஸாதனங்களைக் கைவல்யப்படுத்திக் கொள்ளவும், பெண்களின் மாயா வினோத வலிகளால் சிக்குண்டு அவல நினைவென் னும் போர்வையைப் போர்த்துத் திரிகின்ற உலக வாசிகளான பாபஸ் பாப ஜனங்களுக்காக வேண்டி மன இரக்கம் வைத்துச் செய்கின்ற மஹா விளக்கமான பொருளாகிய என்னுடைய ஞானக்குறவஞ்சி என்னும் மஹரிபாவின் களஞ்சியத்தை, இந்தப் பூலோகத்தில் நல்ல வெளி ரங்கமாகச் சொல்லி விடுவதற்காக எந்தப் பொருளும் ஒரு கருமத்தை நினைத்து உதிப்பளவில் தன் நாட்டத்தை உயர்த்துவதற்கு முன்மை தனது ''அறுஷ்'' என்னும் கொலுவின் உத்தியோகஸ்தர் களான நான்கு அஞ்சிறு, அதாவது பூதங்களைக் கொண்டு உன்னத உஷ்ண ஆவியின் மார்க்கமாய் உதயமாகி வந்து நடத்தி விடுகின் றனே; அந்த மகத்துவப் பொருளானது, படைட்பினங்களின்

மன உதய நாட்டமேயன்றி எந்த விதத்திலும் வேறில்லவே யல்ல வென்று உறுதிகொண்டு, அந்த உறுதியையே என் ஞானக்குறவஞ் சிக்கு காவலாக முன்னிலையாக எற்படுத்தி நிற்பாட்டுகின்றேன்.

இதன் பின்னுல் வரக்கூடிய மஹதா நீய்யத்தின் துறையிலுள்ள ரகசிய அம்ஸங்களை, அன்பர்கள் தாங்கள் தமது சற்குருமார்களிடம் கற்றமட்டும் நில்லாமல், தன் மதியைக் கொண்டும் தூண்டியறிய வேண்டும். எப்படியும் இருதயத்தை ஒருமையளவில் திருப்பி என் உரையை நோக்கும் பட்சத்தில் நல்ல தெளிவாய் வஸ்து அகப்பட்டுக் கொள்ளும் என்பதை நான் வெகு தீவிரமாய் ஜனங்களுக்கு இரங்கிச் சொல்கின்றேன்.

ஞான திரவிய வுரை,

(நூல் முகம்)

சிங்கி, சிங்கா, என்றதன் சாராம்ஸமான விபரம்

வெளிப்படையான அர்த்தத்திற்கு இந்த நூலானது குறவஞ் சியாய் இருப்பதனுல் குறப்பெண் என்பது சிங்கியாகவும், விடை கேட்கக்கூடிய குறவனனவன் சிங்கனுகவும் பொருட்படும். ஞான விதமான அர்த்தமானது எப்படியென்றுல் சகலமான ஜீவாதி உலகங் களுக்கும் தாய்க் கருவியாகிய நூறுல் முஹம்மதிய்யா என்ற ஒளியா னது. சர்வஞான வியாபகியாக இருப்பதினுல் அதை சிங்கியாகக் கொண்டும், அதனிடத்தில் சிங்கனுகிய ஆதமி, தான் மறந்து விட்ட அமானித சிர்றுகளைப் பற்றி விடை கேட்கின்றன். அவ்வாறு கேட்கும் ஆதமியானவன் ஒரு தாலிபான சீஷனுகவும், அதற்கு விடை கூறும் முஹம்மதியா வென்னும் சர்வார்த்த சற்குரு மணியானது ஒரு காமி லான பீராகவும் வைத்துக் கூறப்படுகிறது. இவ்வாறு கூறப்படும் ஞான திரவியங்களை அள்ளிக் கொடுக்கும் அந்த அலியத்தான முஹம்மதென்பதே ஆஷிக்கான பெண்ணுகவும், அதை அன்பிற் பெற் றுக் கொள்ளக்கூடிய ஆதமி என்னும் மறதியுள்ள அடியான் என்பவன் மஹஷூக்காகிய மகனுகவும் வெள்ளிடை மலைபோல் தோன்றப் படும். இந்தப் பரியான அர்த்தத்தை வெளிப்படுத்திய தோடும்

நூலின் சாராம்ஸத்தை முடித்துக் கொண்டு இனி ஞானக் குறவஞ் சியின் ஞான திரவியமான மஹா அர்த்தத்தை, நமது மனித வர்க் கத்தார்களுக்கு உரிய பொருட் சாதனங்கள் யாவற்றையும் விட அதிகமான அரும் பெரும் பொருளாக உடைத்து விடுகிறேன். உள்ள நிறுள்ள விவேகவான்கள் பிடித்துக் கொள்வார்கள். மற்ற மந்த அறிவு அதாவது கலங்கலுள்ள அறிவுடைய ஈனர்கள், கிட்ட இருப் பவர்களைத்தெரியாத விழிகண் குருடனைப்போல் ஏமாந்துபோயிருந்து வாய்சன்னதம் பேசுவார்கள் என்றறியுங்கள்.

கண்ணிகள்.

1-வது திருப்பாடல்

ஆதிக்கு முன்ன ரநாதியு மென்னடி சிங்கி அது
அந்தக் கருங்குழி மூந்த விருளறை சிங்கா.

திரவிய வுரை.

வினு:—ஏ ஆஷிக்கானவளே! ஆதியாகிய இந்த ஆலம் இன் ஸானுக்கு முன்னுல்; அதாவது இந்த சரீரத்திற்கு முன்னுல் இதை ஸமைப்பித்துக் கொண்டு வந்ததான அனாதியாகிய பரஞ்சோதியா னது எதுவாக இருக்கும்? அதை நல்ல விபரப்படுத்திச் சொல்வாயாக.

விடை:—ஏ மஹஷூக்கானவனே! கேட்பாயாக. அதாகிறது ஆலம் அஜ்ஸாம் என்று சொல்லுகிறது. அதன் மக்ஸதானது, தாயு டைய கர்ப்பக் குவளரையாக இருக்கும் அதற்கு முந்தின அனாதி யென்பது, பூர்வீகமான அருவமாகிய இருளரையாக இருக்கிறது. அந்த இருளில் இருந்துதான் அனாசிறுகளான பூதம் ஐந்தும் வெளி யாகி உலகங்கள் உண்டாயின. இப்படிதான் நீஞரனத்தை உணர்ந்து பழகிக் கொள்ள வேண்டியது.

கருத்துரை

ஒரு விதையில் இருந்து பல பணருகளாக முளைத்தெழுந்த விருட்சமானது, ஆதியில் அந்த விதையில் மறைந்து இருளாக

இருந்ததைப்போல் ஆலத்தில்வெளியான மக்லூக்காத்தின் அந்தரங்க மானது இருளாகத்தான் இருந்ததென்று ஆராய்ந்து கொள்ளவும்.

2-வது திருப்பாடல்

ஆதியாய்வந்த வரும்பொரு ளேதடி சிங்கி அது
சோதியி லாதி சொரூபா யெழுந்தது சிங்கா.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! அப்படி உற்பத்தியான இந்த சரீரத்திற்கு ஆதி என்று எப்படி பேர் உண்டாயிற்று. அவ்விதம் என்ன அருமையான திவ்விய பொருளை அது சுமந்தது. அப்படி யேதும் சூட்சமம் உண்டாயிருந்தால் அதை மெதுவாக வெளியாக்கி விடவேண்டியது.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! நீ கேட்பது நியாயந்தான். ஆசை என்ற அக்கினி மூலாதாரத்தில் நின்றும் இருபத்தையாயிரம் நரம்பு ஸ்தானத்தின் வழியாக எழுந்து வரும்போதே அந்த விந்து நாதத்தின் உன்ரங்க வடிவமாக அந்த அக்னிக்குள்ளே முதன்மையான ஆத்மா என்னும் றூஹுல் குதுஸியானது மெதுவாக நுழையப்போய் தான் தாயுடைய உதிரப் பிண்டத்தைக் கொண்டு சிக உருவங்கொண் டது. அந்த உருவத்தை உண்டாக்கின தச்சனுகிறவன் அந்த ஆசை யாகிய 'றூஹுல் குதுஸி" யாகத்தானிருக்கும். ஆனதினுற்றான் அல் லாவும் குர்ஆன் ஷரீபில் அல்லது ஹதீது குதுஸியில் "கலக்குல் இன்ஸான அலா சூறத்திர் றகுமான்" என்று திருவுளம் பற்றியிருக் கின்றன். இதன் அர்த்தமாவது, மனிதனைப் படைக்கப்பட்டது அல்லா உடைய வடிவில் நின்றுமாக இருக்கும். இதை விபரிப்பது இதை விடக்கடப்பாகச் சொல்வதில் ஷரீஅத்தின் மரியாதையாகாது.

கருத்துரை

சூரிய வெயிலின் வெப்பத்தினாலும், தண்ணீரின் குளிர்ச்சி யாலும், ஆசையான மண்ணிடத்திற் புதைந்த ஒரு வித்தானது, எவ்விதம் தன் அசல் கொரூபத்தைக் காட்டிக் கொண்டு மூளைத்து

வெளியாகின்றதோ அதுபோல் ஒருமையாயிருந்த உஷ்ணம் என் னும் தன் ஆசையானது, தான் நினைத்த நாட்டத்தில் தானே நுழைந்து, மண்ணை இரத்தத்தில் புதைந்து; ஜடல வெப்பமும் இரத்தத்தின் குளிர்ச்சியும் கூடி முளைத்து தான் அர்வாஹில் இருந்த தன் அசலான சொரூபத்தில் வெளியாகின்றன. "அக்லு" என்னும் நுணுக்க புத்திமான்களுக்கு இன்னும் விவரிக்கவா வேண்டும். அப்படியும் வெள்ளையாய் உடைப்பது எம்மதத்திலும் அது சிலாக்கிய மில்லாத தோஷ மாகத்தான் இருக்கின்றது. ஆனதாலே இது நிரம் பவும் போதுமான மீஸ்தரிப்பான அர்த்தமாக இருக்கும்.

இனி மூன்றுவது கண்ணியின் அர்த்தம் என்ன வென்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

3-வது திருப்பாடல்

சோதியி லாதி சொரூபமான தெப்படி சிங்கி அது
வேதமாய் முப்பொரு ளொன்றாய் முடிந்தது சிங்கா.

திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் கூடி வந்துள்ள ஜோதியில் ஹக்தலாவின் வடிவம் எவ்வாறு வந்தது? தயை நல்ல விபரப் படுத்தி யருளவேண்டும்.

விடை:—மஹஷூக்கானவனே! வேதமென்ற அறிவு தன் நாட்ட மென்னும் உதிப்பிற் கலந்து நினைவாகி, நினைவு ஆசையுமாகி ஆகக் கூடி அறிவு உதிப்பு நினைவின் ஆசை என்ற மூன்று பொருளாகவும் பிரிந்து இஷ்கின் உபாதிகளால் கலந்து கொண்டு, அப்பால் அம் மூன்றும் ஒன்று கூடி இன்ஸான் என்ற சூக்கும சரீரத்தைக் கொண்டு வந்தது என்பதாம்.

கருத்துரை

ஆதியின் சொரூபம் என்பது இரண்டு நேத்ரங்களுக்கு இடையே ஆகனாங் கொண்டு இலங்குகிற "நூறுல் ஐன்" அல்லது காய கௌளைஸின் என்பது. அனைத்தான் தமிழ் ஞானிகள் வாலி மஹோன் மணி சன்றும், இன்ஸான் காமில்காரர், றூஹுல் குதுஸி என்

றும் வழங்குகிறார்கள். சொரூபம் என்று சுட்டிக் காட்டியதின் தாற்பரியமாவது, அந்த ஒளியானது வெளிப்படையான ஹவா என்னும் நித்திரையிலிருந்து உற்று நோக்குகிறவர்களுக்கு ஒரு சிறுகலகலப்பு பிரமாணம் தான் தெரியும் டி நித்திரையில் நின்றந் தெளிந்தவர்களான மஹான்களுக்கு அது ஹக்கான தன் அசல் சொரூபமாகத் தோன்றும் எதுவரையிலும் இன்ஸான் என்கிற மனித வர்க்கத்தான் தன்னைப் பற்றி யார் என்று விசாரனை செய்தலாகிய உள் உணர்ச்சி செய்யவில்லையோ, அது மட்டும் ஒவ்வொருவனும் கேவலப் அடிமைத் தனம் என்கிற ஈனப்போர்வையைக் கழற்றி யெறியாத பெண் சொரூபத்தில் தான் இருக்கின்றான். வஹ்தானியத் தென்னும் ஒன்றுபட்டு வஸ்துடன் வஸ்த்தாய் கலந்து விரவிக் கொள்ளும் வரையிலும் இன்ஸான் செய்கிற எவ்வித நிஷ்டைகளிலும் வெளியாகும் போதெல்லாம் அது பெண் சொரூபத்தில் தான் வெளியாகும்.

ஏ! நாட்டமுடைய ரஸ்தாவில் நடக்க வந்தவனே! இதற்கு உதாரணமாக ஒன்று வேண்டுமானால், மஹாத்மா ஹஸனுல் பஸரீ என்பவர் ருபிஅத்துல் பஸரியாவை விவாகஞ் செய்யக் கேட்டனுப்பின போது அந்த அம்மாள் மறுமொழியாக அவரிடம்போய் நீர் தற்போது பெண்ணாக இருக்கிறீரா? அல்லது ஆண்பாலாயிருக்கிறீரா? என்று கேட்டுவா! என்று சொல்லியதை நன்கு உணர்ச்சி செய்துபார்! தெளிய விளங்கும். அவ்விதம் இருக்கும் ஸ்திரீசொரூபந்தான் ஒருவன் மரணிக்குஞ் சமயம் அவனை மருட்டி நாதத்தைக் கழற்றிவிட்டுப்போய் விடுகிறது. அந்த நாதம் வெளிப்பட்டதும் சரீரம் பிணமாய் விடுகிறது இதனால் கருமம் எதை ஒட்டி நிற்கிற தென்பதை யூகித்துப்பார்! எண் ஜாண் சரீரத்திற்கும் சிரசே பிரதானம் என்பது எது? அதுதான் மூளையுடைய பீடமாகிய நேத்திரம் நேத்திரந்தான் பிரதான ஆத்மாவாகிய அந்த ''றூஹானீ குதுஸின்'' கொலுவிருக் கையாக ஏற்பட்டிருக்கிறது. அது மயங்கினால் சரீரம் மயங்கும். அது எழுந்தால் சரீரம் எழுந்து நடக்கும். அது ஏவினால் சகலமும் இந்த சரீர பூதியங்களான நட்ஸுகள் சரீர உறுப்புகளுக்கு ஏவும். ஆனதால் அது இன்ஸானுக்கு இன்றியமையாத அசல் வடிவமாக இருப்பதினாலே தான், அது

நாட்டம், ஓட்டம், ஆட்டம் இம் மூன்றுக்கும் இராஜ கருவியாயிருந்து தன் தொழிலே சர்வ ஒழுங்கு போல் நடத்திக் கொண்டு, இன்ஸான் என்னென்ன சமயங்களில் என்னென்ன கருமங்களை செய்கின்றானோ அவை முழுமையும் கணக் கெடுக்கின்றது. இதைதான் குணங்குடி மஸ்தான் தாயுமானவர் பாடலில் ''நேத்திர மிரண்டினும் நோய் விளங்குது நீடொளி போன்றது தேடரிதாகிய காத்திர மூன்று'' என்றும்; காட்டானே ஷெய்கு ஒலியவர்கள்.

வெண்பா

''கற்பித்தார் கற்பித்தார் கஷ்கஷியின் ப்ரமாணம்
கற்பித்தாரே எனக்குக் கற்பித்தார் – மெய்ப்பித்தார்
கைச்சீட்டுந்தந்தார் காசினி யெல்லாம்ஆள
* கைச்சீட்டுக்குள்ளே மயம்''

என்றும் தற்கலியார் ''இலங்குங் கருங்கடல் லக்கணத்தில் இருக்குர்வானீ வெள்ளை இடைகொண்டோடி, அலங்கும் தெளிவாகக் காண்பியாதலால் அதுதான் குதுஸியென றறிந்துகொளளே'' என்றும் திருவாய் மலர்ந்திருக்கின்றார்கள்.

4-வது திருப்பாடல்

முப்பொரு ளென்றுநீ முன்சொன்ன தாரடி சிங்கி அது
அப்பனு மாயு மானதையாம் நாமடா சிங்கா.

திரவிய உரை,

வினா:—அமா ஆஷிக்கானவளே! நீ இதற்கு முன் கூறியதில் மூன்று வகையான பொருள் என்று விவரித்துக் கொண்டு வந்தாயே அதன் முழுத்தாற்பரியந்தான் என்ன. அது சொரூபிக்குத் தன்மையில் ஆராக இருக்கலாம், அதை வெளிப்படுத்துவாயாக.

விடை:—மஹ்ஷிக்கானவனே! அதாகிறது; மேற் கூறிய இஷ்க்கென்னும் ஆசைக்குக் காரணமாக இருந்த நமது தகப்ப

---

* மைச்சீட்டுக்குள்ளே என்பது நேத்திரத்தின் கருப்படலத்தின் உள்ளே என்று பொருள். மயம் என்பது - றூஹானீ குதுஸியாகிய உஜூது, அதாவது ''தான்'' என்கிறதற்குறிய ஒளிவு என்று பொருள் உணர்க.

னும் அப்பால் அத்த ஆசையென்ற வித்து நாதமானது சென்று குடியிருந்து விகோத்து உருவெடுத்ததற்குக் காரணமாக இருந்த நமது தாயானவளும், இவைகள் இரண்டும் கலந்து சம்பந்தப்பட்டு விளைந்து இன்ஸ்ரான் கோலத்துடன் வெளி வந்திருக்கின்ற ஆதமி என்ற தூல சரீரியான நாமமாக இருக்கின்றோம் என்பதாம்.

கருத்துரை

முச்சுடர் என்று ஞான வாக்கள் சொல்லியதன் கருத்தும் இது தான். முச்சுடர் என்றால் மூன்று ஒளிவு என்று பொருள். அது இன்னொரு அர்த்தத்தில், மூன்று உயிர் என்றுஞ் சொல்லலாம். மூன்று உயிர் என்றால் தகப்பன் ஒரு உயிர், தாய் ஒரு உயிர், இவை இரண்டின் மூலமாக ஜனித்து வந்த சிசு ஒரு உயிர் ஆக மூன்று உயிர். இதுவே முச்சுடர் என்று ரய்மியமாய் வழங்கிற்று. இதன் முழு நிச்சயக் கருத்தும் ஆசிரியர் கீழே சொல்லப்படுகிற சில குறிப்பான கவிதைகளில் புத்திமான்கள் இலேசாகவே விளங்கியறிய முடியும். இதைப்பற்றி சில ஷெய்குமார் தமது முரீதுகளுக்கு முச்சுடர் என்பது அல்லா, முஹம்மது, ஆதம் என்று சொல்லி வைப்பார்கள். அப்படியும் அது இப்படித்தான் சரி அர்த்தம் கொள்ளும். வேறே எவ்விதத்திலும் மாற்றமாகப் பொருள் கூற இடந்தராது.

ஞான வெட்டியானில் அந்தவூர் "முப்பாலும் பாழாய் முடிவிலொரு சூனியமாய் அப்பாழும் பாழென்றறி." என்ற தென்னவென்றால்:—தானான நினைவு உதிப்பில் புகுந்து உதயமாகி, உன்னலாகி, ஆசையாகி நாதமாயிற்றே, அந்த மூன்று கிருத்தியங்களும் உபாதியால் பாழ்பட்டு அதாவது பனுவாகி முடிவில் மீதியாயிருந்த தூல சரீரமானது சூனியமான இந்த உலகப்பாழில் வந்திருக்கிறது. இதுவும் வழிதெரிந்து தப்பித்துக் கொள்ளாத பட்சத்தில் வீண் அபத்தமாய் கைசேதத்துடன் பாழ் பட்டுப் போய், முன் அசலாய் இருந்த குறிப்பற்ற பூதிய வாயில் தோறும் போய், ரஹித்துக் கொள்ளும் என்பதாம். ஆகையேதே மனித ஜனனமெடுத்து வந்த ஒவ்வொருவனும் தன்னை விசாரணை செய்வதில் தன் அறிவைத் தன்னளவில் தனிமையாகவே நிற்பாட்டி நட

வடிக்கை நடத்திக் கொண்டு நானவஞ்ஞ வேண்டியது பெரியதோர் அவசியமான கடமையாக இருக்கிறது. இதைப்பற்றி "சூத்திரமாகிய தோணி கமிழ முன் சுக்கானை நேர்படுத்து இக்கணமே சொன்னேன்" என்று நமது மஹானுகிய மஸ்தான் அவர்களும் ஜனங்களுக்கு வற்புறுத்தியிருக்கிறார்கள் அறிவையுடைய மஹான்கள் என்னமோ பிதற்றியிருக்கின்றார்கள்; நமக்கென்ன நமது வேலையென்னமோ நல்ல காரியத்துடன் பார்ப்போம் என்று மனிதன் தன்னைத் தவறவிட்டு அஞ்ஞானப் புலியானது பதிவு பார்த்துக் கொண்டலைகின்ற காளகத்திற் குள்ளே மருண்டுபோய் திரிகின்றான். அகஸ்மாத்தாய் ஒரு நானிகி புலிபிடித்தால் அப்போது முழிப்பான். முழித்ததனால் ஒரு உதவுயுங் காணமாட்டான். இப்படிப்பட்டவன் பாழாய்ப் போவதே நிச்சயமென்பதாம்.

5-வது திருப்பாடல்

எப்படி யுலகத்தி லிப்படி யுருவானேம் சிங்ரீ அத்து
அப்பன் தன்னட்புக் கொப்பிய தாயாலே சிங்கா.

திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த உலகத்தின் கண்ணே நாம் இந்த தூல சரீரத்தை எந்தவிதமான காரணத்தைக் கொண்டு உருவெடுத்தோம்! அதன் விபரத்தை தெளிவாகச் சொல்ல வேண்டியது.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! நமது தகப்பனுடைய இந்திரியமாகிய சுக்கிலத் துளியை தன்பால் பொறுப்பாக ஒப்புக் கொண்ட நமது தாயாலே இந்த சொரூபத்தை எடுத்துக் கொண்டோம் என்பதாம்.

கருத்துரை

தகப்பனது சுக்கிலமாத்திரம் தனியே யிருந்ததாலும் இந்த சரீரம் உற்பத்தியாகாது. அத்துடன் தாயின் சுரோணித்தும் கலந்து இரண்டும் ஒன்று கூடி அக்னி கலையுடன் திரண்டு உதிர மண்டலத்தில் தங்கி அவயவங்கள் உண்டாயிற்று. உதர

ரணம், வெறும் மழை மாத்திரம் பெய்யும் பட்சத்தில் அதனால் ஒரு புற்பூண்டும் எழுந்து நிற்காது. அதை மண்ணுனது தன்னிடம் தங்கிக் கொள்ள சம்மதித்தாலே தான் அதுவும் இதுவுட் ஒன்று சேர்ந்து மூன்றுவதான அக்னியென்னும் சூரிய வெப்பத்தின் சிபத்தைக் கொண்டும் எல்லாவித விளை பொருளும் முளைத் தெழுந்து உலகப் பிரயோஜன மாயிற்று. இந்த தூல உடம்பானது உருவந்திரள்கிறதற்குக் காரண கருவியாயிருந்த தாயின் உதிரமான அசுத்தத் தொடக்கில் கிடந்து முழு ஜடலமும் தூடக்கே உருவாக விளைந்து இலோகவெளியாகி யிருக்கின்றன். இதற்த உதாரணமாக திருக்குர்ஆன் ஷரீபில் ''மானிட வர்க்கங்களே? நீங்கள் சில வெளிப் படையான தவங்களை மாத்திரஞ் செய்துவிட்டு மோட்ச விடாகிய சுவர்க்கத்திற் குள் புகுந்து விடலாமென்று நினைக்கின்றீர்களா? உங்கள் உருவாகிய அந்தத்துடக்கை நன்கு அறக்கழுவி துப்புறவு செய்து வந்தாலெழிய அப்படியாகாது என்று தேவகட்டளை சொல்லியிருக்கிறது. ஆனதால் தான் மனிதனுக்கு மறந்தவன் என்ற பெயருங் கொடுக்கப்பட்டது. அதற்கு சிகிச்சையானது, ஒரு மந்திரமும் ஒரு மருந்தும், ஒரு தந்திரமுமாக இருக்கின்றது. அது என்னவென்றால் மந்திர மென்பது (ஹூ) என்ற உச்சரிப்பு, மருந்தென்பது அந்த உச்சரிப்புடனே நினைவை ஒரே கூர்ய சுழிமுனைப் பார்வையில் நிலைக்க வைத்தல். தந்திரமென்பது அப்படி நிறுத்திய நினைவு இடவலம் பிரிந்து ஓடி விடாமல் அதிலேயே கவனமாக இருத்தல் என்பதாம்.

6-வது திருப்பாடல்

பரா பரத்தினிற் பஞ்சவர்ன மேதுசிங்கி அது
வேராகித் தூரான விந்து நிறமடா சிங்கா.

திரவிய உரை

வினா—ஆமா ஆஷிக்கானவனே! இந்த ஜடலத்தின் அகன்ற வெளியாகிய நேத்திரத்தின் கண்ணே ஐந்து விதநிறங்கள் இருக்

கின்றனவே; அவைகள் எக் காரணத்தினால் உண்டாயின. அந்த விபரத்தை நல்ல தெளிவு பெறச் சொல்ல வேண்டும்.

விடை:—கேள் மஹஷூமக்கானவனே! அது தான் ஆதியாக வந்து கடைசி வரையிலும் ஜடலத்துடன் கலந்து நடத்துகின்ற தே! அந்த வல்லமைப் பொருளான நாதவிந்துவினுடைய சுய குணகுணங்களிலுண்டான வர்ணங்களாக இருக்கும் என்பதாம்.

கருத்துரை.

தானுயிருந்த நாட்டமானது ஒரு உதிப்பை நிர்ணயித்து ஆசையை வெளிப்படுத்தியது; அதுவே ஆகாயமாகவும் நீல நிறங் கொண்டது. அப்படி எழுந்த ஆகாயமானது ஆசையில் கலந்து உஷ்ணமாகிய நெருப்பானது கருப்பு நிறங் கொண்டது; அவ்விதம் நெருப்பானது ஆவியாகி அசைவு பெற்றுள்ள உதான வாய்வானது காற்றுகி பச்சை நிறங் கொண்டது. அவ்வாறு காற்றுனது குளிர்ச்சியைப் பெற்று சுத்த ஜலமாகி சிவப்பு நிறங் கொண்டது. அவ்விதம் ஜலமாகியபின் நுரைத்து பல அணுக்களின் சம்பந்தமாகி மண்ணுகி வெண்மை நிறங் கொண்டது. அவ்விதம் மண்ணுகிய பூதியமானது தன்னில் நின்றுப் பலவித சிருஷ்டிகளை நிர்ணயித்து தன்னிறத்துடன் கூடிய இந்திரியத்தைத் திரளச் செய்தது. அவ்விந்திரிய மானது இந்த சரீரமாய் உருவெடுத்துக் கடைசியில் தனது முன் அவதார பூதியங்களான ஐந்து வித நிறங்களையும் நல்ல பயிரங்க கோலத்துடன் காண்பித்துக் கொண்டு சரீரத்தின் பிரதான ஆத்துமாவாக நேத்ர பீடத்தில் நீலை நடத்தி வருகிறது. அதைத் தான் ஞானவான்களெல்லாம் நுஹூல் குதுஸி என்றும், ஜனுல் எகீனென்றும் ஒருமித்துக் கூறியிருக்கின்றார்கள். அதைப் பற்றி அறிவிக்கத்தான், இலட்சக் கணக்கான தீர்க்கதரிசிகளான நபிமார்களையும், ஆயன்களான றஸூல் மார்களையும், வேதாகமங்களையும், கோடிக்கணக்கான தத்துவ சாஸ்திரங்களையும், மனித வர்க்கங்களுக் கிடையில் அநேகானேகம் எம்பினைப் பிரமாணத்துடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. இதன் சூட்சம் விதங்களைப் பற்றி ஆசிரியர் கீழே நல்ல தெளிவாய் சொல்லிக் கொண்டு வருவதைக் கவனியுங்கள் என்பதாம்.

7-8 வது திருப்பாடல்

ஒன்றுக்கு மேவர்க ளுண்டான தெப்படி சிங்கி அது
வொன்றேடே யொன்றுக வோடி யினைந்தது சிங்கா
மூலக் குகைக்குள் ளே மூச்சுட ரேதடி சிங்கி அது
நாதத்தி லேப்பூத மன்பா யுதித்தது சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்திற்கு அடிமூல மாகிய கீழாஸனத்தின் கண்ணே மூச்சுடருடைய வல்லமையானது விதை சம்பந்தமாக நிற்கின்றதே அது எப்படி வந்து விட்டது? அதன் விபரத்தைச் சொல்வாயாக.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதன் ரகசியமாவது மனுஷீக இந்திரியமாகிய விந்து நாதத்தின் உள்ளே ஆகாயம் நெருப்பு, காற்று, தண்ணீர், மண் என்ற ஐந்து பூதியங்களும் குடி புகுந்ததினால் அவ்விந்திரியத்தின் அஸ்திபாரம் மூலாதார மாகை யால் அதில் தான் தாய் தந்தை நாம் என்னும் மூன்று சுடருக்க சுயம்பாகவே அமைந்து கொண்டது வாஸ்தவமே என்பதாம்.

கருத்துரை

ஆலம் அறுவாஹில் ஒருவன் எக்கோலமான ஆவியில் உற்பன மாய் இருந்தானே! அதே பிரகாரம் அவன் தகப்பன் தாயுடைய ஆவியையும் அந்த ஆவியுடன் சம்மந்தப்படுத்தி வைத்திருந்தது. அக் காரணத்தினுற்றுன் தான் என்ற ஆவியானது பூதங்கள் அதாவது ஊண் முதலியவற்றில் புகுந்து மற்ற இரண்டு ஆவிகளான தாய் தகப்பன் மார்களுடைய சரீரத்துடன் கலந்து உதாரமாகிப் பிறகு விந்தாய் திரண்டு அப்பால் நாதம் என்னும் சுடரொளியாகிய மோகப் பல்லக்கில் ஏறிக்கொண்டு இந்த உலகத்தார் ஒருவருக்குந் தெரியாமல் பிதாவின் ரகசியமண்டலம் சென்று இந்த மாநுடம் எனுகின்ற வேஷத்தைத் தரித்து வெளியாகினுன் (உதாரணம்) கோட்டாற்று ஞானேசர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருக்கின்ற அம்மானே ஆயிரத்தைப்பார் அதில்:—

ஊரார் அறியாமல் ஒருத்தர் கண் காணுமல்
ஊரினடுவேவந் தொளித்திருந்தான் அம்மானே
ஊரினடுவேவந் தொளித்திருந்தா னேயாகில்
பேருமறியாமல் பிறந்தானே அம்மானே
பிறந்தல்லோ லோகமெல்லாம் பிறக்கின்ருனம்மானே

என்று பாடியிருக்கும் ஞானப்புதையலே மிக ஊன்றிபார் அப்போது. தான் முச்சுடர் இன்னது இனியது என்று பட்டப் பகல் போல் விளங்குப். அதுவேயன்றி தலைப்பாகையைப் பெரியதாய்க் கட்டி நீளமணி பிடித்து பகல் வேஷம் போட்டுக் கொண்டு வரும் கள்ளப் பயல்களைக் கேட்டால் அவன் என்ன சொல்வான். எதையோ ஒரு இஸ்மைச் சொல்வான். அது ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? உதவாதே. அதுபோல் அவன் இஸ்மானது உன் துடக்கைக்கழுவ சக்தி யுடையதாகுமா? ஆகாது. அல்லாவுடைய ரகசியமாகிய மஅரி பாவானது தென்னை மரத்திலுண்டான இளநீர்க் குள்ளே எவ்விதம் தண்ணீர் வந்து கூடிற்றே அவ்விதம் ஒவ்வொரு இன்ஸானுக்கும் விதி மதிகளின் புறத்தால் தானே உதயமாக வேண்டும். அவ்விதம் உதயமாகினதால் உணர்ச்சி செய்யும் ஞானந்தான் அஸ்திபாரமான நறசாதனமாக இருக்கும் என்பதே.

9-வது திருப்பாடல்

மூலக் குகையென்னுங் கோட்டைக் கரசன்யார் சிங்கி அது
முப்பொரு ளொன்றுய் முடிந்த நினைவடா சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! நீ முன் சொன்ன மூலக்கு கை யென்றும் இந்த சரீரக் கோட்டைக்கு ஒரு அரசன் வேண் டுமே! அவன் யாராயிருக்கலாம். அதை இன்னது தான் என்று நல்ல தீர்மானமாகச் சொல்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது நான் முன் பாட்டில் சொல்லி வந்தேனே அந்த உஜூதே கிதம்களான மூன்று பொருள்களும் ஒன்று சேர்ந்த நினை வென்னும் ஹக்கானியாக

இருக்கும். அதுதான் சகல உலக சிருஷ்டிகளையும் உண்டாக்கி வஸ்துகள் அடங்கலையும் தீர்மானமாக நடத்தாட்டிக்கொண்டு வருகின்றது. அதுதான் முப்பொருளின் முடிவில் எற்படுகிற மிச்சமாக இருக்கிறது எப்பதாம்.

கருத்துரை.

மூன்று பொருள்களும் ஒன்றுய்ச் சேர்ந்து நினைவானது எப்படி என்றால், ஆகாரமானது உதிரமாகி, உதிரமானது நாதமாகி நாதமானது நினைவாகினது என்று நல்லுணர்ச்சி செய்து கொள்ள வேண்டியது. இதுதான் தீர்மானமான முடிவு. அப்பால் அது இன்ஸான் என்ற சரீரக் கோட்டைக்கு அரசன் என்று கூறியதாவது, அது இராஜ கருவியாகிய உஷ்ண நாடியாக பித்தத்துடன் கலந்து நிற்பதனுலே அதுவே தாமரைக்காய் என்னும் மாங்காயில் அதாவது குர்ஸினிடத்தில் உதயமாகி அப்பால் அறுஷென்னும் நேத்ரத்தில் நடுவே சிறிதான தோற்றமாக இலங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் இந்த ஜடலத்தில பிரதான வடிவமாக இருந்து அதன்பின் மக்களான பூத நப்ஸுகளே தன் பிரதி நிதிகளாக வைத்து நடத்திக் கொண்டு வருகிறது. அதற்கும் மூலாதாரமாகிய உந்திக் கமலத்திற்கும் ஒரே குழாய் நீண்டு இடது விலாப் பக்கமாக வளைத்து வட்ட மிட்டுக்கொண்டு வியாபித்திருக்கின்றது. அதன் வழியாகத் தான அந்த பிரதான ஆத்மாவானது ஆதியில் நுழைந்து அவ்வழியாகவே நேத்திரத்திற்குப் போயிற்று. அதுதன் பின் மக்களான பூதநப்ஸுகளைப் பார்வையிட வர நாடிற்றுனுல் சரீரம் மயங்கி நித்திரை செய்யும். அது அந்தக் குழாய் வழியாக எந்த எந்த நப்ஸுகளைச் சந்திக்கின்றதோ அந்தவித மெல்லாவற்றையும இன்ஸான் என்னும நப்ஸு அம்மாருவானது ஸ்மரணையில் சாபித மாய்க்காணும். அதுதான் சொர்ப்பனம் அல்லது கனவு என்று சொல்லப்படும். இதன் ரஸ்தாவில் வந்து நடக்கின்றவனே! நீ ஆண்மகனுக இருப்பையேயானுல் அறிவை நன்ருய்த் தீட்டிக் கூர்மைப் படுத்தி வைத்துக் கொள். உலக வாசிகளின் மருட்டான பகட்டைப் ஏறிட்டுப் பாராதே. விலகி நட வென்பதே.

10-வது திருப்பாடல்

மூலக் கிழங்கு முனைத்திட மெவ்விடஞ் சிங்கி
நாதத்திலான நடுநிலை யல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினு:—ஓமா ஆஷிக்கானவளே! நீ மேற்கூறிய மூலாதாரத்தின் அஸ்தியான வேர்க்கிழங்கானது முளைத்து எழுந்த ஸ்தலமானது எதுவாக இருக்கும். அதை நல்ல தீர்மானமாகச் சொல்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! இந்திரியத்தின் காரணமாக வெளி வந்த ஸ்தூல சரீரத்தின் நடு மத்திய நிலையான கண்ணுக இருக்கும் அதுதான் நடு நிலை யென்று ஞானவான்கள் சொல்லிக்கொண்டு போனது என்பதாம்.

கருத்துரை

மூலாதாரத்தின் வேர்க்கிழங்கென்றது குருநாடி என்கிற பிரதான உஷ்ணவாய்வாக இருக்கும். அதாவது இரத்தாருட்டியமாய் நாதவிந்துவின் குட்சம வெப்பமாய் ப்ரகாசித்து, மூளை யென்ற அருவின் இடமாக ஒளிசெய்து, அறிவுக்கும் அறிவாக நேத்திரத்தின் உள்ளே இலங்கின்ற பரஞ்சோதி எதுவோ அதுவாக இருக்கும் அது எக்காலமும் நின்று ஜொலிக்கின்ற இடம் நேத்ரமாக இருப்பதினுலே, மஹாத்மா சாஹிபவர்களே அதை கண் என்று சொன்னுல், ஞானத்தெளிவு போதாத எளிய ஜனங்களின் சொற்ப அறிவுக்கு எட்டாமல் நழுவி விடும் என்று தெரிந்து அப்படிச் சொல்வதை மறைத்து அறிவுடைய கனவான்களுக்கேற்கும்படியாக "நடு நிலை" என்று நிமிட்டிக் காட்டினுர்கள். அரசன் நகருக்கு நடுவாக இருப்பது போல அந்த உஷ்ண நாடி என்னும் உஜூதானது சரீரத்தின் அரச அங்கமான கண்ணிடத்து நிற்கின்றது. விதியுள்ள அன்பர்கள் தெளிந்தறிந்து சாட்சி சொல்லி ஈமானே உறுதிப்படுத்திக் காமிலாகிக் கொள்வார்கள் என்பதாம்.

11-வது திருப்பாடல்

முன்னே முனையாய் முளைத்திட மெவ்விடப் சிங்கி அது
மூளை முனையிரு கண்ணிக ளல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! நீ முன் சொன்ன அந்த மூலாதார அஸ்தியென்னும் பரஞ்சோதியானது, ஆதியில் அதாவது கருப்பத்தில் சிசுவு உற்பத்தியாகுந் துவக்கத்திலேயே யேருன்றி மூளைத்த ஆதிஸ்தலம் என்பது ஒன்று வேண்டீம! அது எதுதான் விளக்கிச் சொல்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாகிறது மூளையின் அஸ்திவாரமாகிய சுழிமுனை அதாவது மூக்கந் தண்டின் "நுனை" யைப் பிடித்து முனையில் அஸ்திவாரம் போட்டு, அங்கிருந்து கண்களுக்குச் சித்திரப்படம் வரைந்து அதன் வழியாக மற்ற எல்லா அவயங்களையும் சமைத்து, மேற்சொல்லப்பட்ட கண்ணிடத்திலேயே சதாவும் நின்று வெளிச்சம் செய்கின்றது, என்பதாம்.

கருத்துரை.

விந்துநாதமானது தன் அசலான நிறமாகிய வெண்மையை மூளையாக ஸ்திரப்படுத்தி, அதன் வலுவிலேயே தன் சுதுறத்தான தஜல்லியாத்தெனும் அறிவை நுழைத்து, அதற்கு றகுமத் தென்னும் நாமஞ் சூட்டி அங்கிருந்து பிரதா— கூப்பாகிய சுவாச மண்டலமாகிய சுழிமுனையின் ஆதாரத்திலுலே இருதயம் வந்து காரியஸ்தர்களான பூதநப்ஸுகளை ஆஞ்ஞாபித்து, அதாவது அதிகாரஞ் செய்து, கொண்டு, இரு கண்களில் ஒளித்தும் ஒளியாமலும் இலங்கிக் கொண்டிருக்கின்றது. அதனுடைய காந்தியான வெளிச்சந்தான் சரீரத்தின் நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தெட்டு இடகலை, பிங்கலை யென்னும் சுவாச நரம்பு ஸ்தானங்களுக்கும் உதிரவோட்டங்களுக்கும் ஊக்கமும் வல்லமையுங் கொடுத்து நிலைக்கச் செய்கின்றது. இதுதான் அல்லாஹ் என்னும் திருநாமத்தாடனே இந்தப் பெரிய உலகமெல்லாம் சேர் வழங்கிக் கொண்டு வருகின்றது. இன்னும் இதற்கு ஆயிரம் விதமான சுயகுணங்கள் உண்டு அதில் ஒவ்வொரு குணங்களுக்கும் ஒவ்வொரு பெயர்களுமுண்டு. நாலாவது வசனத்தில் ஜொன்மிக்கின்ற சூரியனுடைய ஒளக்காந்தியானது எப்படி உலகத்தின் பரந்த வெளிகளெல்லாம் வந்து உஷ்ணஞ் செய்து துலக்குகின்றதோ! அப்படி சரீரத்தின்

நாலாவது வானம். அதாவது:—வாய் ஒன்று, அதற்கு மேல் மூக்கு இரண்டு, அதற்கு மேல் செவி மூன்று, அதற்கு மேல் கண் நாலு, ஆகிய நாலாவது வானமாகிய நேத்திரத்தில் நின்றும் ஜொன்மித்து நிற்கின்ற சுயம்பானது, சரீரமாகிய பதினெண்ணுயிரம் ஆலமெல்லாம் பரந்து விசி பேரொளி செய்கின்றது என்று இந்த தெளிவுகளால் புத்திமான்கள் நல்லுணர்ச்சி செய்து கொள்ளவேண்டியது.

"எத்தொழிலைச் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும்,
முத்தர் மனமிருக்கும் மோனத்தே", என்று நாதர்கள் அறிவித்திருக்கின்றன சயிக்கினையை உணர்ந்துபார்! என்பதாம்.

12-வது திருப்பாடல்

பின்னே யுகுவாய் முடிந்திட மெவ்விடம் சிங்கி அது
பெண்ணணு மாகப் பிறந்த தலமடா சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் வந்த உஜூதானது, கடைசியாக இந்த சரீரத்தை யெடுத்து முடிவாகிப் போன இடமானது எது? அவை இன்ன தென்று தெளியச் சொல்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது, நமது தாயுடைய உதிரக்குழியில் ஆண் சொரூபமென்றும், பெண் சொரூபமென்றும் சமைந்து கொண்டதே அந்த இடமாக இருக்கும் என்பதாம்.

கருத்துரை

உஜூது என்பது விந்து நாதத்தில் கவந்திருந்த உஷ்ணஜோதியாக இருக்கும் அந்த உஜூதானது இந்தஸ்தூலத்தை உற்பத்தி செய்து முடிப்பதற்காக பலவிதமாய் உட்கொண்ட உணவுகளே இரத்தமாகி, அவ்விரத்தம் விந்துநாதமாகி, அவ்விந்து நாதம் சரீரமாகி, அப்பால் தான் என்ற வல்லமையை சரீரமாதிக்கமும் வியாபித்துக் கொண்டு, பிணக்கென்னும் இருவினையைக் காட்டிவிட்டு தன்னை மறைத்துக் கொண்டது. இதுதான் முடிந்த தென்பதற்கு உண்மையான அர்த்தமாகும். அன்றி அற்றுப்போனது

என்று பொருள் படுத்தும் பட்சத்தில், அது பொய்யான குபிரியத்தான அர்த்தத்தைக் காட்டி வழி கெடுத்துவிடும் என்று அறியவும். பெண் சொரூபம் ஆண் சொரூபம் சமைந்த இடம் என்று மஹாத்மா சாகிப வர்கள் திருவாய் மலர்ந்த சூட்சுமமாவது வயிற்றில் சிசுவு கருத்தரித்த கெர்ப்பப் பையை, அதுதான் கலிமா பூரணமான தோர் திவ்விய ரகசிய ஸ்தலம். அதை உலகத்தார்கள் மாக்கொடி யென்று சொல் வார்கள். அதில் தான் பதினெண்ணூயிரம் ஆலங்களும் இருக்கின்றது. அதன் விஸ்தரிப்பைப்பற்றி ஆசிரியர் அவர்கள் கீழே சொல்லுகிறார்கள் காணுங்கள்! என்பதாம்.

13-வது திருப்பாடல்

இந்த வுடலுக்கு வேரென்ன தூரென்னசிங்கி அது
இந்த வுடலுக் குயிராதி மூலமே சிங்கா;

திரவிய உரை

விஞ:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரதிற்கு வேர் ஒன்று இருக்கவேண்டுமே! அது என்ன? வேரிருந்தால் துரொன்று இருக்கவேண்டுமே! அது என்ன? அதை நல்ல தெளிவாக விளக்கிச் சொல்வாயாக.

விடை:—கேளடா மஹஷூக்கானவனே! அதாவது இந்த சரீரத்தின் பிரதான ஆத்மாவாகிய றூஹுல் குதுஸி என்னும் உஷ்ண ராஜகருவியே வேராகவும், இந்த சரீரத்தின் முதன்மையான இந்திரிய ஸ்தானமான மூலாதார மானதே தூராகவும் இருக்கின்றது என்பதாம்

கருத்துரை.

றூஹு, றூஹானி என்ற இரண்டு ஆத்மாக்கள் இந்த சரீ ரத்தில் நடைபெறுகின்றது. அஃதெவ்வித மெனில், உலகத்தில் சூரியன், சந்திரன் என்று இரண்டு ஒளிகள் விளங்குவது போல் கருமத்தில் றூஹு சூரியனுகவும், றூஹானி சந்திரனுகவும் இருக் கின்றன. விபரம் சூரியனுனது வலது நேத்திர வொளிவாக நின்று வலம்புரியாகிய வலது நாசியின் துவாரத்தின் வழியாக பிங்கலை, யென்னும் சுவாசந்தைப் பற்றிப் பிடித்திழுக்கின்றது. சந்திரனு

னது இடது நேத்திரத்தில் நின்று இடம்புரியான இடது நாசியின் துவாரத்தின் வழியாக இடகலை யென்னும் சுவாசத்தைப் பிடித்தி ழுத்து விடுகின்றது. இவைகள் இரண்டும் எப்போது தமது குது றத்துனை அதாவது தனது வல்லமையைக் கொண்டு அந்த இட கலை, பிங்கலைகளான சுவாசங்களை இழுத்து விடுகிறதை விட்டொ ழிக்கின்றனவோ அப்போழுதே ஜடலம் அடித்து விழுந்து விடும். ஆனதினுலேதான் மஹாத்மா ஸாஹிபவர்கள் அவைகள் இரண் டையும், இந்த மானுடத்திற்கு வேர்தூர்களாகச் சொல்லினர்கள்.

இப்படியாக ஒவ்வொரு மனிதனும் தான் என்ற வல்லமைப் பொருளான இவ்விரண்டில் ஒன்றுகிய றூஹானியை, அதாவது நப்ஸை அம்மாருவைப் பலவாக்கி, அதாவது இல்லாமையாக்கி, மற்றென்றுகிய றூஹ் என்பதை அதாவது நப்ஸை முத்மஇன்னுவை இன்னும் விபரம், உஷ்ண காந்தி இன்னும் விபரம், தான் என்ற நினைவை காயும் தாயுமாக நிலைபாடாக ஸ்திரப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டு அதன் தஸ்தாவேஜுகளான உறுதி, பருத்தறிவு, வைராக்கியம், கியானம், இவைகளுடன் வெளி வந்திருக்கின்றன். வந்தவுடன் அந்த அரும் பெரும் காரியாதிகளை யெல்லாம் மறந்து விட்டு உலகத்தில் செய்கிற வேலையை விட்டு சிறங்கு சொறிந்துக் கொண்டிருக்கின்றன் என்று சொல்லும் பழமொழிபோல், ஒவ்வொரு புண்யவான்களும் ஏக தடபுடலாய் தன்னை மறந்து அலைகிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது தெரியுமா? இறுதியில் தெரிந்து பெருத்த கைசேதப் படுவார்கள். என்னையும் என்னுடைய இந்த அருமையான உலகப் பேரபகாரமான திரவிய வுரையையும் நினைத்து தாம் உண ராது கைதவர விட்டதற்காக கண்ணீர் விடுவார்கள். அப்போது ஒரு பிரயோசனமும் அடையவே மாட்டார்கள் என்பதாம்.

சூரியனை நிலைபடுத்தி சந்திரனைப் படுத்திக்கொள், என்ற கருத்துக்கு விபரம் கேட்பாரு முண்டு. அதற்கு உதாரணம் சந்திரன் தன் சொரூபம் தெரியும்படியாக உலகமெல்லாம் தெரிவித்து அப்பால் சிறிது சிறிதாக மங்கி இறுதியில் அறவேஇல்லாமல் தேய்ந்து அழிந்து போவதை ஊன்றிக் கவனித்துப் பார்.

14-வது திருப்பாடல்

இந்த வுடலுக் குயிர்வந்த தெப்படி சிங்கி அது
தொந்தி நடுக்குழி தொப்பூழ் வழியடா சிங்கா.

திரவிய உரை, கருத்துரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் பெரிதான ரகசிய விஞ்ஞைத்துடன் சமைந்த இந்த நூதன சரீரத்திற் குள்ளே றூஹான அந்தப் பிரதான ஆத்மாவானது என்னென்ன விதமாக எந்தவழியாக வந்தது. அதைத் துல்லியமாகச் சொல்லியருள வேண்டியது.

விடை:—ஏ மஹஷூக்கானவனே! அதாவது பாரிய நூதன மானதோர் ரகஸியபாதை தான். அதைச் சொல்லுகிறேன் அறிந்து கொள். இந்த சரீரத்தை உண்டாக்குவதற்கு முன்னதாக விந்து நாதத்தில் கலந்து கொண்டு வந்த அந்த நாதஞானவன், தாயுடைய நேத்ர ஜோதியாகக் கலந்து தன் வடிவம் என்ற பிளாஜை அதாவது சித்ரக் கண்ணாடியை கர்ப்பக் குவளரையில் எடுத்துக் காண்பித்து, றூஹானி யென்னும் விந்தானது அந்தப் பிளாஜைப் பார்த்து ஜடலத்தின் அங்கங்களை ஒன்றொன்றுக தாயின் துடக்கின் உதரத்தின் ஆதரவால் உண்டாக்கிற்று. அப்படி உண்டாக்கும் காரியஸ்தனுகிய றூஹானிக்கு ஆண் என்றும், பெண் என்றும் ஆக்க சக்தி இல்லாத தினாலே அடிக்கடி தன் காரியஸ்தனுகிய றூஹ் என்னும் எஜமானைக் கேட்டுச் செய்யும் பொருட்டு அவனுடைய ஆசனமாகிய நேத்திரத்திற்கும் தன்னுடைய மகாமாகிய மாங்காய்க்கும் இடையில் மாக்கொடி யென்னும் ஒரு தந்திக் குழாயை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலமாய் நடவடிக்கை நடத்தி வந்தது. கடைசியாக விதி, மதி, இரணம், மரணம், தொழில், பண்பு, வேற்றுமை யாதிய இலட்சணுதிகளை யெல்லாம் சரிவரச் செய்து அமைத்த வுடன், தானிருக்கும் ஸ்தானத்தில் றூஹானி அமர்ந்து கொண்டது.

அப்போழுதே சிசுவுக்கு இடகலையான சுவாசம் வந்து சற்று நெளிச்சலுண்டாகும். அப்போது தாள் கர்ப்பவதியான தாயான வளுக்கு சற்றுப் பிரஸவ நோயானது தோன்றும். அப்பால் மாறிப்

போவதும் மறுபடி தோன்றுவது மான மயக்கம் வரும். இப்படியாகும் வேளையில் "தான்" என்றறூஹால் குதுஸி யென்னும் றப்பானியாவானது, அதாவது அறிவானது அந்த மாக் கொடி யென்னும் கலிமா ரகசியக் குழாய் வழியாக மற்ற பூதங்களான அஸ்மான்கள் ஒன்றும் அறியாத வண்ணமாக பிரஸன்னமாகி வந்து அதன் கடைசித் தலைவாசலான தொப்புழ் வழியாக நுழைந்து உட்சென்று தன் காரியக்காரனுகிய றூஹானி என்பவனை இருதய தாமரையில் வந்து சந்தித்து, அப்பால் சுழிமுனை மண்டலத்தின் மார்க்கமாக தன் ஆசனமாகிய அறுஷினிடத்தில், அதாவது நேத்திரத்தின் நடுவில் சென்று பீடங்கொண்டது. அப்படிப் பீடங் கொண்ட, அல்லாஹ் என்னும் கலம்பொளிவானது தன் வாகனமாகிய சரீரத்தை நோக்கி வெளியாகு என்று நோக்கினதும் குழந்தை பேறு காலமாயிற்று. இது அல்லாவின் மதரிபாவாக இருக்கும்.

15-வது திருப்பாடல்

இந்த வுடலுக் குயிரெங்கே நின்றது சிங்கி அது
அந்தர மாயண்ட மாக்கொடி நின்றது சிங்கா. (15)

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! அந்த விதமான நூதன சரீரமாகிய இந்த ஜடலத்திற்குள் வருவதற்கு முன்னதாக அந்த பிரதான ஆத்மாவாகிய "தான்" என்ற றூக்கானியானது எந்த இடத்தில் நின்றுக் கொண்டிருந்தது? அந்த உண்மையைத் தெரியப் படுத்து.

விடை:—கேளப்பா மஹஷூக்கானவனே! அதாவது ஏக அந்தர வெளியான மாக்கொடியின் கண்ணே வியாபித்திருந்து அவ்விடத்தில் ஒட்டாமலி "தான்" என்ற ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு நின்றது.

கருத்துரை.

மாக்கொடி யென்ற ரகசிய கலிமாவின் பருதாவில் வந்து மலிஹரான தேற்றப் பொருள்களும், மலிக்குளான நரம்பு

ஊசாட்டங்களும், தன்னைக் கண்டுக் கொள்ளாத படி ஒளிமறை வாய் நின்றது. ஏக அந்தர வெளியான மாக்கொடி என்றது சிசுவு ஜனிப்பதற்கு முன் மாக்கொடி முதலிய வினியோகங்கள் யாதென்றுமே அந்த இடத்தில் இலலாதிருந்து, புதிய தோற்ற மாகவே அவைகள் உண்டானதாலே ஏக அந்திர வெளியான மாக் கொடி என்றது ஞானவான்களின் உண்மையான கருத்து, அதுவே தீர்ச்சையான தெளஹீதாகவும் இருக்கின்றது. இதன விஸ்தரிப்பு ஒரு மட்டு திட்டமில்லாமல் விரிந்து கொண்டே போகு மாதலால் இம்மட்டுடன சுருக்கிக் கொள்கின்றேன்.

16-வது திருப்பாடல்

இந்த வுடற்கனி யெந்தக் கொடிக்கனி சிங்கி அது
முந்திய தொப்புழு மாக்கொடி யல்லவோ சிங்கா.

திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்தில் தேமாங் கனி ஒன்றிருக்கிறது என்று மூதாக்களான ஞானவான்களெல்லாம் ஒருமித்துக் கூறி யிருக்கின்றார்களே! அந்தக் கனியானது எந்தக் கொடியில் காய்த்தக் கனியாக இருக்கும். அதை சற்றுச் சுடடிக் காட்டி யருள்வாயாக.

விடை:—கேளப்பா மஹஷூக்கானவனே! தேமாங்கனி யென்று நாதாக்கள் சமிக்கினே கெய்து யோனதானது. றூஹல்லாகுதுஸீ என்ற "ஹூ" என்ற திரு அட்சரத்தைத் தான் நான் முன் சொல்லி வந்த தொப்புழ் என்றதும், மாக்கொடி என்றது மாக இருக்கும்.

கருத்துரை.

ஈமான் என்கின்ற உறுதி படுத்துகிறதற்கும், இஸ்லாம் என் னும் ஒன்றுபட்டு ஹக்குடன் ஹக்காய் கலந்து கொள்கிறதற்கும், றஸூலுல்லாஹி என்பதற்கும் நடுவே ஒரு "ஹூ" என்ற மந்தி ரம் இருக்கின்றது. அதை இன்ஸான் காமில் என்கிற நினைவுடன் ஒட்டுள வண்ணமாக கலந்து ஈமான் என்ற உறுதி என்னும்

தொட்டிலில் கிடத்தி தாராட்டு வாயாகில் அப்பால் நீ என்ற பொய் போர்வையானது எவ்விதம் கிழிபட்டொழிந்து போகிறதென்ற தானே உணர்ந்து கொள்வாய். இதைப்பற்றி குணங்குடி மஸ்தான் அவர்கள்

"முத்திதரும் வித்தை முனையில் வைத்துச் சீராட்டி
நித்த மறவாமல் நினைத்திருப்ப தெக்காலம்" என்றும்

மற்றும் இந்நூல் மூலபாடல் ஆசிரியரான மஹாத்மா சாகிபவர்கள்

"ஈமான் றனக்கு மிசுலா நெறிக்கு மிதனடுவே
தேமாங் கனியுண்டு செப்பரி தேசெப்பி லஞ்சிலொன்றை
ஆமா மெனக்கலி மாவா லெழுப்பி யறிந்துணர்ந்தாற்
சீமான் றனப்பெற்று வாழ்வி ரெனநபி செப்பினரே"

என்றும், இன்னும் சதகோடி மஹான்களும் அதைப்பற்றி நற் சாட்சி சொல்லி யிருப்பதை ஊன்றிக் கவனித்துக் கொள்ளுங்கள் என்பதாம்.

17-வது திருப்பாடல்

மாக்கொடி யென்பதை மானிட ரென்சொன்னர் சிங்கி அது
மட்டி லடங்காத மாகலி மாவடா சிக்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இப்பேர்பட்ட வல்லாணமப் பொருளான மாக்கொடி என்பதை மானிட கோலத்தில் வந்த வரான நமது நபியவர்கள் என்னவென்று சொன்னார்கள் அதை இவ்வதென்று நீ எனக்குச் சொல்வாயாக.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! அதாவது இவ்வள வல்லவனென்று ஒரு மதிப்பிட்டுச் சொல்வதற்கு அடங்காத கலீமா என்னும் மூல மந்திரமாகவே இருக்கின்றது என்று சொன்னார்கள்.

கருத்துரை

மானிட கோலத்திற்குக் காரண கருவியாயிருந்த மூகம்மது நபி யவர்களின் சிறப்புத்தானது தாத்தான ஒளிவாக இருந்ததினாலே ஸாஹிபவர்கள் நாயகமவர்களை மானிடர் என்று சுட்டி காட்டி

ஞர்கள். மாக்கொடி என்பதை நபியவர்கள் கலிமாவாக இருக்கும் என்றதன் தாற்பரியமாவது, கலிமாவுக்கு இருபத்து நான்கு அட்சரங்கள் இருப்பதுபோல மாக்கொடிக்கு இருபத்து நான்கு பனர்கள் உண்டாகி, அந்த இருபத்து நான்கு பனர்களைக் கொண்டுந்தான் இந்த மனுஷீக உடலின் இருபத்து நான்கு உறுப்புகளும் உண்டாகி, மொத்தம் சரீரம் என்ற பேருடன் வெளியாயிற்று இதன் உண்மையை இவ்விதத் தான ஒளிப்பில்லாமல் தெளிந்துக் கொள்ள வேண்டியது. இதன் ஹக்கீகத்தை நல்ல வெளிரங்கமாய நிய விரும்பும் அன்பர்கள் இந்த அடியானிடம் நேரில் வந்திருந்து கொண்டு தன்னை யறியும் ரகசியங்களை அள்ளிக் கொள்ளையடிக் கொண்டு போகலாம் என்பதாம்.

18-வது திருப்பாடல்.

எந்த வழியினூற் வந்தோ முலகினில் சிங்கி அது
வெல்லா முடிந்த பொருளின் வழியடா சிங்கா

திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! அவ்விதம் உண்மையின் சூரத்தாக இருந்த ஆதமியான நாம் எந்த வழியின் மார்க்க மாக இந்தப் பூலோகத்தில் ஜனனமெடுத்து வந்தோம்? அதைத் துலங்கும் படியாகச் சொல்ல வேண்டும்.

விடை:—களேடா மஹஷூக்கானவனே! நாட்டம், தேட்டம், ஆட்டம் என்னும் மூன்றுகி, அம்மூன்றும் ஐந்தாகி, அவ்வைந்து ஐம்பத்தொன்றுகி, அப்பால் எண்பத்து நான்கு நூறுயிரமாகி, இறுதியில் ஒன்றும் அற்று முடிவாகிப் போகின்ற ஒரு பொருளாகிய மேற் கூறிய நினைவென்னும் அந்தரமாகத்தான் ஒவ்வொரு சிருஷ்டியும் வந்தன. அதுபோலவே நாமும் வந்திருக்கின்றோம்.

கருத்துரை.

எல்லா முடிந்தபொரு ளென்றதன் கருத்து என்னவென்றால், இந்த உலகத்தில் எவ்வளவோ காரியாதிகளை நடத்தி எவ்வளவோ சுகங்களை அனுபவித்துக் கொண்டிருந்த இந்த ஸ்தூல

உடம்பானது சத்து அற்று கீழே விழுந்த வுடன் இது எந்த எந்த பூதங்களிலிருந்து என்னென்ன ஆகாரசத்துகளை எடுத்துண்டு ரெத்தமாகி அவ்விரத்தத்தை கொண்டு ஒவ்வொரு அவயவங்களையும் ஒழுங்கு போல் அமைத்துக் கொண்டு வெளிதோன்றியதோ; அத்தப் பூதங்களில் போய் மறுபடியும் மீண்டு கொள்ளும். அது எப்படியானால் காற்றுடன் சுவாசங்களும், நெருப்புடன் உஷ்ணநாடிகளும், தண்ணீருடன் இரத்த ஓட்டங்களும், மண்ணுடன் ''ஹவா'' வென்னும் நப்ஸு அம்மாரூவின் குண குணங்களில் போய்ச் சேர்ந்து சரீர மென்பது அறவே யில்லாமல் ஸ்ரூபம் அழிந்து, உதிர்ந்து போய்விடும். அப்பால் இருப்பது என்ன வென்று யோசி! அது தெரியுமா? அது தான் இந்த நான்கு பூதங்களிலும் பிரதான இராஜ கருவியான ஆகாயம் ஆகாய மென்றால் என்ன? அதுதான் இந்த சரீரத்தை வைத்து நடாத்திக் கொண்டு வந்து சகல ஜீவாதிவர்கங்களையும் படைத்து, பேச, உண்க, குடிக்க, ஆட, ஓட, எழுப்ப, இருக்க செல்கின்றது. அது தான் நமது ஊசாட்ட மென்கிற நினைவு. அந்த நினைவு தான் அல்லாஹ் என்னும் பெரிய திருநாமத்திற் குரியது. அதுதான் அறிவு.

ஆரப்பா! என்னுடைய இந்த ஞான திரவியத்தைக் கையாட வந்தவனே! உன் புத்தியைக் கூர்மை யாக்கி வைத்துக் கொண்டு இப்போது நான் சொல்லி வந்த இந்தக் கடப்பான நினைவளவில் யோசித்து, பொன்னுக் குள்ளே பொன்னை வைத்துக் புடம் போடுவது போல் நிராமயமாகிய அந்த மஅரிபத்துல்லா என்னும் நினைவில் உன் நினைவைப் பொருத்தி இன்ஸான் காமில் என்னும் இணையற்று, நாட்ட ஊசாட்டங்களை பல வழியை விட்டுப், அந்த ஒரு வழியில் நிற்பாட்டி சற்று அதில் அதாய் நீ தரிபடு. அதாவது உன்னை நீ இல்லையென்று லாமக்கான் அளவில் வைத்து பனவாக்கிப்பார்! அப்போது பேராப்பணம் என்ன இருக்கிறதென்று கண்டு கொள்வாய். இது தான் பாரவான்களான பெரிய பெரிய குதுபுமார்களும், அக்தாபுகளும் இருந்து சாதித்து வந்த வழி வீணுக உலக மருட்டில் ஏமாந்து அலைகின்ற குருட்டு ஜனங்களே பத்திரம்! இதைக் கவனித்து இதனளவில் நடந்து கொள்ளுங்கள்.

19-வது திருப்பாடல்

முன்னே யறிவா லறிவகை யென்னடி சிங்கி அது
முச்சுடர் மூன்று முடலுயி ராத்துமா சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அல்லாவுடைய மஅரிபத்தை அறிந்து கொள்ளும் விஷயததில் முதல் முதலாவது அறிகின்ற ஒழுக்கமான ஞான அறிவின் விதங்களென்ன அவைகளே நல்ல வழி விபரமாக சொல்வாயாக.

விடை:—கேளப்பா மஉஷூக்கானவனே! ஞானத்தில் நீ முதலாவது அறிந்துக் கொள்ள வேண்டிய ஒன்றும் படிக் கட்டானது முச்சுடர். முச்சுடர் என்றால் மூன்றுவித வொளிவு. அந்த மூன்று மென்ன வெனறால், அதாவது தந்தை ஒரு வொளிவு, அதன் பிறகு தாய் யொரு ஒளிவு. அதன் பின் தான் ஒரு ஒளிவு ஆக மூன்று முச்சுடரென்று அறிந்து கொள்ள வேண்டியது.

கருத்துரை

தந்தையின் ஒளிவு, தாயின் ஒளிவு என்பது சுக்கிலம், சுரோணிதப். ஆக இவ் விரண்டும் இல்லா விட்டால் தானென்ற ஒளிவான ஆசையானது கிடையாது. அவர்களிருபேரும் உலகத்தில் அநுபவித்த பல ஆகாரங்களின் மார்க்கமாக ''இஷ்க்'' என்னும் ஆசையானது ஆகாயமென்ற பூதமாகி, அப்பூதம் நெருப்பென்னும் மோகமாகி, அம்மோகம் காற்றெனும் சுவாசமாகி, அச்சுவாசம் மண்ணென்ற சரீரமாயிற்று. இதனால் சரீரம் என்ற ஆலத்தில் இன்ஸான் எவ்விதம் இருந்தது? அப்பால் எவ்விதம் வந்தது? அப்பால் எவ்விதம் மோசம் போகின்றது? என்று பெண் பாலும் நல்ல அறிந்து ஞானியாகி விடுவாள். ஆனதாலே இந்தப் பெரிய விபரம் விபரமான நமது திரவிய உரையின் உதவியால் அறியத் தெரியாத பாவியானவன் ஹழிகாலம் ஜன்ம பிறப்பென்னும் நரக

வேதனை அடைவான் ஆனதினாலே தான் பாவா ஸமர்கந்து பீயாப்பானி அவர்கள் தமது கலீபாக்களை நோக்கி சொன்னதாவது:—

''ஓ மஹான்களே! நீங்கள் அல்லாவுடைய மஅரிபத்தைக் கொண்டு உலகத்தில் மானுடர்களுக்கு முச்சுடர் மார்க்கமாகத் தெரியப்படுத்துங்கள். அவர்களுக்கது கரதில் நுழைந்து கருத்தில் அமையாமல் போகும் பட்சத்தில் அந்த நாய்களை விட்டு விலங்குகள். அவர்களாகிறது ''திட்டமாக தோஸக்கே அங்கார்'' அதாவது நரகத்தின் நெருப்புக்கு இறைகளாக உளள மூதேவிகளாக இருந்து பேர்மாற்றப் படுவார்கள்.'' என்று திருவாய் மலர்ந்து சொல்லினார்கள். பேர் மாற்றப் படுவார்கள் என்று சொன்ன சொல்லானது மிக்க பாரதூர மானது. அதை விபரிக்க நமக்கு அவ்வளவு அவசரமில்லை. தேவையான ஆண்பிள்ளைகள் எப்படியாவது என்னிடம் நேரில் வந்து அந்த ரஹசிய வைரமாலையை அப்படியே பாளம் பாளமாய்ப் பிளந்தெடுத்துக் கொண்டு போகலாம். அப்படி செய்து கொள்ள வேண்டுமே ஒழிய மற்றப்படியல்ல என்பதே. இன்னும் அந்த முச்சுடர் என்பது இந்த சரீரத்துள்ளே உடல், ரூஹு, ரூஹானி என்பவைகளாக இருப்பதை ஊன்றிக் கவனிக்க வேண்டிது.

—⟡—

20-வது திருப்பாடல்.

பின்னே ரறிவர்க ளொன்ருன தெப்படி சிங்கி அது
பேதக மற்ற பெருவெளி யானது சிங்கா.

திரவிய உரை,

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! முன்னே அறிந்து கொள்ளும் விதம் அப்படி இருந்தால் கடைசியாக அறிந்துக் கொள்ளும் விதம் எப்படி? அது ஒரே ஒரு வஸ்தென்று மஹாத்துமாக்களான ஞானவான்க ளெல்லாம் முறையிட்டுக் கொண்டு போயிருக்கின்ருர்களே, அதென்ன ஒரு வஸ்து? அதை மெதுவாக வெளியாக்கி விடுவாயாக.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! அதாவது என்ன வென்றால் அது, தான், யாதொரு பிணக்கும் இருவினையுப் இல்லாமல் தான் தானுகிற ஆகாய மென்கிற நாட்டம் என்னுப் வஸ்துவாக இருக்கும்.

கருத்துரை

மஹாத்துமா ஸாஹிபவர்கள் பின்னால் ஆரியக் கூடிய வஸ்துதென்று வற்புறுத்தி கூறியதன் கருத்தென்ன வென்றால், ஒரு வன் மரணிக்கின்ற காலத்தில் ரூஹானி என்ற பூத நப்ஸைச் சேர்ந்த அஞ்சிறுகள் நான்கும் அதனதன் ஒடுங்கும் ஸ்தானங்களுக்குள்ளே போய் தானே ஒடுங்கிப் போய் விடும். அதன் பின்னால் சரீரம் தன் பிரக்கினை தப்பி மயங்கி ஹசாட்டம் நின்று கிடையாய்க் கிடந்து விடும். அப்படி ஒன்றும் இயலாமற் கிடக்குச் சரீரத்தை ஒரு ஹசாட்டம் நின்று அதை மையத்து என்ற பேர் வரவொட்டாமல் சற்று தடை படுத்தி, தன் கயம்பைக் கொளுத்திக் கொண்டு நின்று, தானுகவே குளிர்ச்சி யென்னும் போர்வைக்குள் மறைந்து ஹசாட்டப் ஒடுங்கிவிடும். அப்பால் அந்த சரீரத்திற்கு ஆதமி என்ற பெயர் போய் பிணம் என்ற பெயர் வந்து விடும் ஆனதினுலே தான் அவ்வாறு கடையில் அறியும் வஸ்தென்று கூறினர்கள். இதன் விபரம் ஒரு விதத்திலும் அடங்காமல் சமுத்திர ஜலம் போல் பெருகிக் கொந்தளித்துக் கொண்டே போகும். எவன் ஒருத்தன் இந்த பாரதூரமான மகாமனவில் வந்து எறி நின்று கொண்டு யூகிப்பானே அவனே அதைத் தெளிவாய் அறிந்து பரமா நத்தியாவான். இத்த விஷயத்திற்குத் தான் குணங்குடியார் "தேனேயுண்டு ருஷிகண்ட தேசிகர்க்கு ஆகாயம் தெரியுந்தானே" என்று அறிவுறுத்திப் போய்யிருக்கின்ருர், காண்க

21-வது திருப்பாடல்

ஆசை கொண்டு நம்மை யாட்டுவ தாரடி கிங்கி அது
அக்கினி வாயுநீர் மண்ணின் மகிமையே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! மேற் கூறிய அந்த ஒரு ஹசாட்டம் கடைத் தீர்மான மாக இருந்து மூவுபெறும்

பட்சத்தில் அதுவரையிம் இந்த சரீரத்தை நடத்தி வந்த மற்ற கீழ் அதிகாரிகள் யார் யார்? அவர்களே இன்னவர் இனியவரென்று ஒரு விடுத்தத்திற்த இரண்டு விடுத்தம் சொல்லிவிடு. அப்பதான் இதற்கு முன் இந்த ரஸ்தாவை அறியாத எங்களுக்கு அதன் முழுதாற் பரியமும் நன்கு விளங்கும்.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! அதன் விபரம் என்ன வென்றால் சொல்லுகிறேன். அந்த ஆகாய மென்னும் மோக நினைவுக்கு காரியஸ்தர்கள் நான்கு பேர்களாக இருக்கும். அவர்களில் ஒன்றுவது அக்னி இரண்டாவது காற்று, மூன்றுவது தண்ணீர், நான்காவது மண் என்பது.

கருத்துரை

மோக நினைவு என்பது தஜல்லி என்ற "றூஹானி குதுஸி" இதந்த மலிக்குல் குத்தூஸ் என்றும் பெயர் உண்டு. அதுதான் அல்லாஹ் என்னும் பெரிய திரு நாமத்திற் குரியது. அப்பால் இதன் காரியஸ்தர்கள் நால்வருள் முதலாவது அக்னி என்றது இஸ்ருயீல், அப்பால் காற்று என்றது இஸ்ருயீல், அப்பால் தண்ணீர் என்றது மீக்காயீல், அப்பால் மண் என்றது, ஜிபுரீல், "மலிக்குல் குத்தூஸான" தஜல்லி இருக்கும் ஸ்தானமாவது நேத்திரம். அதாவது புருவமத்தி அல்லது மூளை. இஸ்ராயீல் உடைய ஸ்தானமாவது செவி. இஸ்ராபீல் உடைய ஸ்தானமாவது மூக்கு மீக்காயீல் உடைய ஸ்தானமாவது கண். ஜிபுரீல் உடைய ஸ்தானமாவது நாவு, இதற்கு எம்பீனையாவது :—

ஏ! அறிவைத்தெரிய வந்தவனே! இதில் சற்று நின்று கவனித்துப் பார்! ஒரு சரீரம் சாவும் விதத்தைப் பற்றி உன் உள்ளறிவிடத்தில் விஜாரணை செய்! முதலாவது றூஹானி குதுஸி அதன் ஸ்தானத்தை விட்டும் பிரயாணப் படும்போது சரீரத்திற்கு அறிவு நீங்கிவிடும். இஸ்ராயீல் நீங்கும்போது செவி அடைபட்டுப்போகும். இஸ்ராபீல் நீங்கும்போது நாசித் துவாரங்கள் அடைபட்டு சுவாச நிலைகள் ஒன்றேடொன்று சிக்கலாடி கறட்டுப் புறட்டென்று இழுப்படும். மீக்காயீல் நீங்கும்போது கண் தெரியாமல்

பார்வை அற்று பஞ்டைந்து வரும். ஜிபுரீல் நீங்கும்போது நாவு விழுத்து மரண ஜன்னி மேலிட்டு சரீரம் பிணமாய்க் கட்டை யாய் விடும். இதனால் அல்லாவின் இல்மின் ரகசியமான உண்மை எதில்நின்று சாதிக்கின்றதென்று அறிந்து கொள்! இதற்கு மேலும் சொல்ல வேண்டுமா.

22-வது திருப்பாடல்

ஆசை பாசபல னனுபோக மாரடி சிங்சி அது
அங்கம் பொருந்திய பங்குமண் ணல்லவோ சிங்கா.

திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த ஆதமி என்னும் சரீரத்தின் ஆசாபாசமென்கிற "ஹவர்" முதலிய பந்தவினைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கின்ற பூதியமாவது எது? அதை விபரித்துச்செல்வாயாக.

விடை:—கேட்பாயாக. தாலி பான மஉஷ்க்கே! அதாகிறது மேற் கூறிவந்த அஞ்சிறுகள் நான்கிலும் ஒன்றுகிய மண்ணுடைய பங்காக இருக்கும்.

கருத்துரை.

மண்என்பது நாவு என்றும், அது ஜிபுரீல் என்றும், நான் கூறி வந்தேனல்லவா. அது நப்ஸு அம்மாருவாக இருக்கும். நாவில்லையானால், தீனில்லை. தீனில்லையானால், இந்திரிய கிருத்தியங்கள் எதுவுமில்லை. இந்திரிய கிருத்தியங்கள் இல்லையானால், தூல ஆத்மாக்கள் அத்தனையும் பரமாத்துமாக்களாகவே ஆகும். ஆனபடியால் தான் சரீரத்துள் எல்லா நல்வினைப் பூதியத்தையும் அமைத்து மண்ணுகிய தீ வினைப் பூதியத்தையும் அமைத்து அதனால்தான், உலக சிருஷ்டிகள் யாவற்றையும் படைப்பித்தாயிற்று. ஒரு உதாரணம்:- ரயில் இஞ்சின் என்று வைத்துக்கொள் அதை மண் அதாவது இரும்

பால் சமைத்து அதில் எந்நெந்த இடத்தில் பூதசாரங்களை அமைக்க வேண்டுமோ, அந்தந்த ஸ்தானத்தில் நெருப்பு, காற்று, தண்ணீர், இவைகளை அடைத்து, ஆகாயமென்கிற அறிவானது விசையைத் திருப்பி ஒட்டுவதுபோல், இந்த சரீரம் என்னும் மண் பாண்டத்தி னுள்ளே மற்ற மூன்று பூதங்களும் நுழைந்து கொண்டு சக்தி கொடுக்க, அதை அறிவென்னும் நூஹுவல்குதுபியானது தன் ஞட்டம் என்னும் ஒரு ஹிக்மத்தால் நடத்துகின்றது. இது தான் மனுரிபாவின தீர்ச்சையான விவேகம் என்றறிந்து கொண்டு, நான் மேலே அநேக இடங்களில் நல்ல வெட்ட வெளிச்சமாய் தூண்டிக் காட்டியிருக்கின்ற வல்லபத்தை அந்த ஸ்தானத்தில் வைத்து ஒரு கலப்பற்ற கற்பூர விளக்கைப் போல் கண்டு' கலிமா எனனும் மன உருதியை நிலைக்கவைத்து ஷாஹிது சொல்லிக் கொள். அப்படிக் யல்லாமல் இப்போது நீ சொல்லி யிருக்கும் பொய் சாக்ஷியைக் கொண்டு நீ ஈடேறுவது என்னும் லக்ஷியத்தைக் கடை பிடித்து நீ ஏமாளி யாய்ப்போய் கடசியில் கைசேதப் படுவாய்! அல்லாகுர் ஆனில் "ஓ! மனிதர்களே! உங்களில் எவன் என்னை இந்த மண்ணுலகத்தில் வைத்தே கண்டு சாட்சி சொல்லா திருப்பானே! அவன் திட்டமாக மேலுலகத்தில் இரண்டு கண்களும் குருடனாக என்னைத் தரிசியாமல் தட்டழிவான்." என்று சொல்லியதன் சாரம்சத்தை சற்றே ஒரு நிமிஷம் மக்க மல்லாந்து படுத்துக் கொண்டு உன் ஹக்கைப்பற்றி யோசித்துப்பார். அப்போது அதன் மகத்தான கிருபை யிருந்தால் உனக்கு வெளியாகும்.

23-வது திருப்பாடல்.

தன்னை யறியுந் தலமேது சொல்லடி சிங்கி அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் கண்டு ஷாஹிது சொல்லிக்கொண்டு "தான்" என்ற பரமாத்துமா வானது இந்த சரீ

ரத்தில் எந்த ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. அதை அறியும் விவிம் எப்படி.

விடை:—ஹேப்பா தாலிபான மஹஷூக்கே! உன்னுடைய நேரத்தில் இரண்டிற்கு நடுகத்திப ஸ்தானத்தில் வைத்துக்கண்டு அறிந்துக்கொள்.

கருத்துரை

தானென்ற ஆகாயமானது தன்னுட்ட மென்றும் நிஜவாக அதவாது பிரதான ஆத்மவான அறிவாக நின்று, இந்த ஸ்தூல சரீரத்திற்குள்ளே இரண்டு கண்களுக்கு இடையே நின்று இலங்குகின்றது. அந்த ஸ்தானத்தைத் தான் அல்லாகுத்தா ஆலா குர் ஆனில் அநேக இடத்தில் ''காபகௌஸைனி'' என்றும்''ஹதீதுகுதுஸி'' என்றும் ''மாகான் மஹ்மூதென்றும்'' ''சுல்தானன்நஸீரு'' என்றும் பல ஸ்ரூபப்படுத்திச் சொல்லி யிருக்கிறான்.

வெண்பா.

''கம்பத்துக்குள்ளிருந்து கைகாட்டும் பெண்ணரசை
இன்புற்றுச் சேர்வதற் கென்செய்வேன்— அன்புற்ற
மந்திரமே ஹூ ஹூ மருந்ததுவாகும் பார்வை
தந்திரமே க்யானமது தான்''

என்ற அருமைப் பெரியோராகிய காட்டானே ஷெய்கொலீ அவர்கள் திருவாய் மலர்ந்து கூறியதன் உட்கருத்தை விசாரணை செய்துபார். இதில் மஹானவர்கள் ''கம்பம்'' என்று சுட்டினது தான் நான்மேலே சொல்லி வந்தகண்களின் நடுமத்தி என்றது. கைகாட்டும் பெண்ணரசென்றது தன்னுட்டமென்கிற றூஹுல் குதுஸி என்று சந்தேஹ மற உணர்ந்து கொள்வாயாக.

இன்னும் உதாரணம் வேண்டுமோ இதைப்பார். ''காட்டி மறைத்தென்னைக் கோட்டி கொள்ளாதே கண்ணே பெண்ணரசே, ஒருவாஸலும் நானு மோர் வீட்டுக்குள் பட்டபாட்டைச் சொல்ல நாவாயிரம் போதாது.'' என்று' ஜிஷ்த்தியா தரீகத்தின் காமில் சற்குரு நாயகரான கடையநல்லூர் உதுமான் லெப்பை

ஷெய்கவர்கள் திருவாய் மலர்ந்திருப்பதின் உட்கருத்தைக் கவனித்துப் பார்! இந்த பார தூரமான பல உதாரணங்களாலும், குர்ஆனுடைய சுவர்ணகுத்திரங்களின் பரத்தின் அர்த்தங்களாலும் நீ உன்னை அறிந்து உன் சுவாதீன சுயேச்சையைப் பெற்றுக்கொள். வீண் ஏமாளித்தன மாயிருந்து காலமெல்லாம் துனியா வென்னும் மாயாப்பரப்பு சகவாசத்தில் மருண்டு விளையாடிக்கொண்டு இருந்து நீ பெறவேண்டிய சகல வல்லமை உருத்து களையும் கையிழந்து கடைசியில் நீ வெகு ஆத்திரம் பரத்திரமாய் ஒடி இடுப்பை வளைத்து வளைத்துக் கட்டிக்கொண்டு சப்பாதித்து மெய் யென்று பூட்டி வைத்திருந்த ஆஸ்திகளும் பொய்யாய் போய் உன்னையும் பொய்யாக்கி விஷைக்கெட்டழிந்து நாசமாய்ப் போகாதே! பத்திரம் இந்த என்ஞான திரவியத்தை ஒரு கைவல்லியமாய்த் தேடி யெடுத்துத் தோவில் முடிந்து போட்டுக்கொள். சொன்னேனை தவறிடாதே! என்பதாம்.

24-வது திருப்பாடல்

என்ன விதமாகத் தன்னையறிவது சிங்கி. அது
தன்னவன் ரூய்தந்தை யாகிநா மானது சிங்கா.

திரவிய உரை.

விஞ:—ஆமா ஆஷிக்கானவளே! நீ அவ்விதம் சொல்லி வந்த கற்பனைகளால் இன்ஸான் தன்னை இன்னவனென்று எப்படி யறிந்து கொள்கின்றது அதை நல்லதெளிவு பெறச் சொல்வாயாக.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! அதாவது எவ்விதமானால், உன் தகப்பனை மோகத்தளவில் ஊசாட்டஞ் செய்வித்த தன்னுட்டமென்னும் வஹ்தானியத்தை இன்னதென்று, அதாவது தன்னிலையென்று உருதியாக அறிந்து, அப்பால் தகப்பனுடையவும், தாயுடையவுமான இந்திரியங்களால் உற்பத்தியாய் வெளிவந்தது நீ என்று அறிவதுதான் தன்னையறிவதில் முந்தின மன்ஸிலாக இருக்கும்.

கருத்துரை

தன்னையறிவது இந்த விதமாக அறிந்தால், தான் என்ற வல்லமை இன்னதென்று எளிதில் விளங்கும். அதற்குத்தான்

நபிகள் சிரோமணியான நமது நாயகமவர்கள் ''இன்ஸான் தன்னை அறிவது பறுலு எனறும், அப்பால் தலிவனையறிவது சுன்னத் தென்றும் கட்டளை செய்தார்கள்'' தன்னை இன்னமாதிரிதான் என்று எவன் திட்டப்படுத்திக்கொள்வானோ! அவன் மிகவும் இலேசாக அந்த மகாமிலேயே தன் றப்பையும் இன்னதுதான் என்று உணர்ச்சி செய்து விரவிக்கொள்வான். இதைப்பறறி நபிகள் சிரோமணியான நமது நாயகமவர்களும், ''மன் அறப நப்ஸஹு பகத் அறப்பறப்பஹு'' என்று சாட்சி கூறியிருக்கின்றார்கள். இந்த திருவாக்கியத்திற்கு உரிய அர்த்தமாகிறது, எவன் ஒருவன் தன்னுடைய பூதியங்களை அறிந்தானோ! அவன் தன்னுடைய றப்பானியா வென்னும் பூரணத் தையும் அறிந்து கொள்வான்'' என்பதாம்! இதனல் சந்தேக மற்று மஅரிபாவை அறிந்து கொள்ளவும்.

25-வது திருப்பாடல்

இறையை யறிவது மெப்படிச் சொல்லடி சிங்கி அது
இறையெங்கு நின்றுடுந் தன்னினை வாமடா சிங்கா

திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! நீ தன்னை யறிவது இன்ன விதம் தான் என்று முடிவு சொல்லி விட்டாய். அது போல் தன் தலிவனையும் அறிவதை இன்ன தன்மை தான் என்று சொல்லி விடு.

விடை:—சேளப்பா மஹஷூக்கானவனே! அதையும் முடி வாக சொல்லுகிறேன். அந்த தலிவனுகிய றப்பானியாகிறது, இந்த வுடலென்னும் பதினெண்ணுயிரம் ஆலத்திலும் ஏகமயமாய் நின்று காரியாதிகளை நடாத்தாட்டி வரும் தன் ஊசாட்டமென்னும் நினைவாக இருக்கும்.

கருத்துரை

நினைவு எப்படி யப்பானியாவின் சிபத்தில் உள்ள தென்றல், அதாவது நினைவு ஊசாடாத பட்சத்தில் உலகம் ஒன்றுமே கிடை

யாது. எப்படியென்றல், ஒருவன் பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென்று படுத்துறங்க நாடுகிறன். அந்த நாட்டமே நினைவு, அது அவனை நித்திரையில் வைத்தாட்டுகிறது. அவ்வித்தம் ஜலத்தை யும் மற்ற பூதங்களையும் மயக்கி தூங்கவைத்து விட்டுத்தான் தூங்கா மல் அசையாமல் அரூபியாய் இருக்கின்றது. ஜடலமும் மற்ற நப் ஸுகளும் ஒன்றுடன் ஒன்று விபரீதப்பட்டு மரணித்த பிறகு அந்த நினைவானது தன் குதுரத்தென்னும் வல்லமை ஹிக்மத் தால் அறிவென்னும் வாகனத்திலே பிரயோகம் பண்ணிக்கொண்டு அந்தரமாய் பாய்ந்து விடுகிறது அப்பால் அது மற்ற கோளங் களை தன் முகப்பத் தென்னும் உதிப்பில் நின்றும் ஸ்ருபிக்கிறது. இந்த இல்மில் வந்து நுழைந்து பார்க்க வேண்டிய லட்சியம் முக்கியம் தேவையான தல்ல. ஏனென்றல் மஅரிபா என்பது இரகசியபாதையான தாலே, அதன் உள் உடைவான பாரிய கட வுகளைப்பற்றி சற்று மறைத்துக்கொள்ள வேண்டிய கடமை ஞான நூல் எழுதும் ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. எழுதுவதும் சொல்லிக் காட்டுவதும் சில மகாம்கள் வரையிலும் தான் ஆகும். அதற்கு மேலிட்ட மகாமில் எழுத்தும் பேச்சும் கிடையாது. ஆலோசிப்பும் ஊசாட்டமு மாத்திரம் உபயோகப்படும். அதற்கு மப்பால் உள்ள லாமகானில் ஆலோசிப்பும் ஊசாட்டமும் தானே ஒழிந்துபோய் நெருப்புடன் விரகு கலந்த மாதிரி வஸ்துடன் வஸ்தாய விரவிக் கலந்து சதா ஆநந்தியாய் நினைவுடன் கனவாய் மிதந்து கொண்டிருப்பது தான் ஞானத்தின் அந்த மாயிற்ற. இந்த இல்மை உனக்கு இவ்விதம் உதாரணமாய்ச் சொல்வான்யார்? ஒருவனையுமே இந்தக் கலிகால புரட்சியில் நீ நம்பாதே! இவ்வளவு பார தூரமான அரும்பெரும் பொருளை இப்படி விஸ்தரிக்கத் தக்க மஹான்கள் உன்னிடம் வலியவரமாட்டார்கள். எல்ல காரியங்களுக்கும் உன் முயற்சியே காரணம்:—உதாரணம்.

''அறிவை அறிந்தவர்கள் ஆயிரத்தி லொன்று
அருளை யறிந்தவர்கள் இலட்சத்தி லொன்று
குருவை யறிந்தவர்கள் கோடியினி லொன்று
கருவை யறிந்தவரைக் காண்பதுவுமரிதே.''

என்ற மாதிரி நீ அவர்களே யறியவும் உனக்கு வல்லமை போதாது. என்னுடைய திரவியவுரையே உனக்கு காமிலான குருவென்று இதன்படி தவத்தைச் செய்து கொள்வாயாக என்பதாம்.

26-வது திருப்பாடல்

தன்னுள் விளங்குந் தவமென்ன சொல்லடி சிங்கி அது
தன்னே மறந்து தவத்தி லிருப்பது சிங்கா.

தீரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்காவனே! தானுகிய இந்த இன்ஸான் ஜடவத்திற்குள் விளங்கி யறியக்கூடிய தவமானது, எப்படி செய்கிறது? அதன் விபரம் தெரியப்படுத்தவேண்டும்.

விடை:—கேள் மஹஷியிக்கானனே! அதென்ன வென்றுல், ஜடலத்தை மறந்து விட்டு ஏக தவத்தில் இருந்து கொண்கிறதாக இருக்கும்.

கருத்துரை.

ஜடலத்தை மறந்து விட்டு ஏக தவத்தில் இருக்கும் விபரமாகிறது:—ஐந்து பூதிய வாசல்களையும் அடைத்து, உலக எண்ணங்களே அற ஒழுத்து, ஒரு கவலையும் இல்லாமல் அரவம் ஒடுங்கினை ஓரிடத்தில் தனித்தும், பசித்தும், துர்க்கமற்று விழித்திருந்து சுவாசத்தை "இல்" என்று உந்திக் கமலத்தில் இருந்து இழுத்து "தில்" என்கின்ற தாமரையின் நடுவே அல்லாஹுவி என்று வைத்து, சூரியகலையுடன் சந்திரகலையையும் பரஸ்பரப்படுத்தி அதாவது கலந்துகொள்ளச் செய்து வெளியே விடுகிறது. அவ்விதம செய்யும் சமயம் துனியாவின் வியாபகம் ஒன்றுமே அந்த மன நாட்டத்தவலில் வந்து ஊசாடிடப்படாது. அவ்விதம் ஊசாடுவதால் நீ செய்த தவமெல்லாம் நாச மடைந்துபோய் இங்கும் அங்கும் நற்கெதி கெட்டுப்பாழ் பட்டுப்போவாய். இது இருக்கட்டும்.

அப்பா அறிவுடைய மகனே! நீ நான் சொன்ன விதம் போல் உன்னே பனவாக்கி நினைவுடன் விரவி இஷ்க்கென்னும் க்யான மோகத்தை அதன்பேரில் வைத்து ஓர்மையை நல்ல ஸ்திரப்படுத்து வாயானுல், உன்தன்னுட்டமென்னும் பரிபூரண

நந்த நினைவானது உன்னில் நின்றும் இல்ஹாமாசி வெளியாகும். அது வெளியாகும் மஹாபூரண ஸ்தலமானது நேத்திரமென்னும் பெரிய திருநாமத்தின் அறுஷேழ அல்லாவாக இருக்கும். அதில் நீயும் உன்நினைவும் ஒன்று பட்டு நீ என்பது இல்லாமலாகி ஏக மோகமான பொழுது, நீ என்னும் குதுஸியானது தஜல்லியாத்தாகி, முதலாவது ஒரு சுத்த வெண்மையான ஒளிவாய் ஒரு விளக்குச் சுடர்போல் சுழிமுனை என்னும் மகாமில் வெளியாகி மறைவதும், அப்பால் நின்றது நிற்க பளீர் பளீர் என்று மின் வெட்டி மறைந்தாற் போல சுடர்வீசி மறையும்; அதை கண்காட்சியாக தரிசித்த நாள்களில் உனக்கு ஒருவித மயக்கமும் தியக்கமும் வரும். நாட்டமும் ஒரு இடத்திலும் தரிபடாமல் நோக்கின நோக்க மெல்லாம் உன்கண் பார்வைக்கு ஒரே ஒளி மயமாகவே தோன்றித் தெரியும். அப்பால் சிலகாலம் சுவாசம் பந்தனப்பட்டு இஷ்க்குடன் ரஹித்து உன்னை மறந்த தன்மையாக, சில வாரங்கள் வரைக்கும் சொக்கி வாசியுடன் நாட்டத் தட்டி நின்று குலாவி அப்பால் பழய நிலைமையில் இறக்கி விடும். இதை இன்ஸான் காமில் ஆசிரியர் "உறூஜ் நுஜூல்" என்று சொன்னர்.

அப்பால் சிலகாலம் இவ்விதம்செய்த தவமானது மீறிப் பாய்ந்தால் அதாவது தன் நிலைக்குள்தான் நிலை பட்டவுடன் உன் றூஹ் என்னும் கமல முகம்மதிய்யா வென்ற றூஹானியான தன்னுட்டமானது, ஒரு முகவுரை கீருக பத்து வயது வாலிப ஸ்திரீயின் சூரத்தில் காலில் தங்கஜோடிட்டு தலையில் ரத்னக்கீரீடம் இட்டு ஒளிவென்னும் போர் வைக்குள் மறைந்தவளாய் உன் வடிவத்தில் வெளியாகுவாள். அது தான் நீ என்ற தன் நாட்டமாக இருக்கும். அவ்விதம் வெளியான அந்த சூரத்தானது மகா சிவகாமி சூரூபத்தை யுடையவள். ஆகையால் அவள் காட்டும் அனேக வித்தை இந்திர ஜால விநோத நூதனசல்லாப சரசத்தில் நீ சொக்கி யதனிடம் வரம்பெற்ற பிறகு உனக்கு அவள் இருஸ்தன மென்னும் இடகலை பிங்கலை என்ற பாலாமிர்தத்தை உன் வாயில் வைத்து ஊட்டுவாள். அதில் ஒரு திவலை உன்வாயில் நுழைந்த மாத்திரத்தில் இனி ஒரு பொழுதும் உனக்கு பசி என்பது இல்லாமல் அற்றுப்

போகும். அதுதான் காய கற்பம் என்று தமது நபிகள் சிரோன் மணியவர்கள் அலியவர்களுக்கு உபதேசித்தார்கள். இதன் முழு விபரம் ஒரு மட்டில் அடங்காது ஆனதாலே இவ்வளவுடன் முடித்துக் கொள்கின்றேன்.

27-வது திருப்பாடல்

என்ன விதமாகத் தன்னை மறப்பது சிங்கி அது
ஒன்றைப் பொருந்தி யொடுங்கி யிருப்பது சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆ மா ஆஷிக்கானவளே! முன் சொன்ன வுரையில் தன்னை இல்லாமலாக்கி விட்டுத்தவந்தில் இருக்கவேண்டும் மென்று சொன்னேபே! அது எந்த விதமாக தன்னை மறந்து பனு செய்கிறது? அந்த விதத்தை இன்னமாதிரி என்று தெளிவாகச் சொல்.

விடை:—கேள் மஹஷூக்கானவனே! அதாவது, ஒரு வஸ்து உன்னில் பிரதான கருவியாக இருக்கின்றது. அதில் நீ விரவிக் கலந்துக் கொண்டு மற்ற உலக ஊசாட்டங்கள் யாவற்றையும் ஒடுக்கிக் கொள்கின்றது.

கருத்துரை

உன்னில் ஒரு வஸ்து பிரதான கருவியாக இருப்பதானது நினைவாக இருக்கும். அந்த நினைவே ''தான்'' என்று ணர்ந்து அத்துடன் நாட்டத்தைப் பொருத்தி விடச் செய்து புலன்கள் பொறிகள் ஐந்தையும் ஒடுக்கிவிட்டால் ஜடலம் ''தான்'' என்ற ஒரு ஊக்கம் மற்று பனுவாகி விடும். நாட்டமும் நினைவும் ஒன்று பட்டுபோகும். நெருப்புடன் விரகு சப்பந்தப் பட்டவுடன் அந்த விரகும் நெருப்பாய்ப் பற்றிக்கொண்டு பழய விரகென்ற சுயகுணம் பனுவாகிப் போகுவதுபோல், நாட்டமும் நினைவும் ஒன்று பட்டவுடன் ''தான்'' என்ற அகந்தையான இந்த ஜடல பூதங்கள் எல்லாம் பனுவாகி ''ஒன்று'' என்னும் வஹ்தானீய்யத்தின் துறையில் கூடிக்கொண்டு கல்க்கு என்ற காரணப் பெயர் மாறி ஹக்கென்ற இயற்கை பெயருண்டாகி விடும். அப்பால் அந்த மனிதாத்மாவானது பரமாத்மாவாகி, எல்லா வல்லமை

யும் தான் பெற்றுக்கொண்டு, எக்காலும் அழியாத சுயம்பென்ற எல்லாவித ஏகாதி பத்தியங்களும் உரிய சுதந்தரத்தைத் தானுகவே அடைகிறது. இப்படித்தான் மஹாத்மாக்களான குதுபுமார்கள். எல்லா சுதந்தரத்தையும் அடைந்து நினைத்த பாரிய கருமங்களைச் செய்தார்கள். ஆனதாலே நீயும் அவ்விதம் செய்தால் உனக்கும் அந்த மஹாப்பரஸ்பரசம்பந்த சுந்தரம் தடைஇல்லாமல் கிடைக்கும். அப்போது இந்த உலக கோடி சரா சரங்களெல்லாம் நீயாகவே நின்றுடுகிற ஒரு பாரதூரமாண தஜல்லியைத் தெரிவாய். ஆனதாலே இதற்கு மேல் சொல்லும் வகையில் இந்த மஹாவிஸ்தரிப்பை அறியாதவன் ஒருபோதும் அந்த பதவிக்கு உரியவனுகமாட்டான்.

28-வது திருப்பாடல்

என்ன விதமாக வொன்றைப் பொருந்தலாம் சிங்கி அது
எல்லா மறந்து மிருளா யிருபது சிங்கா.

திரவிய உறை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் ஒரு வஸ்து வென்னும் பிரதான கருவியாக்ய நினைவுடன் தன்னுட்டத்தைக் கலந்து கொள்ளும் விதம் என்ன மாதிரி நீ தான் விவரப்படுத்த வேண்டும்.

விடை:—கேளடா மஹஷூக்கானவனே! அதாவது நீ யாகிறவன் இந்த தூல சரீரத்துடன் என்னென்ன தொழிலில் யிருக்கின்றையோ! அவைகள் அத்தனையும் விட்டொழிந்து உன்னை சாஸ்பதமாய் உற்றுப்பார்ப்பாயானுல் அந்த மகாமில் வெறும் இருளேயன்றி வேறெருரு உபாதிகளையும் காண்கமாட்டாய்.

கருத்துரை

அவ்விதம் ஒருமையான நிலபரத்தில் தரிப்பையானுல் நீ பனுபடுத்திக்கொண்டு ஹக்கைக்கலந்து விட்டதான மேல் பதவியில் உயர்ந்து கொண்டாய். இதுதான் சாகுவதற்கு முன்

சாகிறது என்று ஞானவான்களெல்லாம் சொல்லிக்கொண்டு போனதும் இதுதான். எப்போது நீ மரண மென்னும் அருவருப்பான பானத்தை அநுபவிப்பதற்கு முன்னே இந்த விதமான வல்லமை ஹிக்மத்தால் மரணித்துக் கொண்டாயாகில் இனி ஒரு முறை உனக்கு அந்த அருவருப்பான மரணம் ஏற்படும் என்று நீ கனவிலும் நினையாதே. உதாரணம் கூறுகுடியார்:—

இஷ்டப்படிக்கு யாங்கொண்டு கொஞ்சவும்
எனக்கு பயந்து யமன் நின்று கெஞ்சவும்; (வங்கென்ற)

என்று சொல்லிப் போயிருப்பதை நீ சற்றுக் கவனித்துப்பார். உன் மனக்குழுதையானது உன்னைக் கண்ட மடடும் இழுத்துக்கொண்டு போய் உலக மருட்டென்கிற, பிங்காட்டளவில் விடும். அதிலெல்லாம் நீ மயங்கித் தியாதே ஒரு உப்புக் கல்லுக்கும் பிரயோசனப்படாது. பொய் என்பது கைமெய்யான இந்த அற்ப சொற்ப உலகத்தின் மாய சுகங்களை உன்புறங்காலால் தள்ளி ஒதிக்கி விட்டு தப்பினேன் என்று என்திரவிய ஞான மென்னும் ஆகாய விமானத்தில் வந்து ஏறிக் கொள். இதானது கூடிய சீக்கிரம் உன்னை ஹக்கில் கலக்கச் செய்து உள்ள படியே உனக்கு உரிய சுதந்திரத்தை வாங்கி உனக்குக் கொடுக்கும். அப்போது நீ காலகாலமும் அழியாவரம் பெற்றிருந்து சகல பேரின் பங்களையும் அனுபவித்து மற்ற சிருஷ்டிகளை யெல்லாம் ரக்ஷிக்கும் எஜமான் தனத்தில் தரித்து வெற்றி பெற்ற ஜயசீலனாய். இந்த மகாமில் தரித்திருந்து கொண்டுதான், மஹாத்மா ஷெய்குமண் சூறுல்ஹல்லாஜி "அனல்ஹக்" அதாவது நான்தான் அல்லா என்பவன் என்னும் அர்த்தம் புரிகிற ஒரு உண்மை வாக்கியத்தைச் சொல்லினர்கள். இதையும் நல்ல ஊன்றிக் கவனித்துப் பார்.

29-வது திருப்பாடல்

ஒன்றென்று சொன்ன வுயிர் நிலை யென்னடி சிங்கி அது
உன்னு லுதிப்பல முன்னலி நினைவடா சிங்கா

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! நீ ஒன்றென்று சொல்லிக்கொண்டு வந்த அந்த நினைவென்னும் உயிர் நிலையானது கருமத்தில் எதுவாக இருக்கும்? அதை விஸ்தரித்துச் சொல்.

விடை:—கேளடா மஹஷூக்கானவனே! அதாவது உன் சரீரம் விகசித்து உதிப்பாகும் முன்னமே உற்பத்தியான நினைவாக இருக்கின்றது.

கருத்துரை

ஒரு கருமத்தை உன்னி உதிப்பென்ற சப்தம் உண்டாகுவதற்கு முன்னமே அந்த உதிப்பை எண்ணிக் கொண்டு உன்னிற்றே! அதாவது தன்னுட்டமென்னும் நினைவாகத்தான் இருக்கும். இதை உன் மூளைக்கு எடுத்துப்பார் அப்போது தெரியவரும். இன்னும் நல்ல கவனித்துப்பார். நீ ஒரு இடத்துக்கு போகும்போது உன் சரீரத்தை எது நடத்துகின்றதோ, அதுதான் நினைவு. அந்த நினைவு எண்ணி தன்னளவில் உன்ன அதாவது பூதநப்ஸுகளுக்கு உதிப்புச்செய்ய, நப்ஸுகள் எழுந்து சரீரகனத்தைத் தூக்கிக் கொண்டுபோகும். அதனால் சரீரம் என்பது ஒரு கட்டைத்துண்டு என்றும், அதற்குள்ளிருந்து ஆடுகிற நெருப்பு, காற்று, தண்ணீர், மண் நான்கு பூத சக்திகளும் இந்த சரீரக்கட்டையைத் தூக்கி எடுத்து இழுத்துச் செல்கின்றன. அப்படி இழுத்து கொண்டு போகும் பூதசக்திகளுக்கு அறிவைக் கொடுத்து அதனதன் காரியங்களை நல்ல ஒழுங்காக நடத்திக்கொண்டு போகும். சக்காவ் என்கிற மேல் சக்தியானது அந்த நினைவாக இருக்கும். அந்த நினைவு ஒன்றே சரீரத்தின் தலைமைத் தனத்திற்கும், உலகங்களின் சிருஷ்டிப்பிற்கும் காரண காரியமாக நின்று பராபரிக்கின்றது என்று சந்தேகமறத் தெளிந்து, இருதயத்தில் உறுதியுடன் ஒப்புக் கொண்டு அறிந்து, தன்னை அதனுடன் கலந்து கொண்டு நிர்மலமாய் ஊசாட்ட மொழிந்திருப்பதுதான் தவநிலை.

ஆரப்பா! இந்த ஞானத்தெளிவை அறிந்துக்கொண்டு தவத்தில் முயலுவையாகில் இதுவே தவம். வேறே நாட்டில் மலையில்

போய் என்ன செய்யப்போகிறும்! அங்கு போனலும் இதைத்தான் செய்வது. சில மஹான்கள் அவ்விதம் காட்டில் வனத்தில் சென்றும் தவஞ்செய்திருப்பது உண்மைதான். அது ஒதற்காக வேண்டி என்றல், இந்த மாறுட்ட உலக காமியங்களில் மனமானது செல்லாமலும், கண்புலன் செவிப்புலன் மூதலிய அவயங்கள் வீண் மருட்டலான செய்கைகளில் அகப்படாமலும் வைராட்டமற்றிருப்பதற்கேதான், அதை நல்ல சமிக்கையாகத் தெரிந்து கொண்டார்கள். ஆனபடியாலே நீ எப்படியாவது உன் நாற்ற துடக்கைக் கழுவி துப்புறவு செய்துக்கொண்டால் நீ காட்டில் இருப்பதும் வீட்டில் இருப்பதும் இரண்டும் ஒன்றுதான். இன்ஸான் என்பவன், அவன் விதைந்து வந்த அசுத்த உதிரத்தின் தூர்விநியோமான துடக்கை கழுவிக் கொள்ளாத பட்சத்தில் எந்த விதத்திலும் காரியம் சித்தி பெறமாட்டாது. சிருத்தல் முஸ்தக்கீன் பாலம் என்ற சுழிமுனை வைக் கடந்து மோட்ச மடையவும் இயலாது என்பதாம்.

30-வது திருப்பாடல்

கன்னி யெழுந்து கலந்திட மெவ்விடஞ் சிங்கி அது
உன்னி யெழுந்த உயிர்நிலை யல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானலே! கன்னி என்கின்ற வாலை மனேமணியானது உதயமாகிக் கலந்த இடமானது சரீரத்துள் எந்த இடமாக இருக்கலாம், அதை விபரித்து விடுவாயாக.

விடை:—கேளப்பா மஹஷூக்கானவனே! அதாவது உன்னுடைய இருதயக்கமலத்தில் நின்றும் உன்னல் உண்டாகி அப்பால் உதிப்புண்டாகிற உயிர் நிலையாக இருக்கும் என்பதாம்.

சுருத்துரை

வாலைமனேமணி என்பது இந்த ஜடலத்தில் ஆதிவஸ்துவாய் நிரம்பிய பிரதான பிரம்ம ஆத்மாவாக இருக்கின்றது. அந்த பரமாத்மாவானது நினைவென்னும் தன் நாட்டமாய்ப் பூரணித்திருக்

கின்ற நூஹுல்துஸியாக இருக்கும். எப்போது இன்ஸான் என்பவன் தன் சுதந்தரங்களே இன்ன தன்மை தான் என்று அறிய வில்லையோ, அதுமட்டிலும் வல்லமைத் தன மில்லாத பேடியாகத் தான் இருக்கின்றன். ஆனபடியாலே அந்த தன் நாட்டமானது ஒரு ஸ்திரீயின் ஸ்ரூபத்தில் வெளியாகும் என்று ஞானவான்கள் ஒதமித்துக் கூறினது நம்பிக்கையான உறுதி என்பதற்குத் தடையில்லை. இதைத்தான் மஹரின் கவுரார் தமது பூஜாவிதியில்,

''வாமியிவள் வாமம்வைத்துப் பூசைபண்ண
மதியுனக்கு வேண்டுமடா வதிகமாக
காமியிவள் வெகுகாமி சிவகாமிரூபி
காணரிது கிறுபிள்ளே கன்னிகன்னி
ஆமிவளே யறிந்தவர்கள் சித்தர்சித்தர்
அறிந்தாலு மன தடக்க மறியவேணும்
நாமிவளே பூசைபண்ண நினைத்தவாறு
நாட்டிலே சொல்லவென்றல் நகைப்பாரேகாணே.

என்று சொல்லிப் போயிருக்கின்றார். ஒருமனிதன் தனக்குள்ள சர்வ சுதந்தரங்களேயும் ஞான குருவென்னும் அறிவினல் அறிந்து பரத்தோடும் பரமாய்ச் சேர்ந்து கொள்ளும் வரையிலும் அவன் எப்பேர்ப்பட்டயோகியானலும் சரி, அரசனலும் சரி, மற்றபடி எவனலும் சரி, அவன் அடிமைத்தன்மை என்கின்ற கீழ்ப்படியில்தான் இருக்கிறன் என்பதாம்.

31-வது திருப்பாடல்

எங்கும் பரந்த பெரும்பொரு ளென்னடி சிங்கி அது
அங்கிங்கு மெங்கு மகண்ட பெரும்வெளி சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! ஏழை வஸ்தை நோக்கினலும் தானுக நிற்கின்ற பெரிய பொருளான தென்ன, அதை இன்ன தென்று வெளியாக்கி விடுவாயாக.

விடை:—கேள் மஹரிஷிக்கானவனே! அதாவது ''அங்கு என்றசொல்லும் நாட்டத்திலும், இங்கு என்று சொல்லும் தேட்டத்திலும் இருந்து வெளியாகிவந்த மஹாபாரதூரமான பெரிய ஆகாயமாகிய நினைவாக இருக்கும் என்பது.

கருத்துரை

அங்கு என்பது நாட்டமென்று எப்படி யாருமென்றால், அங்கு என்று சுட்டிக்காட்டின ஞானச் சொல்லானது, தகப்பனுடைய மூளையிலிருந்து விளைந்த இந்திரியமாக இருக்கும். அப்பால் இங்கு என்றசொல்லானது தாயுடைய உதிரத்தில் கர்பமாயிருந்த அந்த இந்திரியத் துளியானது இந்த மனித ஜடலத்தை யெடுத்துக் கொண்டதே அதுவாக இருக்கும். எங்கு என்ற சொல்லானது இந்த பூலோகத்தில் மானிட கோலத்தில் வந்து சகல வஸ்துக்களிலும் நிரைபூரணமாய் நின்றதே அதுவாக இருக்கும். நீ ஊன்றி உணர்ந்து கொள் என்பதாம்.

———

32-வது திருப்பாடல்

அன்று மின்றுமழி யாப்பொரு ளென்னடி சிங்கி இரு
கண்ணையு மூட விருள்ளழி யாப்பொருள் சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! எக்காலத்திலும் அழியாமல் நித்தியமாய் இருக்கப்பட்ட வஸ்தானது என்ன வென்று சொல் வாயாக.

விடை:—கேள் மஹரிஷிக்கானவனே! அதாவது நீ இரண்டு நேத்திரங்களையும் மூடிக்கொள். அப்போது உனக்கு ஏக இருள் மயமாகத் தெரியும். கண்மூடினபிறகு இருளாக இருப்பது எப்படித் தெரிந்தது. அதை ஒரு அகக்கண் பார்க்கின்றது என்பதை நல்ல ஸ்பஷ்டமாய்த் தெரிந்து கொண்டாய் அல்லவா

அந்த இருளாக தான் இருக்கும். அதுதான் என்றைக்கும் அழியாமல் நித்தியமாய் நிற்கின்றது என்பதாம்.

கருத்துரை

அந்த மனக்கண் என்ற நினைவு தான் ''தான்'' என்றது, அதை உணர்ந்து அத்துடன் கலந்து கொள்ளும் பட்சத்தில் சரீரம் பொன் மயமாய் கற்பமாய்விடும். அப்போது அந்த நினைவானது அழியாபல் நின்ற பான்மைபேல் தானும் தன் சரீரமும் அழியாமல் எக்காலமும் நித்திய வாழ்வைப் பெறுவாய் என்பதாம்.

33-வது திருப்பாடல்

ஆங்கார வுடலுக்கு மாணிதா னென்னடி சிங்கி அது
ஒங்கார மூலத்தி னுள்ளொளி யல்லவோ சிங்கா

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த ஆங்காரமுடைய சரீரத்திற்கு ஆணிவேரென்பது என்னதாக இருக்கும். அதை விபரித்துச் சொல்.

விடை:—கேள் மஹரிஷிக்கானவனே! அதாவது ஒங்காரம் என்று சொல்லப்பட்ட மூலாதாரம் என்றும், ரூஹு என்றும், உள்ளுக்குள் உள்ள ஒளிவாக இருக்கும் என்பதாம்.

கருத்துரை

மூலாதாரத்தின் உள்ளொளி என்பதைப் பற்றி முன் சைட்டுகளில் நல்ல தெளிவாகச் சொல்லி யிருப்பதினாலே இங்கு காட்ட வேண்டியது அவசியமில்லை என்பதாம்.

34-வது திருப்பாடல்

ஆணியாய் வந்த வரும்பொரு ளென்னடி சிங்கி முன்
தோணிய சற்குரு மூதனுமை மல்லவோ சிங்கா

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் ஆணிவேரான மூலாதார ஒளிவு என்பது என்ன அருமையான பொருளாக இருக்கும். அதை அறிந்தால்தான் சந்தேகமறும் ஆனபடியாலே அதைத் தெளிவுடன் சொல்ல வேண்டியது.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது உன்னுடைய சுதந்திரத்தை இன்னமாதிரி என்று ரூபித்துக்காட்டின அந்த சற்குருவாகிய அறிவென்னும் குண்டலியின் திருநாமம் என்கின்ற "ஹூம்" என்றதாக இருக்கும் என்பதாம்.

35-வது திருப்பாடல்

இந்தப் பொருள்வந்த தெந்த வழியடி சிங்கி அது
அந்தக் கதிர்மதி வந்த வழியடா சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்துள்ளே மூலாதார ஒளிவானது வந்தது எந்த வழியாக இருக்கலாம். நல்ல விபரமாக சொல்லி அருள்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது சூரியர் சந்திரர் எந்த வழியாக வந்தனவோ அதே வழியாகத்தான் இருக்கும் என்பதாம்.

கருத்துரை

சூரியன் எவ்ருல் என்ன, சந்திரன் என்ருல் என்ன, அவை இந்த ஜடலத்துள் என்ன விதமாக நின்ருடுகின்றன, எதிர

கேட்பாய். அதன் விபரம், தகப்பனுடைய சுக்கில இந்திரியமானது சூரியனும், தாயுடைய சுரோணித இந்திரியமானது சந்திரனுமும். அது ரூபத்தில் வலது பக்க நாசியில் ஓடும் சுவாசம் சூரியனுகவும், இடதுபக்க நாசியில் ஓடும் சுவாசம் சந்திரனுகவும் இருக்கும் ஆகையால் இவை இரண்டுந்தான் ரூஹ் ரூஹானி என்னும் இரண்டு ஆத்மாக்களாக இருந்து சரீர நடவடிக்கை நடத்துகின்றது. இதுதான் மூலாதார ஒளி என்று ஞானிகள் மொத்தத்தில் சொல்கிருர்கள். தமிழ் ஞானிகள் இதைத்தான் ஒங்காரவட்டம் என்றும் சொல்வார்கள்.

காரியம் இவ்விதம் நுழைந்து கொண்டிருப்பதாலே. நீ இதன் வகுப்புகளைச் சிறுகச் சிறுக உணர்ந்து நாளா வட்டத்தில் வஸ்தைத் தெரிந்து கொள்வையேயானுல் எல்லாம் உன் கைவசம் சிக்கிக் கொள்ளும். அப்பால் நீ மேல்மீசை முளைத்த ஆண்பிள்ளையாவாய் நான் சொல்லும் ஒவ்வொரு கடவான உடைவுகளையும் நல்ல மனங்கவிந்து பார்த்தால், அது உனக்கு அகப்படும். ஏனென்ருல் நீ பூலோக மாயம் என்ற பொய் நாற்றக் கருவாட்டை வாங்கிலேவாதேவி செய்தவன். ஆனதாலே இந்த மேன்மையான ஞானம் என்ற மாணிக்கத்தை மதித்துக்கொள்ள இலேசில் முடியாது. நல்ல ஞான்றி உணர்ந்து பார்த்து மதித்து மனதில் பதியும்படி பதித்து வைத்துக் கொள்ளப்பா என்பதாம்.

36-வது திருப்பாடல்

கந்த ளெளிவு கலந்திட மெவ்விடம் சிங்கி அது
வந்த நடனந்தா னுடிய தற்பரஞ் சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! அப்படிப்பட்ட ஜடல கர்த்தாவாகிய ஒளிவானது எந்த இடத்தில் வைத்து இந்த தேஹத்துடன் கலந்துக்கொண்டது.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! ''தஹ்துல் மௌஜூத்'' என்னும் ரூஹுல் குதுஸியானது நின்று நடனமாடக்கூடிய தற்பரம் என்ற தன் கொலுவான இருகேத்திரங்களில் வைத்தே இந்த ஜடலத்தில் அது கலந்து உதய மாகிக்கொண்டு ஒளிமறைவாக நிற்கின்றது. ஆனால் அதுவே சூரியகலையாக இருக்கும். அதை அநுசரித்து நடக்கின்ற ரூஹானி என்பது சந்திரனில் கலந்து உலக நடவடிக்கைகளே நடத்தாட்டி வருகின்றது. ஏதவத்தில் குடிகொண்டு மிதக்கவந்தவனே! சந்திரனுடன் கலக்கின்ற ரூஹானி என்பதை முதலாவது வேறுடன் பிடுங்கி எடுத்து விடுவது முக்கிய கடமையாக இருக்கும். ஆனபடியினாலே நீ அந்தப் பெண்தன்மையான ரூஹானி யின் ஆட்டத்தை ஒடுக்கி விட்டு பார்ப்பாயானால் அப்போது தான் உனக்கு அந்த வல்லமை விளங்கும் என்பதாம்.

———

37-வது திருப்பாடல்

உற்ற பொருளுக் குயிரெழுத் தென்னடி சிங்கி அது
நச்சர வாடும் நடுநிலை யல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! நீ இதுமட்டிலும் மேலே சொல்லிக்கொண்டு வந்த நீதிப்பொருளாகிய அந்த வஸ்துக்கு உயிர்நிலையானது என்ன.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது விஷப்பாம் புக் கொப்பாகிய சுழிமூனைக்கு நேரேதெரிகின்ற (கரபகௌஸைன்) என்கிற புருவமத்தியாக இருக்கும்.

கருத்துரை

விஷப்பாம்புக் கொப்பென்று ஆசிரியர் சொன்னதாவது:— அதைஅறியாத பாவிகளே அந்திகாலத்தில் அதுவே அபாயம் செய்து

விட்டதினாலே அவ்விதம் சொன்னார்கள். இதன் பயன்களே புத்தி மான்கள் உணர்ந்து தெளிந்துகொள்ள வேண்டியது என்பதாம்.

———

38-வது திருப்பாடல்

எட்டெழுத் தாக வெழுந்த வெழுத்தென்ன சிங்கி அது
மட்டி லடங்கா வடிவட்ட கோணமே சிங்கா.

திரவிய உரை

வினா—ஆமா ஆஷிக்கானவளே! எட்டு எழுத்தாக இந்த ஜடலத்தில் எழுந்த எழுத்தாகிறது என்ன, அதன் மர்மங்களாவது என்ன, அதைச் சொல்ல வேண்டும்.

விடை:—கேள் மஹஷிக்கானவனே! அதாவது ஒரு மட்டி லடங்காத இன்ஸான் வடிவென்கிற எட்டுக்கோணமென்னும் அஷ்ட உருப்புகளாக இருக்கும். இதன் மர்மங்களைப் பற்றி விபரம் அறிய வேண்டுமானால் ஹக்கீகத்துல் இன்ஸானில் பார்த்தால் இதன் தெளிவைக் கண்டு கொள்ளக் கூடுமென்பதாம்.

———

39-வது திருப்பாடல்

அஞ்செழுத் தாக வமைந்த எழுத்தென்ன சிங்கி அது
அஞ்சும் பொருந்திய வாகாய வட்டமே சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! எட்டெழுத்தின் காரணவிபரங்களைப்பற்றிச் சொன்னது போல் அஞ்செழுத்தாக ஜடலத்தில் பொருந்திய ஒரு ஸ்தலத்தை ஒரே எழுத்தாக சூரத்துப்படுத்திச் சொல்ல வேண்டும்.

விடை:—கேளடா மஹஷிக்கானவனே! அதாவது வெள்ளை வட்டம், சிகப்பு வட்டம், பச்சை வட்டம், கருப்பு வட்டம், இந்த நாலுக்கும் அடங்காமல் நேராக நடு நேத்ர பத்திபத்தில் நீலவட்டமாகத் தோன்றி அறுஷேமு அல்லாவில் ஒரு நுக்தா ஸ்ரூபத்தில் அரூபமயமாய் தெரியுப்படியாய் அமைந்த அஞ்செழுத்திலும் கூடித் திரண்ட பிஞ்செழுத்தாக நிற்கும் கோலத்தைப்பார்! இதுவே கருத்தாகவும் சொல்லி வந்ததை நல்ல ஊன்றி உணர்ச்சி செய்து கொள்ள வேண்டியது. மஹரிபத்தைப் பிடித்தவன் தைரியத்தையும் கையிருகப் பிடிக்க வேண்டியது. வைராக்கியம் ஞான ரஸ்தாவின் கூட வருந்துணையாக இருக்கவேண்டும் என்பதாம்.

———

41-வது திருப்பாடல்

அன்பத் தோரட்சர மறியநீ சொல்லடி கிங்கி அது
வஞ்ச மகார நடுச்சுழி மூன்றுமே சிங்கா.

திரவிய உரை

வினா:— ஆமா ஆஷிக்கானவனே! இது மட்டிலும் நீ சொல்லி வந்த தீர்ச்சையான தெல்லாம் உண்மையே. அதில் முக்கியமாய் அறியவேண்டிய ஐம்பத்தோரட்சரமாக இருப்பதால் அதை நல்ல விளக்கி சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஹஷிக்கானவனே! அதாவது அஞ்சம் அகாரம் யாதெரு அச்சமில்லாத அலிபுடைய நீட்டத்தின் பாதையான நாசித்துவார நுணிக்கு நேரான நடுமத்திபத்தின் இரண்டு ஐன்யென்னும் கண்ணாக இருக்கும். ஒன்று அலிபாக இருக்கின்றது என்பதாம்.

கருத்துரை

இதன் உள்கருத்தை தன் பிர்மார்களின் சமூகத்தில் நேரில் கண்டறிய வேண்டியது மூன்று வகையாக இருக்கின்றது, அதாவது, ஒன்று புருவமத்தி, மற்ற இரண்டும் கண்களாக இருக்கும்.

41-வது திருப்பாடல்

கற்பக வாசி கலந்திட மெல்விடஞ் சிங்கி அது
உற்பன மூலத்தி னுள்ளொளி வல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த சரீரத்திற்கு சுவர்க்கமாகிய வாசியானது கலந்து நிற்கின்ற இடமாகிறது எது

விடை:—கேள் மஹஷிக்கானவளே! அதாவது இந்த சரீரம் உற்பத்தியாய் வந்தபோதே ஒன்றுகச் சமைந்து நின்ற மூலாதாரமானதாக இருக்கும்.

கருத்துரை

சுவாசத்தின் அடிமூலமாகிறது ஜடலத்தை உற்பத்திசெய்த மூலவஸ்தாகிய ஆறு ஆதாரகளில் நின்றும் உதயமாய் வருகின்றது என்பதாம்.

———

42-வது திருப்பாடல்

சத்தம் பிறந்திடுஞ் தலமேதும் சொல்லடி சிங்கி அது
உற்றசுவாச மூயிர்நிலை யல்லவோ சிங்கா.

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! ஜடத்திற்குள்ளே உதிப்பாகி மொழிச்சலானது எந்த ஸ்தலந்தில் நின்றும் உதயமாய் வருகின்றது சொல்லி விடுவாயாக.

விடை:—கேளடா மஹஷிக்கானவனே! அதாவது சந்திர சூரிய கலைகளான இரண்டு இருதய குழாய்களின் வழியாக மூச்சு ஓடிவரும் கற்பின் இந்திரியத்தில் நின்றும் உதிப்பாகிறது.

கருத்துரை

உயிர் இரண்டு வகைகளாக நிற்கிறது. அதில் ஒன்று றூஹு, மற்றொன்று றூஹானியாக இருக்கிறது. றூஹ் சூரியன், அதாவது உஷ்ணநாடி. றூஹானி சந்திரன், அதாவது சிலேஷ்மநாடி. ஆகிய இவ்விரண்டும் ஒன்றுகூடி வருகிற ஸ்கலந்தான் உந்திக்கமலம் என்று எல்லோரும் சொல்லுகிற நுரை ஈரலாக இருக்கும்.

அப்பா! நீ முக்காரணம் போட்டாலும் இந்த மானிட உலகத்தில் ஒரு குருவானவன் இந்த மாதிரி தெளிவாக அவிழ்த்துச் சொல்லமாட்டான். இதை நீ கண்ணாலே பார்க்கும் படியான ஒரு பாலத்துரை இருக்கிறது. அந்தத் துரையில் உன்னை நிற்பாட்டி இதோ பார் என்று காட்ட முடியும். அதற்கு நீ நம்மிடம் வரும் போது இந்த உலகப் பொருளில் ஒரு கனத்ததுகை நமக்கு நாட்டமிருப்பதனாலே அதற்கு சக்தி உள்ளவன் மேற்படி துகையைக் கொண்டு வந்து வைத்துக் கேட்டால் காட்டுகின்றேன் என்பதாம்.

43-வது திருப்பாடல்

கண்டு தொழுஞ்சிவ காரண மேதடி சிங்சி நம்மை
யுண்டு படுத்திய வுள்ளொளி வாதே சிங்கா

திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இருக்கண்ணாலே கண்டு உருதிகொண்டு வணங்கக்கூடிய றப்புடைய வெளிச்சம் இந்த ஜடலத்தில் என்ன மூல காரண கருவியாக இருக்கிறது, அந்த இன்னதென்று சொல்வாயாக.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இந்த ஜடலத்தில் ஒரு சிறுதுளியான இந்திரியத்தினாலே கற்பகக் குவளையில் வைத்து உண்டுபடுத்தி விட்ட உள்ளொளிவாகிய றூஹால் குதுஸியாக இருக்கும்.

கருத்துரை

இந்த ஜடலத்திற்கு ஆதிகாரண வஸ்துவாக நின்று கமைப்பித்த உஷ்ண நாடியானது இரு நேத்திரங்களுக்குள்ளும் நின்று ஒளி செய்கின்ற படியாலே அதைக் கண்ணாலே கண்டு சந்தேகமற ஈமான்னுடன் ஒப்புக்கொண்டு அப்பால் அத்துடன் விரவிக் கொள்வதற்குரிய உபாயங்களைத் தேடவேண்டியது. அதுதான் மஹறிபாவாக இருக்கும். இதல்லாத மற்ற எவ்விதப் பாதைகளும் சரியானதல்ல. இன்ஸான் காமில்காரரும் இதையே வற்புறுத்துகிறார். அல்லாவும் குர்ஆனில் இதையே சமிக்ஞை செய்கின்றான். அறிவுடைய சீதேவிகள் கண்டுபிடித்துக் கொள்ளவும் என்பதாம்.

44-வது திருப்பாடல்

எப்படிக் கண்டே யிறையை வணங்குவ தம்சிங்சி அது
நட்புடன் ரண்டு நடுநிலை காண்பது சிங்கா.

திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இறை என்கிற பரிசுத்த வஸ்துவை என்ன விதமான தோற்றத்தில் கண்டு வணங்குகிறது அதை இன்னவிதம் என்று சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இந்த ஜடலத்தின் பிரதான கருவியாக அமைந்து சீர உருப்புக்களை நட்டத்தாட்டி வருகின்றதே அந்த இரண்டு நேத்திரங்களே உறுதியான ஜனுல் எகீனை ஈமான்கொண்டு, அதனுள் நின்று சராசரிகளைலாம் இலங்கிக் கொண்டிருக்கின்ற றூஹால் குதுஸியைத் தெரிசிக்கின்றதாக இருக்கும் என்பதாம்.

கருத்துரை.

நேத்திரங்களில் சுயப்பான பளிக்குச் சுடர்போல் கலப்பற்று நின்று துலங்கி வீசாநின்ற தாத்துர் றஹ்மானியாவைக் கண்ணாலே

கண்டு லுகாவுடைய நேரத்தில் தெரிசித்து வைராகிய நிலையுடன் இஷ்க்கின்புரத்தால் தன்னுட்டத்தில் வைத்துப் பாராட்டித் தாரா ட்டினால் அப்போது வேற்றுமையான அமா பனுவாகி தன்னுட்டமே தானென்ற நிலைவாகி ஒன்றுபட்டு விரவிக் கொள்ளும். அப்பால் அந்த மகிமையை என்னவிதம் என்று சொல்ல முடியும். அனுபவித்த வல்லமை வஸ்துதான் அரியும் என்பதாம்.

45-வது திருப்பாடல்

நடுநிலை யானதை நாடுவ தெப்படி சிங்கி அது
நாட்டந் தேட்ட மோட்ட மாட்ட மொன்றுகினுல் சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! இரண்டும் நடுநிலை என்பதைத் தீர்ச்சையானபடி சொல்லிவிட்டாய் அதன் படி அதை நாடிப் பிடிக்கும் உபாயம் என்னவிதம் அதை அறிவித்துவிடு.

விடை:—கேளடா மஹஷிக்கானவனே! அதாவது உன்னு டைய வெளி அறிவாகிய வீண் நாட்டம் என்ற வெகுளி வெஞ் சாமை என்ற உபாதிகளையும், தேட்டம் என்ற உபாதிகளையும். ஓட்டம் என்ற சுவாச நிலை மையும் ஒன்று படுத்திக்கொண்டு நுழைந்து விடுகிறது. இதுதான் கமாலுற் றஹ்மானியா என்று பெரிய ஞானியார் சாகிபு அவர்கள் கடைப் பிடித்து கூறியிருக்கி ருர்கள் என்பதாம்.

46-வது திருப்பாடல்

தேட்டமு நாலுந் திருந்துவ தெப்படி சிங்கி அது
திருவைப் பொருந்தி யொருமித் திருப்பதே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்கானவளே! தேட்டத்துடன் நாலும் சரி வரத்திருந்தி வரவேண்டுமென்று சொன்ன அந்தபடி அந்நான்கு

கருவிகளும் ஒற்றுமைப்படும் அந்த சூட்சமத்தை மெதுவாக உடைத்துவிடு.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! திரு என்று மேலோர்கள் சொல்லிப்போன அந்த றூஹுலில் குதுஸியை இடிக்கில் வைத்து தாராட்டிக் கொண்டு விடாத வைராகியத்துடன் தியானித்திருக் கிறதாக இருக்கும்.

கருத்துரை

கரிய வண்டானது ஒரு சிறு கிரிமியைத் தூக்கிக் கொண்டு வந்து தன் மரத்துளையில் வைத்து கிர்ரென்று தாராட்டி யும் இஷ்க்கும் வைத்து ஆடின சிலகாலத்தில் சிறு கிருமி மேற்படி வண்டாகி பறந்து போவது போல், ஞானத்தை ஆராய்ச்சி செய்ய வந்த மகனே! நீயும் அதுபோல் உன் அசலியத் தான நேத்ர ஜோ தியின் ரதத்தின் பேரில் இஷ்க்கும் உறுதியும் வைத்து தாராட்டி வருவையே ஆனல் அதைம் போல் ஒளியமயமாய் விடுவாய் என்ப தாம்.

47-வது திருப்பாடல்

ஒருமித் திருக்கின்ற வோரிட மெவ்விடஞ் சிங்கி அது
வொன்று மிரவும் பகலு முதிப்பிடம் சிங்கா

திரவிய உரை

வினு:—ஆகா ஆஷிக்கானவளே! அவ்வித வைராக்கியத்தைப் பற்றிப் பிடித்திருக்கின்ற இணையற்ற அந்த திருஸ்தலம் என்னதான் அதை விபரித்துச் சொல்லிவிடு.

விடை:—கேளடா மஹஷிக்கானவனே! அதாவது இரவு பகல் என்று இரண்டும் எந்த இடத்தில் நின்றும் உதயம் செய்கின் றதோ அந்த இடமாக இருக்கும். இதன் விபரம் கீழ் பாராக்களில் அடிக்கடி கூறிவருகிறதினுலே இங்கு கருத்துரை சொல்லவில்லை என்பதாம்.

48-வது திருப்பாடல்

இரவும் பகலும் மென்ருன தெவ்விடஞ் சிங்கி அது
வெப்போது மிருளா மிருப்பது மூலமே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷுக்கானவளே! இரவும் பகலும் ஒன்ருகச் சேர்ந்து இருக்கின்ற நலமானதை விஸ்தரித்துச் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஉஷமிக்கானவனே! அதாவது எப்போதும் ஒரே இருள் மயமாக இருப்பது கபாலம் என்ற மூலமாக இருக்கும். மூலந்தான் இந்த ஜடலத்திற்கு உன்னத பீடமாக இருக்கும். அந்த மூலக்கு நடுவேதான் அறுஷேமுவின் உதய ஒளிவானது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதை எந்த விதமாக அறியவேண்டுமானுல், இருகண்கள் என்ற தேஜஸ் கண்ணுடிக்குள்ளே பார்த்தால் பளிங்கு விளக்குப்போல் தோன்றும். உடனே கண்டு ஈமான்கொள்ள வேண்டியது. இதைப்பற்றி குர்ஆனும் அதற்கு முன்வந்த மற்றும் மூன்றுவேத நூல்களும், இன்னும் பல்லாயிரங் கோடிக்கணக்கான ஞானகலைகளும் சாட்சி கூறுகின்றதை நல்ல மஹாத்துமாக்களே அடுத்துப்பார் கூறுவார்கள் என்பதே.

—o—

49-வது திருப்பாடல்

இரவும் பகலும் பிறப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
விருளி லுதித்துன்னி வந்த தடி மூலஞ் சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! இரவும் பகலும் உற்பத்தியான ஸ்தலமானது, எந்த ஸ்தலம். அதை நல்லபடியாகச் சொல்வாயாக.

விடை:—கேளடா மஉஷமிக்கானவனே! அதாவது இருளான மூலையில் நின்றும் உதித்து, அப்படல், அடி மூலமாகிய உந்திக் கமலத்தினிடமாக வந்து நிற்கின்றது. இந்த ரகசியம் அவ்வளவு பகிரங்கமாகச் சொல்லப்படாது என்பதாம்.

———

50-வது திருப்பாடல்

இரவும் பகலு மெழுந்திட மெவ்விடஞ் சிங்கி அது
எகாந்த வுன்னல்வந் தேறிய தாமரை சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஉஷமிக்கனவனே! நீ மேற்கூறிய இரவு பகல் என்ற கருவிகள் இரண்டும் எழுந்து நிலைதானது எந்த இடம் அதை நல்ல தெளிவாகவும், உறுதியாகவும் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது ஏகசொரூபத்தில் நின்றும் மூலையாகி, அப்பால் உதிப்பாகி, உதிப்பு நினைவாகி, நினைவு உன்னலாகி உதயமாகி எழுந்த தாமரைக்காயாக இருக்கும்.

———

51-வது திருப்பாடல்

இரவும் பகலும் பிரிந்திட மெவ்விடஞ் சிங்கி அது
எழுந்தறு கோணம் இடம்வலம் வாசியே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஉஷமிக்கானவனே! அந்த இரவு பகலானது பிரிந்து ஓடக்கூடியவை. இடமானது எது, அதை நல்ல விபரப்படுத்தி அருளவேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது ஆதியில் கன்சுல் மக்பிதாத்தாகிய இருளில் நின்றும் உதித்தெழுந்த உன்னலானது ஆறு ஆதாரம் என்னும் தத்துவ கருவியாக பிரிந்து கொண்டு இடம் வலம் உன்னும் சூரிய சந்திரர்களாகிய வாசியானது ஒன்று பட்டு நிர்க்கும் இடமாக இருக்கும்.

52-வது திருப்பாடல்

இரவும் பகலும்தின் ருடிய தெவ்விடஞ் சிங்கி அது
எழுந்து நின்ருடுஞ் சுழி முனை மண்டலஞ் சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்கானவனே! அந்த இரவு பகல்கள் ஒன்று சேர்த்து நின்ருடக்கூடிய இடமானது என்ன வென்று நீ சொல்ல வேண்டியது.

விடை:—ஆஷிக்கானவனே! அதாகிறது, இரண்டும் ஏகமய மாய் எழுந்து சூட்சியமாய் ஆடக்கூடிய சுழிமுனையென்ற மூக்கு முனையாகிய நடுஸ்தலமாக இருக்கும்.

———

53-வது திருப்பாடல்

இரவும் பகலு மிருப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
இராறு மோடிய வோரானை நான் கடா சிங்கா.

திரவிய உரை

வினு:— மஹஷிக்கானவனே! ஷி இரவு பகல்கள் எப்போதும் இருப்பாகத் தங்கி இருக்கும் ஸ்தலமானது எதுவாக இருக்கும் அதை சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது பன்னிரண்டு கலையாக ஓடிச் செல்லானின்ற சரீரத்தின் வேரான நான்கு பூதநாடிகளாக இருக்கும். விபரம் ஈராறு என்றது, சந்திரன் சூரியன் ஆகக்கூடி பன்னிரண்டு சரங்களாக இருக்கும். நாலு என்றது, மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகா நான்காக இருக்கும் என்பதாம்.

———

54-வது திருப்பாடல்

இரவும் பகலு முதிப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
எறுமெட் டங்குல மிருவிழி நடுநிலை சிங்கா.

திரவிய உரை

வினு:— ஆமா மஹஷிக்கானவனே! அந்த இரவு பகல் என்ற வைகள் உதயமாகி வருகின்ற ஸ்தலங்கள் எவை; அவை நல்ல தெளிவுபெறச் சொல்லவேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது, எட்டு அங்குல வடிவமாக கமான் வளைந்திருக்கானின்ற இரண்டு நேத்திரங்களில் நடுவாலே நின்று கற்பூரத்தீபம் போல் வெளிச்சம் செய்யா நின்ற மஹா இந்திர சொரூப வடிவாகிய ஹக்தர் நகுமானியாவில் நின்று மாக இருக்கும்.

சருத்துரை

விபரம் இதில் சொல்லப்போகுதல் மஹாரகசியமல்ல. காட்டானே ஷெய்கு முதலிய மஹான்கள் யாவரும் ஒருமித்துக் கூறிப் போயிருப்பதனுலே நான் இவ்விடத்தில் அல்லாவுடைய ரகசியத்தை பலரும் பார்க்கக்கூடிய இந்த பகிரங்க நூலின் வாயிலாக அவிழ்த்துச் சொல்ல வேண்டிய தவசியமில்ல. இது கைத்தெருவல்ல இதை அறியாத அநேக மூடாத்துமாக்க ளெல்லாம் முரீதை ஒரு வியாபாரமாக விற்று வயிறு பிழைத்து வருகிறார்கள். இதைச் சொல்வதற்காக வேண்டித்தான் நாயகம் முஸ்தபா ரஸூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களோ அல்லா, இரவில் தன் உதய பீடத்தளவில் வரவழைத்துப் பேசினுன். அதுதான் இரகசியம் பன்னிராயிரம் பேச்சென்று உலகத்தார்களுக கிடையில் வழங்கிற்று என்பதாம்.

———

55-வது திருப்பாடல்

இரவு பகலென்றென்னத்தைச் செல்லலாஞ் சிங்கி அது
இரவு பகல்யிட பின்கலை வாசியே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்கானவனே! நீ இது மட்டிலும் விபரித்துக்கொண்டு வந்த மேலான உடைவுகளில் ஒரு காரியம் முக்

கியப்பட்டதாக இருக்கிறது. அதாவது அந்த இரவு பகலென்றது மாநுட ஜடலத்துக்குள், என்னதாக இருக்கும் சொல்வாயாக

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இரவு சந்திர கலே பகல் சூரியகலேயாக யிருக்கும் என்று திட்டப்படுத்திக் கொள்வாயாக. இதுதான் இரவு பகல் என்று இந்த உலகத்தின் தோற்றத்தில் வருவதும் போவதுமாக நடைபெறுகிறது என் பதாம்.

56-வது திருப்பாடல்

இடகலே பின்கலே யென்னத்தைச் சொல்லலாம் சிங்கி அது
இடகலே சந்திரன் பின்கலே சூரியன் சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்கானவளே! இடகலே யென்றும் பின் கலேயென்றும் ஞானவான்கள் சொல்லிப் போயிருக்கிறார்களே அதை இன்னதென்று நீதான் விபரிக்க வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இடகலே என் பது இடது நாசியான துவார வழியாகப் போகின்ற சுவாசமாகிய சந்திரனுகவும், பின்கலே என்பது. வலதுபக்க நாசியின் துவார வழியாகச் செல்லும் சுவாசமாகிய சூரியனுகவும் இருக்கின்றது என்பதாம்.

57-வது திருப்பாடல்

என்னத்தைச் சொல்லலாம் சந்திரன் சூரியன் சிங்கி அது
இடவலி மாக எழுந்தோடு மூச்சடா சிங்கா.

இதன் தாற்பரியத்தை இதற்கு முதல் பாட்டில் உடன் இணைத்துச் சொல்லி வேண்டிதவசியமான படியாலே அவ்விதம் காட்டியாயிற்று, ஆனதாலே இதில் அர்த்தம் அமிழ்க்கவில்லே என்பதாம்.

58-வது திருப்பாடல்

சந்திரன் சூரிய னென்றுரை தெவ்விடம் சிங்கி அது
கலேயும் பொருந்து நடுச்சுழி மூலியே சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்கானவளே! அந்தவிதமான சந்திரன் சூரியன்கள் இரண்டு ஒன்றுகக் கலந்து நிற்கின்ற ஸ்தல மானது எது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதானது கழுத்தள வுக்கு மேலே உள்ள எழுவான் மண்டலமாகிய தலேக்கு நடுவே பூதங்கள் ஐந்தும் ஒன்றுபட்டு வாசஞ்செய்கின்ற சுழி முனே என் னும் நாசிநுனிக்கு நேரே நடுவாந்திரமாக இருக்கும் காப கைலஸன் என்னும் புருவமத்தியின் மூலேயாக இருக்கும் என்பதாம்

59-வது திருப்பாடல்

எண்ணத்தி லேபால மேறிநின் ருடுது சிங்கி அது
உண்ணுக்குள் வாசி நடனப் புரவிமேற் சிங்கா.

திரவிய உரை

வினு:—ஆமா மஹஷிக்காவளே! நீ இது மட்டும் சொன்ன தெல்லாஞ் சரி, இப்போது ஜடலமென்ற ஸ்தூல ஆதமியானது என்ன வஸ்துவின் மேல் சவாரிசெய்து இந்த ஆலமென்ற மாய்கை பாலத்தில் எறி நின்று ஆடிக்கொண்டு வருகிறது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது உனக்குள்ளே பன்னிரண்டு சரங்களாகப் பிரிந்தோடும் சுவாசமென்ற நிட்டியக் குதிரையின்மேல் ஏறி நின்று ஆடுகிறது பார். இதன் விபரத்தைக் கண்டவர்கள் இந்தப் பூலோக மாயவலேயைக் கிழித்துக் கொண்டு போய் விடுவதற்குச் சந்தேகமில்ல என்பதாம்.

60-வது திருப்பாடல்

என்ன விதமாம எடுத்துநின் ரூடலாம் சிங்கி அது
ஏற்றவு மாற்றவு மிணங்கிநின் ருடிப்பார் சிங்கா.

திரவிய உறை

விஞ:—ஆமா மஹஷிக்கானவளே! அந்த வாசி என்ற நடன சக்கிரத்தை எடுத்தாடுகிற விதம் என்ன மாதிரி.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இல்லல்லா என்று எற்றி ஹூ என்று இறக்கி விடுகிறது. இப்படியாகப் பழகிக்கொண்டு வருவதுதான் இன்ஸான் கோலத்தை மறதி என்பதை விட்டும் மாற்றிப் பிடிக்கிறதாக இருக்கும். இதன் முழு தாற்பரியங்களையும் நான் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்ற ஞான மணிமாலை தாற்பரிய உரையில் நல்ல வெட்ட வெளிச்சமாக எழுதிக்காட்டி யிருக்கின்றேன். அதில் போய் பார்த்துக்கொள்ள வேண்டியது என்பதாம்.

61-வது திருப்பாடல்

மாற்றிப் பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி அது
மாளாமல் மாண்டு மறந்து மிருப்பது சிங்கா.

திரவிய உரை

விஞ:—ஆமா மஹஷிக்கானவளே! அந்தப்படியாக மாற்றிப் பிடிக்கிற ஸாதனம் எப்படி செய்தால் அது மாறும், அதற்கு உபாயங்கள் என்ன.

விடை:—கேளடா ஆஷிரீகானவனே! அதாவது சாகாமல் சாகிறது. கருத்தாகிறது என்னவென்றால் இந்த துனியாவின் ஆசாபாசங்கள் அற்று ஒரு இடத்தில் தனித்திருந்து "நான்" என்கிற அஹங்காரத்தைப் பஸ்ம செய்கிறதாக இருக்கும் என்பதாம்.

62-வது திருப்பாடல்

அட்ட கஜங்க ளறிந்திட மெவ்விடம் சீங்கி அது
எட்டு விதமாக எழுதும் பலடா சிங்கா.

திரவிய உரை

விஞ:—ஆமா மஹஷிக்கானவளே! இன்ஞொரு விடையைப் பற்றிக்கேட்கிறேன். அதாவது அஷ்டகஜங்கள் என்று ஞானவான்களின் சபையில் பேசிக்கொள்ளப்படுகிறதே! அதன் கருத்து என்னதான் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது உன்னை இன்ஸான் மக்பியாகிய கைபான நிலையில் நின்றும் இன்ஸான் ஜடலமாக உற்பத்தி செய்த தாத்துர் நகுமானிய வானது எட்டு விதமான மதங்கொண்டு எழும்பி சிரத்தில் எட்டு ஸ்தலங்களைச் சமைத்து எட்டு வகையான கற்பனையில் எழுதியிருந்த ஸாஸனத்தில் எழுதி முடித்து வெளியாக்கிற்று. இதுதான் அஷ்டகஜம் என்பது. இது ஜடலத்தில் ஏண்கோணமாகப் பிரிந்து ஸ்தூலத்தின் அஸ்தி பாரமாக நின்று கொண்டிருக்கின்றது என்பதாம்.

63-வது திருப்பாடல்

உற்ற ஞானப்பொரு ளுத்தியஃப் சொன்னதார் சிங்கி அது
உத்தமர் பிருமு ஹப்ம துரைத்தது சிங்கா.

திரவிய உரை

விஞ —ஆமா மஹஷிக்கானவளே! இந்த மஹா ஞான புதையலான இரத்னக் குறவஞ்சியை இந்த பூலோக வாசிகளுக்கு அவசியம் வேண்டி தெய்வ ஸாதனமாக செய்து உதவிய மஹான் யார் தெரியுமா அவர்களைச் சொல்வதாக.

விடை: - கேளடா ஆஷிக்கானவனே! அவர்கள் யார் தெரியுமா, அவர்களாகிறது இமாம் ஹல்லாஜி மன்ஸூர் அனல்ஹக்கத்துல்லாஹி

உடைய ஞானத்துரையில் மூழகிய சங்கைக்குரிய சற்குரோதயத்தை வாய்ந்துள்ள ஸ்ரீமத் ஞானமணிக் கர்த்தாவாகிய நாயகம் தற்கலே உத்தமசீல விசுல மேதாவாகிய பீர்முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்களாக இருக்கும் என்பதாம்.

இந்தக் குறவஞ்சியின் திரளிய உரையை ஆராய்ச்சி செய்கிற தற்கு வந்த மகனே! நான் இதில் கொட்டிவைத்திருக்கின்ற நிரவியங்களே அள்ளிக் கொள்ளையாடிக்கொள். ஞானமணி, பிஸ்மில குறம், மஅரிபத்துமாலை, ஞான முச்சுடர் பதிகம், ஞான குறம் ஞான பால், ஞான பூட்டு, ஞான ஒப்பாரி, முதலிய அரிய பெரிய ஞான வேதங்களில் நான் நுழைந்து முடிகளைத் திறந்து விட்டிருக்கின்றேன், அவ்லுடைய ஆண்பிள்ளையாக நீ இருக்கும் பட்சத்தில் தேவையான அளவு அள்ளி வாரிக்கொண்டு பதனமாக வைத்து எஞ்ஞான்றும் அழியாத செல்வாக் குள்ளவனாக நிலைத்துக் கொள்வாயாக ஆமீன் என்பதாம்.

ஞானரத்தின குறவஞ்சி,

ஞானதிரவிய உரை

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

2-ம் திருப்பாடல்

ஞான ஆநந்தக் களிப்பு

2-ம் அவதாரிகை உரை

—— o ——

தீன் தீன் முஹம்மது தீனே - எங்கள்
தீனெங்கள் தீனெங்கள் தீனெங்கள் தீனே
தீன் தீன் முஹம்மது தீனே. (தீன்)

நீனபி யன்ன குருவாய்த்-நிசை
ஆயிரத் தெட்டும் ஜபறூத்தி லாடித்
தாளெளி தான்கண்டு கூவ - இறை
தானவ ஞசையால் நோக்கியே பார்க்க
ஆன புகழிறை யாசை - அந்த
அன்னத்தின் மீதி லனுப்போற் றரிக்கத்
தானே கடாய் வழிந்து - கடற்
றன்னிற் றரித்தானைக் கண்டுகொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) இந்த வரையானது ஆசிரியரின் சொந்த ஞானக் கருத்தைப்பிடித்து எழுதிக் கொண்டு போகிறதாக இருக்கும். அதாவது நேர்வழியான மெய்ஞ்ஞான ஒளியில் தரிப்பட்ட ஆதி முஹம்மதரகிறது ஓர் அன்னப்பட்சியின் சொரூபத்தில் ஆயிரத் தெட்டுத் திசையாகிய ஜடலத்தின் ஆயிரட்தெட்டு நரப்பு ஸ்தானங் களிலும் ஆடி நின்றுக்கொண்டிருந்தது. இதற்கு ஆலம் ஜபறூத்து என்று ஹதீது குதூஸியில் வெளியாயிற்று. இதன் உள்ளபடி யான கருத்தாவது என்னவெனில், தாய் தகப்பனுடைய ஜடலத் தின் ஆயிரத்தெட்டு நரப்பு ஸ்தானங்களிலும் இரத்த ஊசாட்ட ஓட்டத்துடன் இச்சையில் கலந்து ஆடி யோடி வந்து நின்ற வெ அன்னமானது என்ன? அன்னத்தின் நிறம் என்ன வென்று யோசித்தீர்களா? அது வெள்ளையல்லவா! இதைக்கூட வெளிப் படையாய்ச் செல்ல வேண்டுமா! சொல்ல வேண்டுமானால் சொல்

லியும் விடுகிறேன். அதுதான் விந்துநாதம் அதைத்தான் ஞான வான்கள் ஞான தந்திர சம்பிர தாயமாய் அன்னப்பட்சி யென்று சொன்னார்கள் அறியவும். அந்த அன்னமானது ஜபறூத்துடைய ஆலத்தில் இருந்து, தன்னுடைய ஒளிவைத் தான்கண்டு. அதா வது தனக்குள் மர்ம இந்திர ஜாலமாய் லந்து நுழைந்து உஷ்ணமான நப்பைக் கண்டு கூவிற்று. அவ்விதம் கூவின அன்னத்தை அந்த உஷ்ண வடி வானது தன்னுசையாலே உற்றுக் கிருபையுடன் பார்த்த வுடன் அந்த நப்பாசையானது ஷி அன்னத்தில் அதாவது இந்திரி யத்தின் பேரில் ஒரு அணுப்போல் தரித்தவுடன் ''இந்த அணுவைத் தான், உமறுப்புலவர் சீருவில் அணுவிணுக் கணுவாய் என்று கடவுள் வாழ்த்தில் சொன்னார்கள்'' கண்டு உறுதியைத் திடப்படுத்திக்கொள். அப்பால் அந்த பிரம பரஞ்சோதியானது தன் கபாலத்தின் அணுத் தனேயான தூய வொளியின் சாக்கிரமத்தைக் கொண்டு சரீரமான பெரிய கோடி யண்டங்க ளெல்லாம் வெளிச்சஞ் செய்து அதாவது சூடு செய்து ''கடல் தன்னில் தரித்தானைக் கண்டு கொண்டேன்'' என்ற கருத்தாவது சரீரத்தில் கடல் என்ற நீருடைய உறுப்பானது எது? அதுதான் நேத்திரப். அதற்குள் நின்றுடும் நிருபியாகிய ''றூஹுல் குதுஸியைக்'' கண்டேன் என்பதாம்.

தன்னுசை யால்வந்த நாதம் - அவன்
ருனே கடலுயி ரோதிய வேதம்
அன்ன தெவையும் படைத்து - வகை
யாவு மூருவுக் குயிராய்ச் சமைத்துப்
பின்னு லேவந்து பிறக்கப் - பல
கோல மெடுக்கப் பிரபலஞ் செய்து
மின்னிய வங்குல முன்ன - இந்த
மேதினி நிறைந்தானைக் கண்டு கொண்டேனே (தீன்)

(அவதாரிகை உரை) அவ்விதம் தான் தானுய் எழுந்த ஆசை யானது, அக்கினியின் கோலங் கொண்டு இந்திரிய மாய்யிற்று. அது தானே கடல் என்கின்ற ''ஜலில்'' பீடங்கொண்டு, ஜடலத் திற்குள் பரம ஆத்மாவாக நிற்கின்றது. இதைப்பற்றி

வேதங்களெல்லாம் சாட்சி சொல்லி விட்டது. இது இப்படியிருக்க மேற்படி உஷ்ணமானது எவ்வகையான சிருஷ்டிப் பொருள்களை யும் உற்பத்தி செய்து, அந்தந்த சுருபங்களுக்குள்ளேயும் தானே உயிராக நின்று, ரூபங்களைச் சமைப்பித்து, கடைசியில் ஆலம் இன் ஸான் என்கின்ற மனுஷ்கோலத்தில் தான் வந்து பிறந்து, தன்னைக் கண்டு கொள்ளும் பொருட்டு உதயமாகித் தனக்கு உதாரணமாக பலபல பேதாபேதமான சுருபங்களையும் நினைவுக்குள் காண்கும் படியாக நிர்மித்து அதுவேறு இதுவேறு என்று பேதகப்படுத்திப் பிரபலமாகப் பேசிக்கொளளச்செய்து, அவைகளுக்கு ஆகாரமாக மின்னலையும், அந்த மின்னலில் நின்றும் மழை நீரையும் ஏற்படுத்தி, அதன் சம்பந்தமாக இந்த பெரிதான உலகத்தில் எங்கு நோக்கி னாலும் ஜீவாத்மாக்களாக நிறப்பிவிட்ட சுயம்பை நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

வானத்தின் மேகம் பொழிய - இந்த
வையகத் தானிய மெங்குமே நெளிய
ஊனினுன் மாதா பிதாவும் - அவ
னுதிரமே நாதமா யோசை முழங்கி
ஆணொடு பெண்ணு மிணங்கி - வந்த
வாசையி னவஞெளி வாசந் துலக்கித்
தானத்தில் வந்து தரித்தே உரூத்
தானெடுத் தானையான் கண்டுகொண்டேனே (தீன்)

(அவதாரிகை உரை) ஆகாயத்தில் மேகமானது பொழிந்து வருஷிக்கவும், இந்த பூலோகத்தில் அதன் காரணத்தைக் கொண்டு பலபல தானியாதி விதமான பொருள்களையும் விளையச் செய்து, அதன் ஆகாரத்துள்ளே மெதுவாக நுழைந்து இந்திரியமானதால், மாதா பிதாக்களின் நினைவில் தன்னுட்டமாயிருந்த சுபமானது, ஆணுடன் பெண் இணங்கச்செய்து, அவர்களின் இரத்தமே நாத மாக வேலைமானஞ்செய்து, கற்பம் என்ற கலிமாவின் அச்சு இயந் திரத்தில் வந்து பதிவாகி, ஜடலத்தை உருவாக்கி, தானும் அந்த உருவுக்குள் உருவாக ஒளித்துக்கொண்டிருந்த ''ரகசிய வடிவை'' நான் இன்னதென்று கண்டுகொண்டேன் என்பதாம்.

அந்தக் கருவிந்து நாதப்-அதில்
அன்னே யுதிரமுங் கூடின சுதம்
அந்த கருவைந்து பூதம்-அது
ஐந்தெழுத் தாகுமே யோதிய வேதம்
விந்துக்குள்ளே தழல் நீதம்-அது
வீசும் புகையிலே யோடுஞ் சுவாசம்
அந்தக் குதிரைமே லேறு - நந்தம்
ஆதியைக் நன்முகக் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) அந்த மாதிரியாக உருவுக் கொண்ட கருப் பொருளான (விந்து நாதமானது) தன்னுடைய தாயின் மாதவிடாய் என்ற சுதகத்தால் கோலஞ் சமைந்த குணத்தினுலே, அது ஐந்து பங்காய் மண், நெருப்பு, காற்று, தண்ணீர், ஆகாயம் என்றும், ஐந்து பூதங்களாய் ஐந்து பஞ்சாட்சரமாக வடிவுகொண்டும், நான்கு வேதங்களையும் தனக்கத்தாட்சியாக ஏற்படுத்தி விட்டு விந்துக்குள்ளே அமைந்திருந்த அக்கினியானது வெளி தோன்றி, ஆனந்த பிரம சொரூப சுடர்விட்டு எரிந்துகொண்டு நின்றது. அப்படி சுடர் விட்டு நின்ற சுடரானது, அச்சுடரில் நின்றும் ஒரு புகையை எழுப்பி விட்டு அப்புகையே சுவாசமாக ஆடவைத்து நமது ரந்திரங்களில் ஆடிகொண்டிருக்கின்றதே அந்த சுவாசக் குதிரையின்மேல் தானே சவாரி செய்து கொண்டு நிற்கின்ற ஆதிவஸ்து வாகிய இராஜக்கருயியை அதாவது ''றப்பை'' நான் இன்ன வஸ்து தான் என்று திருஷ்டாந்திர மாகக் கண்டு கொண்டேன் என்பதே.

உச்சித மாளிகை கட்டி - அதில்
உறுப்புக ளாயிரத் தெட்டையு மொட்டி
வச்சிரத் தால்வளை பூட்டி - வளை
சரியாமல் நரம்பெல்லாம் கயிராகக் கட்டி
மச்சு வீட்டுலகிற் பிறந்து - கொலு
மண்டபத்துக்குள் ளேதானு யிருந்தே
வைச்சுக் கைபிற்சூட்ச மாட்டும்-நம்மை
வருத்த குதாவையான் கண்டு கொண்டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இன்னது தான் என்று எண்ணமில்லாமல் இருந்த நினைவானது, கடைசியாக யாரும் அதிசயப்படும்படியான

ஒரு சிறுதுளி இந்திரியத்தாலே ஐடலம் என்ற ஒரு வீட்டைக் கட்டி முடித்து, அதிலே உறுப்புகளாகிய ஆயிரத்தெட்டு கருவி களையும் அதிலே ஒட்டியிருக்கச்செய்து, வச்சிரம் என்ற உஷ்ண நாடியை அதில் விளக்கெரியச் செய்து, அவ்விதம் எரியும் காந்தி யானது அமர்ந்து விடாமல் சரீரத்தை நரம்பு என்ற கம்பிகளால் தொடுத்துக்கட்டி, சிரசு என்கின்ற மெத்தை வீட்டில் பொற்கட்டில் விமானக் கண்ணுடியாகிய நேத்திரத்தில் தன் உதய பீடத்தை ஏற் படுத்தி, தன் வல்லமையை மூச்சென்கிற ஒரு கச்சைக்கயிற்றுல் சூட்சம் ஆடிவருகின்ற ''குதா என்னும் றப்பை'' நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

கண்டதுங் கேட்டது மல்ல - அங்குக்
கருதி முடித்த தலங்களு மல்ல
அண்டமும் பிண்டமு மல்ல - நல்ல
அகார வுகார சிகாரமு மல்ல
மண்டல மூன்றுக்கு ளல்ல - மறை
வாக நின்றிடும் வாசியு மல்ல
அன்ருதி யெங்கு நிறைத்து - தம்மை
ஆளும் றஹ்மானைக் கண்டுக்கொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) நாம் காணக்கூடிய பொருளுமல்ல. அல் லது நாம் இது பரியந்தம் அறிவுடைய தெளிவு இல்லாமல் சாஸ்திரி களின் வாயிலாகக் கேட்டோமே அந்த மாதிரியுமல்ல, அதில் இதில் என்று பலபல ஷெய்குமார்களும் பலபல விதமாக யோசித் துச் சொன்னர்களே அந்த ஸ்தலங்களுமல்ல அல்லது வானத் தில் இருக்கிறதாக சில ஐக்கியங்கள் ஏற்பட்டிருக்கிறதே அப் படியுமல்ல. பூமியிலா என்று நோக்குப் போது அப்படியுமல்ல, அல்லது அலிபா அதுவுமல்ல. அல்லது ஹமீ என்ற வுமை எழு த்தா அதுவுமல்ல. அல்லது லீஞ அதுவுமல்ல, அல்லது பூமி முதலிய மற்ற மூன்று உலகங்களிலும் இருக்கிறதா என்று யோசிக் கும் போது அப்படியுமல்ல. அல்லது இரகசிய தோற்றத்துடன் நின்ருேடக்கூடிய உதானவாயுவா அதுவுமல்ல அப்படியான குணத்துடன் எல்லா தோற்றப் பொருள்கள் தோறும் பொதுவற

நிறைந்து ஜீவபொருள்களை நடத்திக்கொண்டு வருகின்ற சுயப்பான ''ஹக்கை'' நான் கண்டு கொண்டு விட்டே என்பதாம்.

கண்ட துங் கேட்டதுந் தானே - அங்குக்
கருதி முடிந்த தலங்களுந் தானே
அண்ட மும் பிண்டமுந் தானே - நல்ல
அகார வுகார சிகாரமுந் தானே
மண்டல மூன்றதுந் தானே - மறை
வாக நின்றிடும் வாசியுந் தானே
அன்ருதி யெங்கு நிறைந்து - நம்மை
ஆளும் றஹ்மானைக் கண்டுக்கொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) அரூப தோற்றத்தில் மேலே சொல்லிய மாதிரியினுல் சொரூப தோற்றத்திலேயே நாம் பார்க்கிற மலுஹர் கள் எல்லாம் அதுதான், கேட்கின்ற வேத நூல், பிரசங்கம் எல்லாம் அதன் அத்தாட்சிதான் ஞானவான்கள் திட்டப்படுத்திக் கட்டிய ஸ்தலங்களெல்லாம் அதனுடையதுதான். ஆகாயமும் அதுதான் பூமி என்பதும் அதன் லிபத்துதான், அலீபும் அதுதான். ஹே என்ற ஹமை அட்சரமும் அதுதான். ஸீன் என்ற எழுத்தும் அதுதான் மூன்று உலகமும் அதாவது முக்கமலங்களும் அதன் வெளிச்சஞ் செய்யக்கூடியதுதான். இவைகளுக்கிடையே சுவாச மயத்துடன் மயமாய் நிற்கும் பிராணவாய்வும் அதுதான் இவ்வித அநந்தக்கோடி ஜீவஜந்துக்களாக உருவெடுத்து ஜாலம்பர ஹிதமாக அரசு செலுத்திக்கொண்டு வருகின்ற ''றஹ்மான்'' என்ற சுத்த பரி பூரணத்தை நான் கண்டுகொண்டேன் என்பதாம்-

ஊத்தைச் சடலம் படைத்து - உலே
யாமலே யுப்புக் கடலைப் புகட்டி
வார்த்தைப் பசப்பிட்டு வைத்து - வகை
யாகவே ஒன்பது வாசலு மிட்டு
ஆத்தும மென்றுப்பேர் வைத்து - ஐந்து
பேரையுமொன்ருக வாடவும் வைத்துக்
காற்றைப் பிடித்தே யடைத்தே - ஆர்க்குங்
காணுமல் நின்னைக் கண்டுக்கொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) எந்த நேரமும் அழுக்கும் சிக்கும் உடைய சரீரத்தை உற்பத்தி செய்து, இந்த சரீரம் உலைந்து கெட்டுப்போகாதபடி உப்புக் கடலான வியர்வை நீரை அங்கு ஆதிக்கமும் எற்படுத்தி, அதற்கேற்ற ஒரு பரஞ்சோதி அக்னியின் இயந்திரத்தைக்கொண்டு, நாட்டம், ஒட்டம், தேட்டம், ஆட்டம் இவைகளை உண்டாக்கி, இவைகளினுலே பலபல விதமான பாஷைகளாலும் பேச்சு வார்த்தைகளை உதயமாக்கி, வகை வகையான கோட்டை வாசல்கள் ஒன்பதும் திறந்து வைத்து, இவ்விதம் கட்டிய ஒரு சரீர வீட்டுக்கு ஆத்மம் என்று பேர் நாமமும் சூட்டி, இன்னும் அதற்கு மண், தண்ணீர், அக்னி, காற்று, ஆகாயம் என்கிற ஐந்து சுத்த வீரர்களைக் கொண்டு அந்த வீடு அன்ருடம் ஆடவோடச் செய்து, அந்தத் துருத்திக்கு சுவாசம் என்ற காற்றை வேண்டிய அளவு உள்ளே செலுத்தி அடைத்து வைத்து அதற்குள்ளே ஒரு பூதங்களுக்கும் தெரியாமல் நிற்கின்ற ''றப்பை'' நான் பிரயாசையின் வைராக்ய மஹிமையாலே ஒரு மட்டும் இன்னது தான் என்று கண்டு கொண்டேன் என்பதாம்.

ஓதிய வேங்காரக் கோட்டை - யதி
லொன்பது வீதி யொழுங்கான தோட்டஞ்
சாதிக் குதிரைதான் வேஞ் - சவு
தாரி மேற்கொண்டு நடத்திஞ னீதம்
வீதிக்கு வீதி குதிரை - விட்டு
வேடிக்கை யாகப் பரியை நிறுத்திப்
பாதமில் லாப்பரி யேறும் - நப்மைப்
படைத்த பிராஞையான் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) அடே, ஞானத்தை உணர்ச்சி பண்ண வந்த மகனே! நீ பள்ளிக்கூடத்தில் இருந்து அரி என்று படித்தாயே, அந்த ஓவன்னுவைக்கொண்டு அமைத்து இருக்கின்ற கோட்டையான தலையின் கண் ஒன்பது வகையான வீதிகளும், ஒரு ஒழுங்கான தோட்டமென்கிற புதுவமத்தியும் இருக்கிறது பார்! அதில் ஜாதியாகிய றூஹுல் குதுஷியின் உஷ்ணத்தின் ஆவியால் புகைந்து வருகின்ற சுவாசத்தின்மேல் சவாரி செய்து, ஜடலதத்தின் எல்லா

அவயங்க ளெல்லாவற்றிலும் தன் நீதம் என்ற காந்தியை எழுப் பிவிட்டு நடத்தி வருகிறது. அவ்வாறு வருகிற அந்த ஐனுல் எகிஞனது தான் உதயஞ்செய்து அந்த சுவாசத்தை அங்கிருந்து மற்ற கீழ் வீதிகளான உந்தி, முண்டகம், மூலாதாரம் முதலிய பிண்டஸ்தலங்களிலும் செலுத்தி, அன்ருடம் விஜாரணை செய்து, வேடிக்கை காண்பித்து, அந்தக் கால் இல்லாத குதிரையான வாசி யில் நேசித்து இருக்கின்ற நம்மைப்படைத்த ''றப்பானவனே'' நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

கொள்ளைக் குதிரைகள் கோடி - அவன்
கோட்டை யழிக்க வருகுமே யோடி
வெள்ளைக் குதிரைமே லேறி - வீதி
தப்பாமற் சுற்றிப் பரியை நிறுத்திக்
கள்ளனைக் காவலாய் வைத்துத் - தானும்
கள்ளனுக் குள்ளே கலந்தே யிருந்து
உள்ளுற்றுக் கோட்டையே யாளும் - நமக்
குள்ள பிராணேயான் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இன்னமும் அந்த சரீர மென்னும் கோட் டையை அழித்து விடுவதற்கு கொள்ளைக் குதிரைகளாகிய நோய் கள் அனேககோடி ஓடிவருகின்ற ஸ்தலமாகயிருக்கும். ஆனதா லே அதில் கொள்ளைக் குதிரையாகிய விந்து நாதத்தின் பேரில் ஏறி இருந்துகொண்டு, ஜடலத்தின் ஒவ்வொரு உறுப்புகளிலும் பரியாகிய வாசியை வையாளிவிட்டு, அப்பாலே தன்னுட்டம் என்ற நினைவில் தரிபட்டு, ஊசாட்டம் ஒடுங்கி, இன்னும் அந்த மானுடத்தில் கள்ளனுகிய பித்தென்னும் பகையாளியைக் காவல் செய்பவனுக வைத்து ''தான்'' என்ற நினைவும் அந்த பித்தத்துடன் உஷ்ண வாவுகளாகக் கலந்திருந்து, உடலுக்குள்ளே ஒளிமயமாக அமர்ந்து, சரீரக்கோட்டையை அடவனைத்து, அரசாட்சி புரிகின்ற உள்ளமை வஸ்துவாகிய அந்த உஜூதை, அதாவது மெய்யான ஒளிவாகிய ''அல்லாவை'' நான் கண்டுகொண்டேன் என்ருர்.

உச்சிக்கு நேரே கிழக்கே - நந்த
மூருக்கு மேலே பெருவெளி தன்னிற்
பச்சைப் புருவந்து மேயும் - அதைப்
பாங்குடன் மெல்லப் பழகிப் பிடித்துக்
கச்சைக் கயிற்ருலே கட்டிக் - கலி
மாவுடன் தேனைக் கலந்து புகட்டி
அச்சமில் லாக்கூட்டி லடைத்து - நந்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) தலையில் உச்சி என்றது எல்லோருக்கும் தெரிந்த தல்லவா? அதற்கு நேரே கீழ் பாரிசமாக இருப்பதாகிய மூக்கு முனையாகிய புருவமத்தியிலே, இன்னும் இன்ஸான் உடைய சுய ஊராகியது மண் மண்ணுடைய மகாமானது ஜடலத்தில் நாவு அல்லவா? அதற்கு மேலே தெரியப்பட்ட உன்னாவின் கோட்டை வாசலைத் திறந்து பார்த்தால் ஆலம் சுபீர் தெரியும் அதாவது:- ஒரு பிரமாண்டமான ஆகாயவெளி தெரியும். அதுதான் ஒங்காரக் கோட்டை யென்று ஞானவான்கள் அறிகுறியாகச் சொல்வார்கள். அதற்குள்ளே பச்சைப் புருவாகிய காற்றுடை சுவாச கலியானது வந்து உலாவும். அதை மகா இன்பமான வைராக்கியத்துடன் நாளச வட்டத்தில் பழக்கஞ் செய்து பிடித்து, ஒடியாத கயிருகிய உருதியைக் கொண்டு, நல்ல வரைந்து கட்டி, அந்தக் கட்டுடன் கலிமாவிற் இன்பந்திரண்ட தேனுயிருக்கின்ற ''லாஹூல்'' அர்த்தப் நான் இல்லே. அதுதான் என்னும் நினைவைக் கலந்து ஊட்டி. அதிலே பின்னடையாத சந்தேகமற்ற தன் நாட்டத்தைப் பொருத்தி விட்டு, காரியம் ''இது'' என்பதைத் தெரிந்து கண்டு கலி தீர்ந்து கொண்டேன் என்பதாம்.

உள்ளக் கடலுக்கு மேலே - அதி
லோங்காரமொன் றிமான் வட்டத்துக் குள்ளே
வெள்ளைப் புருவந்து மேயும் - அதை
மெல்லப் பிடித்து விதனப் படாமல்

கள்ளக் கயிற்றாலே கட்டக் - கவி
மாவெழுத் தாலே கரைத்துப் புகட்டி
அல்லா திருக்கூட்டி னின்ற - நந்தம்
ஆதியை நன்றாக கண்டுகொண்டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இருதயம் என்னும் வற்றாத சமுத்திரத்திற்கு மேலாலே, தெரிகின்ற ஓங்காரக் கோட்டை என்னும் முகமண்டலத்தில் ஈமான்னுடைய உட்டவடிவு தெரிகிறதே, அதுதான் நேத்ர மத்திபம். இதில் வெள்ளைப் புருவாகிய கபாலம் அதாவது:—மூலா மண்டலத்தின் ஒளிவாகிய றூஹுல் குதுஸியானது அங்கே ஒரு கஸகஸாவைப்போல் ஒரு ஒளித்தோன்றி நிற்கப். அர்த்தப் பரஞ் சிவத்தை மெல்ல மெல்ல மனவாசியின் பழக்க நடையால் உறுதிப்பிடியால் பிடித்து, சந்தேக மென்னும் கசட்டைக் கொண்டு வேதனையில் ஆக்கிவிடாமல், கள்ளக் கயிறு என்கிற மௌனம் என்றதால் அதை ஓர் மையாகக் கட்டி, கலிமாவின் ஓர் எழுத்தாகிய ''ஹு'' என்ற எற்ற இறக்கத்தால் திருப்பி மாற்றிக் கொண்டு, அல்லா என்னும் வேறு இணைதுணை யன்றிய தன்னுட்டமே தான் என்கின்ற வைராக்கிய கூட்டில் அடைத்து, வைத்திருத்திய பிறகு அது எதுவாகத் தோன்றிற்றே? அதையே, ''றப்பாக'' நான் கண்டுகொண்டேன் என்றார் பிரபு.

இல்லென் றெழுத்தைப் பற்றி - இரு
வாசலைப் பூட்டி யடைத்துப் பிடித்துக்
கொல்லன் றுருத்திக்கொண் டூதி - நல்ல
கோலமாய் மூலக் குகையை யெழுப்பி
வில்லின்மேல் நாணம்பை ஏற்றி - வெகு
வேகமா யொன்பது வாசலடைத்து
அல்ஹப்தி லொன்றுகி நின்ற - நந்தம்
ஆதியை நன்றாகக் கண்டுகொண் டேனே, (தீன்)

(அவதாரிகை உரை) யாரடா உண்மையான வல்லகையைப் பற்றி விசாரிக்க வந்த கனவானே! இந்த இந்த இடத்தில் பெரிதான உடைவுகள் வெளியாகிற படியாலே நீ இந்த இடத்தில் அறிவைத்

தெளிவாக்கிக் கொண்டு வியாபகமாக சற்று நில்லப்பா. கலிமாவில் மத்திய ஸ்தான மாகவும், ஆதாரத்தின் கமல அஸ்தி வாரமாகவும் ஆகிய ''இல்'' என்ற மணிமந்திரத்தை சற்றாரு கட்டிக் காட்டிய உறுதி யென்னும் வைராக்கியப் பிடியால் கடைபிடித்து நின்று, இதுவாசலாகிய ரேசகம், கும்பகம், என்னும் சூசிய சந்திர கலை களையும் அந்த வைராக்கியத்தோடும் பொருந்தச் செய்து, நேரான பழக்கத்தில் நடத்திக் கொண்டதின் பின்னால், அந்த ஒரே பொருளான மனவாசியை ''நப்ஸ் முத்மஇன்னுவின்'' கோலத்தையுடைய தாமரைக் கமலத்தில் நிறைந்து நிற்கும் படியாக பூட்டி யடைத்துக் கொண்டு, இந்த சரீரத்தை ஸ்வாச பந்தத்தினுடன் சம்பந்தப் படுத்தி ராஹிக்கும் பொருட்டு ஊதியெழுப்பி விட்டு, இந்த இன்ஸானீய்யா என்னும் உருப்பிண்ட மானது தான் இருந்த அசலையெந்திக் கொள்ளும்படி ஒன்றான யாதை அஸ்தியில் அதாவது:— மூலாதாரத்தில் அக்னி பிரவேசப்படுத்தி, துடக்கைக் கழுவி, ஒரே ஜோதியமாய் புருவ மத்தியில் வீசி மறைகின்ற ஐனுல் எகீன் அல்லது றூஹுல் குதுஸியின்மேல் நாட்டத்தை நாணுகவும், ஒன்றுபட்ட சுவாசத்தை அம்பாகவும் கொழுகி, அதி சீக்கிரத்தில் நவதுவார வாசல்களையும் அடைத்து, அலிபு, லாம், ஹே, மீம், தால் இந்த ஐந்து அட்சரங்களிலும் ஒன்றுகிய ''ஹு'' என்ற தஜல்லியாக நின்றுகின்ற ஆதி வஸ்துவை யாதொரு சக்கின்றி நான் தெரிந்து கொண்டேன் என்பதாம்.

கோலமா மூலக் குகையைப் - பல
கோடிசெய் விந்தைக் கடலுக்கு மேலே
மேலொளி வாலிந்து கோட்டை - நடு
வோங்காரமொன் றீமான் வட்டத்துக் குள்ளே
நீலமாய் நின்றதை விட்டு - அதை
நீங்காத பச்சைநி றத்தையும் விட்டுச்
சீலமாய் நினற தெளிவைத் - திற
மாகக் குதாவையான் கண்டுகொண் டேனே, (தீன்)

(அவதாரிகை உரை) வல்லபையான தெளிந்த அறிவைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வந்த கனவானே! இதோ பிரபு என்ன சொல்லு

கிருர் பார்! இந்த ஜடலத்தின் தற்சொருபத்தில் வடிவுகொண்டு அமைந்திருக்கும் மூலமென்ற அக்னி மயத்தை பலடல கோலத்தில் பிரித்து வைத்திருக்கும் விந்தின் நிறமாகிய வெள்ளைக் கடலுக்கு சற்றுமேலே அதாவது:- ஒரு இஞ்சி தூரத்திற்கு மேலாலே உண்மையான மெய் ஒளிவானது ஐந்து விதமான வர்னக்கோட்டைகள் தெரியும். அதன் குறிப்பை உன் பிர்மார்களுக்குப் பதிலாக நான் அறிவிக்கிறேன் கூர்ந்து உணர்ந்து கொள். அந்த வெள்ளைக்கு நடுவாலே ஒங்கார மென்னும் ஈமான் வட்டம் இருக்கிறது. அதற்குள்ளே நீலம்போல் ஒரு வட்டவடிவு தெரியும். அதை நீங்காமல் சப்பத்தமாகவே, ஒரு பச்சை விடு தெரியும் அதையும் விட்டு, அதற்கு மப்பாலே அறிவுக்குள் அறிவாய் ஒரு ஜோதி விளக்கானது கடுகுப்பிரமாணம் பளீரென்று தலங்கும். அதுவே திட்டமாக ''றப்பென்று'' நான் கண்டு ஷாகிது சொல்லுகிறேன் என்ருர்.

ஒன்றுக்கு மேவர் பிறந்து - இந்த
உலகத்தை யாண்டேய மிருந்தே மிறந்து
ஒன்றையு நால்வ ரிழந்து - அந்த
வொன்றையே நால்வரும் கொலுவிற் சிறந்து
பண்டுள்ள நீதஞ் செலுத்திப் - பர
மைந்துமப் போதங்கொள் ருக நிறுத்தி
அன்று மின்று மென்று முள்ள - தந்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) ஒன்ருகிய ஆகாயத்தில் நின்றும் அதாவது:—நிலவுக்குள் இருந்து மற்ற ஐந்து வகையான பூதங்களும் உண்டாகி, அவைகளின் சுய கிருத்தியங்களைக் கொண்டே உலகப் பொருள்களை உண்டுபடுத்தி, தனித்தனியே அரசாட்சி செய்து, பின்னல் அந்த பொருட்கள் சென்று பேசதுபோது மற்ற நான்கு பூதங்களும் அந்த ஒன்ருகிய நிலவின் உதயத்தைக் கையிழந்து, மேற்படி உயிர்கள் இருந்து வாழுங்காலத்தில், மேற்படி நான்கு பூதங்களும் தங்கள் கிருத்திய நாட்டங்களால் அந்த ஒன்ருகிய

தன்னுட்டமென்னும் நிலவுக்கு ஒற்றுணர்ச்சி காட்டி, நேத்திரங்களின் மூலியமாக கபாலமென்னும் மண்டை முகாக்கு நடுவே கொலுவாசனம் இருக்கும் படியாகச் சிறப்புச் செய்து, ஆதியில் அதாவது:— அஹதியத்தில் தான் எப்படி கன்ஜூல் மகுபியாவாக நாட்டத்தில் அமைந்து இருந்ததோ! அப்படி தாய் தகப்பன்களுடைய நாட்டத்தில் மறைவாக இருந்து, தன்னுடைய ஞான குணங்களை நடத்திக்கொண்டு வந்து, அப்பால் அசல் வஸ்துக்களான பூதங்கள் ஐந்து தனக்கு அருகில் இருந்து வாழும் படியாக திட்டப்படுத்திக் கொண்டு வந்து, அன்றும் ஆதியில் தகப்பன் தாய்களின் நாட்டத்திலும், இன்றும் அப்பால் தானுகிய ஜடலத்தின் நேத்ரங்களிலும் மென்றும் இனி யெப்போதும் அழியாமல் சித்தி பெற்றுள்ள முதன்மை வஸ்த்தாகிய ''றப்பை'' இன்ன வஸ்து தான் என்று சந்தேஹமறக் கண்டு கொண்டேன் என்ருர்.

நூறுநூ ருயிரங் கோடி - காலம்
அறிவெல்லா மானந்தக் களிப்பாகப் பாடிப்
பாரெல்லாந் தீனவ ரறிய - என்றன்
வாக்கு மனதுடன் வையகக்கு ரைத்தேன்
பாருள்ள தீன்குலத் தோர்க்கு - இறை
பாரக் கடலைக் கடுகினைப் போலே
பீரு முஹம்மது செஞ்சொன் - மிகப்
பிரியமா யுரைத்திட்டேன் ஆமீன் ஆமீன். (தீன்)

(அவதாரிகை உரை) இந்த இடத்தில் மஹான் அவர்கள் ''ஆறு நூருயிரம் கோடிகாலம், என்று ஒரு துல்லியமான கணக்கு உள்ள வருஷ காலத்தைக் குறிப்பிட்டதற்கு நிர்மூடஞானிகள் தங்கள் மனதில் வந்தபடி யெல்லாம் பொருள் பிதற்றி ஒழிகிருர்கள். அதன் மர்மம் அப்படியெல்லாம் அல்ல, உண்மை யெப்படி யானுல் ஸாஹிப் யவர்கள் இந்தப் பூலோகத்தில் 600-வருஷகாலம் ஜீவித்திருந் திருப்பதினுலே சுவாசக் கணக்குடன் அன்னடம் நாள் கணக்கையும் ஒரு சேரச்செய்து, நான் ஆறுநூறு ஆருயிரம் கோடி காலம் ஜீவித்திருந்து அறிவைத் தெரியாமல் உலக மயக்கத்தில் மருண்டலலியும் பாபம் ஏமானி ஜனங்கள் கண்டு தெளிந்து ஈடேற்

றம் பெற்றுக்கொள்ளட்டும் என்று, ஆனந்தக் களிப்பான அறிவை யெல்லாம் பாடலாகப்படி நேர்வழியான மெய்யைக் துடந்தவர் கள் அறியும் படியாக, ஏழு சப்த சாகரங்களையும் ஒரு கடுகுக்குள் நுழைத் தடைத்து விட்டது போல் அந்த ஆனந்தக் களிப்பை தற் கலியூரில் இருந்து வசிக்கும் பீர் முஹம்மதாகிய நான் திரும்பவும் பிரீதியுடன் சொல்லி வைத்தேன் என்றுர்கள்.

ஆனந்தக் களிப்பின் உரையில் நான் ஒரு விதமான விளக்க நடையால் வெளிப்படுத்தினேன். கூறிய அறிவுடைய தனவான் களுக்கன்றி மற்ற மண்டி அறிவுடைய தோஷிகளுக்கு இது ஒரு சிறிதும் பயன்படாது. அப்படித் தனக்கு விளங்காது போன புண்ணியவான்கள், தங்கள் வாயை இதனளவில் பிதற்ற விடாமல் மூடிகொள்ளும் பொருட்டு அவர்களை நான் மிக்க வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆமீன் ஆமீன்.

அவதாரிகை உரை

முற்றிற்று.

திருமெய்ஞ்ஞான சரநூல்

திருமணி உரை.

———:o:———

1-வது திருப்பாடல்

———

எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

பொன்னை மெய்ஞ்ஞான சரநூ லென்னும்
புகழ்பெரிய சாஸ்திரத்தின் புதுமை தன்னை
இந்நிலத்தில் அறியாத மாந்தர்க் கெல்லா
மெடுத்துரைக்கும் பரிசுதனை யெம்பக் கேண்மோ
முன்னை சாஸ்திரமாங் குசக லத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமை தோன்றக்
கன்னல்ரசச் செந்தமிழின் கவிதை யாகக்
கருத்துரையான் கவலலுற்றே னுலகத் தோரே.

(திருமணி உரை) ஓ. உலகவாசிகளே! அழகற்ற பொன்னைப் போன்ற மெய்ஞ்ஞான சரநூல் என்கிற புகழ்ச்சிக் குரிய யெரிய சாஸ்திரத்தின் உண்மைப் புதுமைகளை இந்த உலகத்தில் அறிந்திலலாத மானுடவர்க்கங்களுக்கு நான் எடுத்து விபரிக்க, வந்த மாதிரியைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். முன் செய்து வைத் தார்களே! அந்த நாதாக்களின் சரநூல் சாஸ்திரங்களான குசவன் செய்த பானைப் பண்டங்களுக்கு எதிரே தடிகொப்பு காரன் புகுந்த பெருமையாக, கருப்பு இரசந்தோன்றும் இனிதான செந் தமிழ்ச் சொல்லைக் கொண்டு பாடலாக கருத்தை விளக்கி விட்டேன் என்பதாம்.

இந்தப் பாடல் உண்மையும் அவயடக்கமும் பெரும்படியாக, மஹான் அவர்கள் பாடியதை காண்க.

2-வது திருப்பாடல்

உலகவர்க்குச் சாஸ்திர மொழிப்பில் லாம
லோதும்வகை யேதெனவே யுவந்து கேளாய்
நிலைகருமம் நிலையாது நெறியாய்க் கூறும்
நீடுழி வாழ்வரசு நிலைப்பதோடு
விலங்குவதும் வருங்காலஞ் செல்கா லங்கள்
வியனுறவே நிகழ்காலம் மரணகாலம்
கலைபெரிய விந்நூலின் கார ணத்தின்
காட்சிதனைக் கருதிப்பார் காணுந் தானே.

(திருமணி உரை) இந்த பூமியின் கண் உள்ள மானுடர்களுக் காக வேண்டி சுவாசம் என்னும் சரத்தை விபரிக்கும் படியான சாஸ்திரத்தை யாதொரு ஒளிப்பும் வஞ்சகமும் இல்லாத படியாக நான் சொல்ல வந்திருக்கிறேன். அது எப்படி என்றால் :— கேளுங்கள் உலகவாசிகளே! எந்த ஒரு கருமத்தைப் பற்றியும் இது நிலையாகுமா? அல்லது நிலையாகாதா? என்று திட்டப் படுத்திக் கொள்ளவும், எக்காலமும் சரீர சுயாதின அரசாகிறது நிலை வரப் படவும், விலகி நிற்கும்படியான கை கூடாத வஸ்துகள் சமீபித்து வந்தடுக்கவும், இன்னமும் வருங்காலம், செல்காலம், நிகழ்காலம் இவைகளுடன் மரணத்தை அறியக்கூடிய காலமும், வேத சாரங்க ளெல்லாம் தொகுதி பிடியாக கலந்துபோய் இருக்கும் இந்த மஹா கனதியான மெய் சாஸ்த்திரத்தை நல்ல உணர்ந்து அதன் வல்லமை தெரிசனமான ஏற்ற இறக்க நடையால் பழகிப்பார். அப்போது தெரிந்து கொள்ளக் கூடும என்பதாம்.

3-வது திருப்பாடல்

சுருநிலையிற் றரித்தகனற் பொறியின் காட்சி
கதித்துலவும் வாயுவொடு கலந்தொன் ருகி
உருவெடுத்தே யுயிரென்று முடலைச் சூழ
வோடிவருஞ் சரமாக வுடலுக் குள்ளே

திருநிலையி லேவரையும் பிரியா நாடித்
திசைவாயு திரிகோண மறுகோ ணத்திற்
சுருக்குவலி தாமசை நூற் சொருகும் வாறுபோல்
சுழன்றுவரும் ராட்டினத்தில் கழலைப் போலே

(திருமணி உரை) யாரப்பா ஞானசரத்தை அறியவந்த வல்ல மையாளவனே! இந்த இடத்தில் சற்று ஊன்றி யுணர்ந்துபோவிந்து நாதத்தின் சம்பந்தப் பட்ட அக்னியின் சுடரானது, ஜடலத்தின் அவயவ ஸ்தாணங்கள் தோறும் உலாவி வராநின்ற சுவாசத்துடன் கலந்து, இரண்டும் ஒன்றாகி, இந்த இன்ஸான் கோலத்தைத் தானே சுமந்துக் கொண்டு வந்தது முதற்கொண்டு, இந்த சரீரக் கூட்டைச் சூழ்ந்து வியாபித்து ஓடி வரக்கூடிய மூச்சாக அந்தந்த மகாம்களில் ஒளிவுடன் நிலைத்துக் கொண்டு நிற்கிற, குருநாடி என்னும் நாதரூலி குதுஸின் சொந்த நாட்டத்தைத் தன் நாட்டமாகக் கொண்டு சரீரத்தின் திசைகளான சிரசில் முக்கோணங்களிலும், சிரசுக்குக் கீழ் திசைகளான ஆருதாரம் என்னும் அறு கோணங்களிலும் சென்று மீன் பிடிக்கும் அன்ற வலைகளுக்குள்ளே சுருக்கு கயிறு வந்த விதம் சொருகி யிருக்குமோ அந்த விதமாக ஊடாடி இராட்டின மானது கழன்று வருவது போலே சுற்றிக் கொண்டு வரும் என்பதே.

4-வது திருப்பாடல்

சுழன்றுவரு மிருகலையு மொன்றே ரண்டாய்
செல்லுகிற விடகலைசந் திரனே யாகும்
உழன்றுவரும் வடகலைசூ ரியனே யாகும்
ஒருமித்த விருகலைதான் சுழினைத் தீயாம்
எழும்பிவருஞ் சரமொன்றின் விதமே யஞ்சு
விரல்போல வியம்புகிறே னறிந்து பாராய்
வளம்பெரிய வாயுவுதான் மேலே நோக்கி
வந்தோடும் நாழிகையொன் றேய்ந்தி டாதே.

(திருமணி உரை) அவ்விதம் சுழன்று சுற்றிக்கொண்டு வருகிற சுவாசத்தில் இரண்டு பிரிவினைகள் உண்டு. அவைகளில் இடகலை

என்பது சந்திரனுகையிருக்கும். வடகலே என்பது சூரியனுகையிருக்கும். இவைகள் இரண்டும் ஒன்று சேர்ந்ததனுல் அதுசுழி முனை என்னும் அக்னியாக இருக்கும். இவ்விதம் அந்த சுவாச கலேயானது ஐந்து விதமான தோற்றத்தில் ஒடும். அந்த ஐந்து விதங்களேயும் நான் ஒழுக்கமாகச் சொல்லுகின்றேன். கூர்ந்த அறிவைக் கொண்டு நோக்கிப்பார். அந்த சுவாசமான மேலுலகமாகிய சிரசு ஸ்தானங்களே நோக்கி ஒரு நாழிகையாவது ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் என்பதே.

5-வது திருப்பாடல்

நாழிகைதா னென்றரையாய்ப் பூமி யோடு
நலமான கீழ்த்திசையே நளின மாக
நாழிகைதா னென்றேகால் மூக்கந் தண்டின்
நடுவாக வோடுமது வப்புத் தானே
நாழிகைமுக் காற்பக்க விளிப்பு பற்றி
நன்முக வோடுமது தேயு வாகும்
நாழிகையா காசமரை நடுவ தாக
நாடாம லோடுமடா நாளிற் பாரே.

(திருமணி உரை) அவ்விதம் மேல் மண்டலங்களில் ஓயாது ஓடின சுவாசமானது சற்று நிதானித்து, மகாமன் மஹ்முது என்கின்ற விற்புருவ ஸ்தானங்களில் ஒன்றரை நாழிகை வரைக்கும் அதே குணத்தில் ஓடிவரும். அதுதான் மண்ணுடைய பங்கில் சேர்ந்த சமமாக இருக்கும். அதுபோல் சரீரத்திற்கு நன்மைகளேச் செய்யுப் பொருட்டு கீழ்திசையான காதளவுக்குக் கீழேயுள்ள தாமரைக் காய்க்கு மேலே உள்ள இரு குழாய்களின் வழியாக ஒன்றே கால் நாழிகை வரைக்கும் மூக்கந்தண்டின் நடுவாக ஓடும். அதாவது தண்ணீருடைய பங்கில் சேர்ந்த சமமாக இருக்கும். இன்னம் முக்கால் நாழிகை புருவத்தின் விளிம் பீடங்களில் ஓடிக் கொண்டிருக்கும். அது நெருப்பின் பங்கிலுள்ள சமமாக இருக்கும். இன்னும் ஒரு நாழிகை வரை தாமரைகாயின் நடு மத்திபமாக ஓடிக் கொண்டிருக்கும். அதாவது ஆகாயத்தின் பங்கிலுள்ள சமமாக யிருக்கும் என்பதே.

6-வது திருப்பாடல்

நாழியொன்றுக் கரையாகக் கலேயொன் றுக்கு
நடக்குமினி யறுகலேயில் நத்தும் போது
நீளாம லிருகலேயுஞ் சேர்ந்தே யோடும்
நிலேயாது சுழிமுனேயே நெருப்பு மாச்சு
நாழிகைதா னென்றிற்குச் சரத்தி னேட்டம்
நடக்குமடா முந்நூற்றே டறுப தாக
நாளொன்றுக் கிருபத்தோ ராயி ரத்து
நாடுமறு நூறுசரம் நடக்கும் பாரே!

(திருமணிஉரை) இவ்விதமாக ஐந்து வகைகளேச் சொன்னேன் இனி வரும் விபரத்தைப்பார். நாழிகை ஒன்றுக்கு அரையாக கலேகள் ஒன்றை ஒன்று கூடிக்கொள்ளும். ஒவ்வொரு நாழிகையிலும் சந்திர சூரியரில் நின்றும் அரைவாசியான ஆறு சரங்கள் கூடிவேறு பிரிந்தோடும். அப்படி அன்றி ஒன்று சேரும் போது சந்திர சூரியரின் இரண்டு வகையான சரங்களும் ஒன்று சேர்ந்து ஓடிவரும். இதற்கு என்ன பெயர் என்று கேட்டால் சுழிமுனை என்று சொல். இதன் முழுக்குணமும் அக்னியன்றி வேறுகுணமே இல்லே. இனி சரமாகிய மூச்சியின் அப்பியாசக் கணக்கைப்பற்றி சொல்லுகிறேன். சாதாரணமாக நாழிகை திட்டமாக முந்நூற்று அறுபது சுவாசகலே ஏற்ற இறக்கங்களாக நடைபெறுகிறது. இவ்விதமாக ஒரு நாள் முழுவதும் இரவுபகல் இருபத்தோராயிரத்து அறுநூறு சமானது இந்த சரீரக்கூட்டுக் குள்ளே இருந்து வெளிவருவதும், உட்செல்லுவதுமாக நடைபெறுகிறது. இதன் உண்மையை நீ அந்த வல்லமை நோக்கத்தில் தரிபட்டவனுகப் பார்த்தறிந்துக்கொள் என்பதே.

7-வது திருப்பாடல்

பாரப்பா திங்கள்வெள்ளி புதனே மூன்றும்
பக்குவமாய் விடிகாலஞ் சந்த்ர னேடும்
சேரப்பா ஞாயிருடு சனிசெவ் வாயுஞ்
செங்கதிரோ னேடுமடா விடியுங் காலம்

வாரப்பா வினியொருநாள் வியாழன் மட்டும்
வளர்பிறைக்குச் சந்திரனே வளர்த்தங் கோடும்
கூரப்பா தேய்பிறைக்குச் சூரி யன்ருன்
குதிகொண்டே யோடுமடா கோணந் தானே.

(திருமணிடனர) அடே ஞானசெங்கோல் சக்ரமாகிய சரத் திப்பழகிக் கையாடவந்தவனே! நல்ல தெளிந்த அறிவைக் கொண்டு ஊர்ந்துபார். மாநுட வர்க்கத்திற் பிறந்திருக்கின்ற ஒவ் வொரு ஜனங்களுக்கும் சரம் ஓடுகிற திட்டமான கணக்கையும் தினங்களையும் சொல்கிற விபரத்தைக்கேள். அதாவது:—திங்கள் புதன் வெள்ளி இந்த வாரங்களில் மூன்று நாளும் விடியற்கால நேரத்தில் மனுஷனுக்கு திட்டவட்டமாக சந்திர கலையான இடது நாசியின் ஒட்டம் ஓடிக்கொண்டிருக்கும். சனி, ஞாயிறு, செவ்வாய் இந்த மூன்று நாளும் அதே விடியற்காலந்தொடுத்து சூரிய கலையாகிய வலது நாசி யோட்டம் ஓடிக்கொண்டிருக்கும். இந்த சூரியகலையாவது சந்திரகலையாவது ஒரு வேளைகளில் வியாழக்கிழமை வரைக்கும் அதிகரித் தோடிக்கொண்டிருக்கும். இதில் வளர்பிறை நாள்களில் சந்திரகலையும், தேய்வு பிறைக்குச் சூரியகலையும் ஓடிவரும். இப்படியே சரீரத்தில் வியாபித்திருக் கின்ற எல்லா கோணங்களிலும் குதிகொண்டு ஓடிக்கொண் டிருக்கும் என்பதே.

8-வது திருப்பாடல்

தானான வாரமது வேழுஞ் சொன்னேன்
தப்பிவருஞ் சரத்துடைய பயனைக் கேளாய்
வேனான ஞாயிறிலே சரமே தப்பில்
வியாதியது செய்தனிலே வளரும் பாராய்
ஆனான திங்கவிலே சரமே தப்பில்
அறுதியினு லவர்காலம் முடிவுமாகும்
கானலவுஞ் செவ்வாயிற் சரமே தப்பிற்
கலக்கமுறும் பெரியவொரு கலக மாச்சே

(திருமணிடனர) நான் இந்த உலக வாசிகளான நமது மானிட இனத்தாரின் மேல் பெரிது பிரதி வைத்து மஹாப் பார

தூரமான ஞானசாஸ்திரத்தைப் போதிக்கவந்து இது வரை ஏழுதினங்களில் ஓடியசரத்தின் பிரிவினைகளையும் தெளிவாகச் சொல்லி விட்டேனல்லவா? இனிமேல் அந்த சரமாகிய சுவாசங் கள் இவ்விதமான ஒழுங்கின்படி நடை பெருமல் தப்பி வோடி வருமேயானால், அதினால் என்னென்ன குற்றம் ஏற்படும் என் பதை இதன் கீழ்வரும் கலங்களில் எடுத்துக் காண்பிக்கின்றேன். நன்றும்கேள். எப்படியானால்:—ஞாயிற்றுக்கிழமையில் ஓட க் கூடியது எதுவோ அந்த சரமானது தப்பி வேறு சரமானது ஓடிற் றுனல், உடனே ஏதாகிலும் உஷ்ணத்தை அல்லது சிலேஷ்மத் னைப் பற்றிய வியாதிக்குள்ளாவான். திங்கட்கிழமை எந்த சரம் ஓடவேண்டுமோ அது தப்பி வோடினால், அந்தக் கிழமையிலே அவன் காலம் கனிசியாக மரணம் வந்து லபிக்கும். செவ்வாய்க் கிழமையில் எது ஓடவேண்டுமோ அது தப்பி மற்றது வோடு மாகில், ஜனங்களெல்லாம் திடுக்கிடக்கூடிய ஒரு பெரிய கலகம் வந்து சம்பவிக்கும் என்பதே.

9-வது திருப்பாடல்

ஆச்சப்பா புதனதிலே சரமே தப்பில்
அமாயமடா தொடுத்தவகை பலியா தப்பா
நீச்சப்பா குருவாரஞ் சரமே தப்பில்
நிலையாது பொருட்சேதம் நினைந்தவெல்லாம்
சூட்சமமாய்ச் சுக்கிரனிற் சரமே தப்பிற்
சொல்லுகிறேன் மக்களுக்கு சேத மாகும்
தாழ்ச்சியடா சனிவாரஞ் சரமே தப்பில்
தனக்குமொரு தத்துவந்து தப்புந் தானே.

(திருமணி உரை) இன்னம் புதன் கிழமையில் ஓடுகிற சரமா னது மாறி வேறுசரம் நடக்குமேயானால், அகஸ்மாத்தான அபா யம்வந்து நேரிடும், அவன் எண்ணியிருந்த காரியம் பலிதமாகாது. வியாழக்கிழமையில் வழக்கமாக ஓடக்கூடிய சுவாசமானது மாறி விடும் பட்சத்தில் அவன் எவ்வளவு தலைமுறை கடந்த சாஸ்வதப் பட்ட ஆஸ்தியுள்ளவனுக இருந்த போதக்கும் நிலையற்று நஷ்

டத்திற்குள்ளாவான். இன்னும் அவன் நினைத்த எந்த ஒரு கரும மும் கைகூடாமல் தவரிவிடும். வெள்ளிக்கிழமை சாதாரணமாக வோடுகிற சுவாசந் தப்பிற்றேயானால், திட்டமாகச் சொல்கிறேன் அவன் புத்திரர்களுக்கு உடனே ஆபத்து வந்து சேதமாகும். சனிக்கிழமையில் வழக்கமாய் நடக்கும் சுவாசமானது தப்பி வந்த தானால், அவனுக்கு நின்றுப்போறிருந்து ஒரு தீத்து வந்து அதாவது—கண்டம் வந்து அவஸ்தைப்பட்டு இறுதியில சொஸ்த மடைவான் என்பதே.

10-வது திருப்பாடல்

தப்பாக விருகலியுந் தவரி யோடிற்
நானக்குவருஞ் சனிதோஷம் தடையில் லாமல்
ஒப்பாக லொருபுறத்தி லொறநா லோடிவ்
ஒருமூன்று வருடத்தி லிருந்து போவான்
அப்படியே யொருபுறத்தி ளளா ரேடில்
ஆருத மாதமடா வறுதிக் காலம்
செப்புகிறேன் சந்திரனி லிரவே யொன்றுஞ்
செங்கதிரோன் பகலொன்று மியங்கிற் ருனல்

11-வது திருப்பாடல்

ஆனந்த மருளான யோகி யாவான்
அவன்பெருமை யெவராலு மறியொண் ணாது
போனசர மீளாமற் சுழலு மாகிற்
போகுமடா வொருமூன்று மாசத் துள்ளே
நாணும லிருசரமு மொன்ரு யோடிவ்
நாற்பதாம் நாளிலன்ரே தமனைக் காண்பான்
போனசரம் மீளாமன் மேலே வாங்கிற்
பொய்யில்ல வறுதியென்று மதிந்து பாரே.

(திருமணி உரை) இப்படி தப்பி ஓடின கலிகளில் ஒன்றையே அன்றி இரண்டு கலிகளும் அப்படியே தவரியோடினால், உடனே அவனுக்கு ஜன்னியைப்பற்றி தோஷங்கள் வந்து நேரிடும் இதற்கு

ஒரு விதத்திலும் ஆட்சேபமே இல்லை. அவ்விதமான சரமானது சந்திரனிலாவது, சூரியனிலாவது, நாள் முழுவதும் ஓடும் பட்சத்தில அதிலிருந்து சரியாக மூன்று வருஷத்தில் மரணமடைவான். அவ்விதமாக ஒரு பூரத்தில் நின்ற சரமானது ஆறுநாள் வரைக்கும் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்குமேயானால், திட்டமாக அவன் ஆறே மாதத்தில் மரணமாவான். இன்னமும் ஸூரிய கலியானது ஒரு பகல் முழுவதும், சந்திரகலியானது ஒரு இரவு முழுவதும், ஓடிக் கொண்டிருந்ததானால், அவனிறவன் அவ்வாகுத்த ஆவாவின் சொந்தக் கிருஷ்ணனுள்ள பெரிய ஞானவானாகிய ஒலியாவான். அவனுடைய வல்லமைக்காரியங்களை உலகவாசியான எவனாலும் சொல்லமுடியாது. அவ்விதமான சரமானது கீழ் மனைகளில் இறங்கிவராது. அப்படியே நின்று விடுமாகில், திட்டமாக அவன் ஆத்மாவானது மூன்று மாதத்தில் போய்விடும் அவ்விதம் இருசரமும் ஒன்று சேர்ந்து சுழிமுனையாக ஓடிற்றானால் திட்டமாக அவன் ஒரு மண்டலம் நாற்பது நாளைக்குள் மலக்கல் மவுத்தென்னும் எமனைக் கண்ணில் கண்டுகொள்வான் அவ்விதப்போன சுழிமுனை என்ற சரமானது பிளமல் மேலுக்கே வாங்கி சொக்கிற்றானால், அன்றைக்கே மரணம் என்று திடமாக அறியவேண்டியது என்பது.

12-வது திருப்பாடல்

அறிந்துகொள்ளச் சொல்லுகிறே னின்னுங் கேளாய்
மெய்யப்பா சந்திரன்ரு னியங்கும் போது
சிறந்தமனை குடிபுகுதத் தனம் புதைக்கச்
சேராமலிருந்தவனைச் சேர்த்து வைக்க
வினைதீர்த்தேறும் விஷமிறக்க விதை விதைக்க
வேந்தரிடமே தெரிசிக்கக் கேள்வி செய்யப்
பிறந்தபிள்ளைப் போர்குறிக்கப் பிணியுந் தீர்க்கப்
பிரியமுடன் வியாபாரம் பல்வுங் கொள்ள.

13-வது திருப்பாடல்

கொள்ளமனங் கோணுதையரை நாட்டு றிக்கக்
கொடிதான பகைவரிடங் கொழுகிச் செல்ல
வெள்ளமடா கீழ்க்கிணறு வெட்டிக் காண
வேந்தர் முதலமைச்சருக்குத் தூத னுப்ப

அள்ளியிரு கையாலு மைய மீய
வாகுமடா வித்தனையுஞ் சந்த்ரன் மீது
தெள்ளியதோர் சூரியன்ரு னியங்குப்போது
தீர்க்கமாய்ச் செய்வகையைச் செப்பக் கேளே.

(திருமணி உரை) அறிவை யுணர்ச்சிசெய்ய வந்தவனே! நான் இதுமட்டிலும் சுவாசத்தின் குணு குணங்களைப் பற்றி விபரத்தை இன்னது இனியது என்று சொல்லிக்கொண்டு வந்தேன். இப்போது அவைகளின் பலா பலன்களைப் பற்றி விபரிக்கின்றேன். எப்படியானல், சந்திர கலையானது வோடிக்கொண்டிருக்கும்போது புதிதாகக் கட்டி முடித்த வீட்டில் குடியெறுகிறதற்கும், தான் தேடிய ஆஸ்திபை பூமியில் நிலவரை தோண்டிப் புதைத்து வைப்பதற்கும், இன்னும் ஒருவரை ஒருவர் ஆண், பெண் இருபாலருள் விரோதப்பட்டு மாருட்டமாக பிரிந்துப் போனவர்களை ஒன்று கூட்டி வைப்பதற்கும், ஸர்ப்பத்தால் தீண்டப்பட்டு ஏழாம் வேகம் வரையிலும் ஏறிவிட்ட கொடிய விஷத்தை இறக்கி விடுகிறதற்கும், நஞ்சை புஞ்சை நிலங்களில் தான் செய்யக்கூடிய வேளாண்மைக்காக வேண்டி விதைகளைக் கொண்டுபோய் விதைத்து விடுகிறதற்கும், ஒரு அபூருபமான காரியத்தைப்பற்றி யாரிடத்திலாவது போய்க் கேட்டு வருவதற்கும், தனக்குப் பிறந்திருக்கின்ற குழந்தைகளுக்கு நாமகரணஞ் சூட்டுவதற்கும், வைத்தியனுக உள்ளவன் பெரிதான நோய்வாயகப்பட்ட ரோகஸ்தர்களுக்குச் செய்து முடித்த அவிழ்தங்களைக் கொடுப்பதற்கும், இன்னும் தனக்குப் பிரியப்பட்ட வர்த்தகங்கள் பலதுஞ் செய்யவேண்டி புதுக்கணக்குத் துடங்குவதற்கும், கலியாணஞ் செய்து கொள்ளும் பொருட்டு பெண்ணைத் தேடிப்போய் நிட்சயநாள் குறிப்பதற்கும், கொடிய வன்நெஞ்சனுக இருக்கிற மோசக்கார பகைவனை ஸ்நேகம் செய்து சொள்வதற்கும், நல்ல அதிகப்பற்ருன தண்ணீரை நாடி முதலாவது கிணறு வெட்டுவதற்கும், இராஜாக்கள் முதலிய, மந்திரிகளுக்கும் எழுத்து முதலான தூதனுப்புவதற்கும், ஆண்டவன் சொன்னதுபோல் சகாத்து முதல்களை அன்னதான தருமங்கள் கொடுப்பதற்கும் ஆகக்கூடிய இத்தனையும் சந்திரகலை

மோடும்போது ஆகுமானதாக இருக்கும். இனிமேல் சூரியகலையானது ஓடும்போது செய்யவேண்டிய கருமங்களை இன்னின்னவைகள் என்று அவிழ்த்துச் சொல்கிறேன் கேளப்பா ஏன்பதே.

14-வது திருப்பாடல்

செப்பக்கே ளரண்மனைகள் பலங்கள
சிறப்புடைய மாளிகைகள் சித்ர கூடம்
ஒப்பரிய சித்திரபடா மொளிர்வி தான
முடைமைவகை மகுந்துவகை யாவுஞ் செய்யக்
கப்பலடா கடல்மேலே பயணம் பண்ணக்
கடிதான பேய்பூத மலகை யோட்டச்
செப்பனியு முலேயாளைச் சேர்ந்து வாழச்
செயமாகப் படைபொருத வழக்கு ரைக்க.

(திருமணி உரை) அதாவது:—இராஜ சமஸ்தான கட்டடங்கள், இராஜதர்பார் அல்லது தெய்வஸ்தலங்கள், பார்க்க விநோதமான ஒரு விசித்ர மாளிகைகள், சித்ர கூடங்கள் சடேரென்று கட்டலாம். விசித்ரமான ஞானகச் சின்னங்களை ஊர்தோறுஞ் செய்துகொண்டுபோய் நிலைநாட்டி வைக்கலாம். மனைவரை தம் பதிகள் சயனிக்கக்கூடிய மணிக்கல கட்டிலி ஜோடிக்கலாம். கலியாணப் பந்தல்களுக்கு மஞ்சட்கால் நாட்டலாம். இன்னும் தன் ஸ்திரீகள் அல்லது புதுமணப் பெண்களுக்கு ஆபரணங்கள் செய்யலாம், பெரிதான அபூருபமான அவிழ்தத்தின்புடம் இரசவாத முதலியவைகள் எல்லாஞ் செய்யலாம். இன்னும் புதிதாய்க் கட்டிய கப்பல்களை சடேரென்று சமூத்திரத்தில் யாத்திரை செய்ய விடலாம். கொடியமான பேய் பிசாசுகளை ஆட்டி யோட்டி விடலாம் சாதிலிங்கச் செப்பைப் பேரன்ற ஸ்தன்னியங்களையுடைய புதுப்பெண்களைக் கலியாணஞ் செய்து கொள்ளலாம். முதலாவது வீடு கட்டுகிறதற்கும், அமோகமான படைக்களங்களில் நின்று யுத்தஞ் செய்வதற்கும், நியாயஸ்தலங்களில் ஒரு வழக்குகளை கொண்டு போய் ஸ்தாபிப்பதற்கும்.

15-வது திருப்பாடல்

உரையான மந்த்ரமுத லேதுஞ் செய்ய
வொழுங்காகக் கலியோதச் சரங்க ளுன்னத்
திருவான தேவர்முதற் பெரியோர் மற்றத்
தேவரையுந் திரமுன்னே வரவ ழைக்க
குருபரதம் பணிந்துமுப தேசங் கேட்கக்
கொள்ளுமிடப் பதியேறக் குளிக்க நீரில்
தருகாத பூமியுள்ள தனமெ டுக்கத்
தம்பனமே செய்யநல மாகும் பாரே

(திருமணி உரை) இன்னும் மணிமந்த்ர முதலிய அட்டமா சித்து வேலைகள் அஞ்சனக் கோல்கள் ஆகிய யாவற்றும் செய்வ தற்கும், சடேரென்று உபாத்தியாயரிடம் குழந்தைகளைக் கொண்டு போய் விட்டு கல்வியைப் படிக்க வைப்பதற்கும், சர்குருவின் நீட்சை உத்திரவின் ஞானநிஷ்டை சமாதியில் தரிபட்டு வாசியை நிறுத்தி மசற்றிக கொள்ளுவதற்கும், திரு வென்று சொல்லாநின்ற புண்ய நிலையிற் கடைப்பிடித்து நிற்கும்படியான நபிமார்கள் ஒலிமார்கள் முதலிய பெரிய பெரிய மஹாத்துமாக்களையும், இன்னும் வானவர் கூட்டங்களையும் தன்னுடைய சமூகத்தில் வர வழைப்பதற்கும், மெய்ஞ்ஞான நெறியில் காமிலான அதாவது:— பரிபூரணமான உத்தம குருமார்களின் மாட்டு அடுத்து நின்று வேதாந்தத்தின் இன்ப நுகர்ச்சியான இஹ்யுகளை மூரீதின்கள் பெற்றுக்கொள்வதற்கும். திருடராயுள்ளவர்கள் ஒரு கோயில் அல்லது ஒரு வல்லமையான ஆச்சிரம சாலைகளைக் கொள்ளைகொள்ளும் பொருட்டுப்போய் கன்னக்கோல் வைப்பதற்கும், படைத் தலைவனுகயுள்ளவன்தான் யுத்தத்தால் ஜெயித்த பட்டணத்தின் கோட்டைக் கதவுகளைத் திறந்து அந்த நகரத்தளவில் முதலாவது பிரவேசிப்பதற்கும், தனக்கு வழக்கமில்லாத ஒரு புதிதான அருவி அல்லது ஜலனைமடுவு, கிணறு முதலிய தண்ணீரில் ஸ்நானபானஞ் செய்வதற்கும், தான் அகஸ்மாத்தாக கண்டுபிடித்த புதையற் பொருளை அந்த ஸ்தலத்தை விட்டுப் வெளியே யெடுப்பதற்கும்

கருத்து. அந்த ஸ்தலத்தில் செய்ய வேண்டிய பலி முதலான சடங்குகளை நிறைவேற்றிய பிறகுதான் அந்த பூஸ்த்திகளை அகிர்த்திப்படுத்திக் கையாட்சி செய்து கொள்வதற்கும், தான் ஒரு அருமையான வஸ்துவை தனதாக்கிக்கொள்ள அல்லது வசியப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ நேர்த்தியானதாகக் கைகூடி யிருக்கும், என்பதே.

16-வது திருப்பாடல்

பாடியவோ ரிருசரமு கியங்கும் போது
பலியாது சுழிபுனையே பழியு மாச்சு
ஆடியவோர் ஈரமோடும் புறத்தைத் தானே
யதிகமதாய்ப் பூரணமென் றுரைக்க லாச்சு
சாடியவோர் சரமோடப் புறத்தைத் தானே
சாற்றுகிறேன் சூனியமென் றறிதற் காகத்
தேடிமிக வந்தொருவ னுன்னைக் கேட்டாற்
றீர்க்கமாய்ச் சொல்குறியைச் சொல்லக் கேளே.

(திருமணி உரை) இதுவரையும் நான் சொல்லி வந்த பிரகாரம் நடைபெறுகிற சரமானது, எந்த விதத்திலேயோ சிக்கலாகி ஒரு சரமாக இரண்டும் ஒன்றும் சேர்ந்து ஓடிற்றுனுல் அதுவாகிறது சுழிமுனையாக இருக்கும் என்று திடமாக உணர்ந்து கொள். இதில் ஒன்றுபட்ட இரண்டையும் எப்படி இழுத்து வரங்க வேண்டுமோ அந்த விதம் ஒரு நிமிஷமாவது கணக்கு கணக்கைப் போல் ஓடினுல் நல்லதாக இருக்கும். அன்றி ஒன்று பட்டது, ஒன்று பட்டதாகவே நடந்து வரும் பட்சத்தில் திட்டமாக அதில் அபாயங்கள் வந்தே நேரும். அதில் நீ எடுத்த கருமங்களும் நி என்ன தான் சமாரத்தியங்கள் செய்த போதைக்கும் ஒன்றுங்கைகூடப் போகிற்தே இல்லை. இது நிட்சயம்.

அவ்விதம் ஒருபுறமோடும் ஸ்வாசமானது, அளவு மீறி நடக்குமானுல் அதுதானே பூரணகலை என்று நிதானித்துக் கொள்? அந்த சரமும் நின்று போய் அமர்ந்து வேற்றிடம் பாய்ந்து

சரமானது, மெலிவு கொடுக்குமேயானால் அதுதான் சூனியம் என்று பதித்து உணர்ந்துகொள். இதில் சில சொல்குறி நாடிகள் தோற்றாவாகும். அதன்பயனே இதோ கீழே குறிக்கினறேன் கேட்டுக் கொள்வாயாக என்பதே.

17-வது திருப்பாடல்

செல்லக்கேள் கெற்பனியான் கெற்பந் தன்னிற்
சூலாணே பெண்ணேவென் றுன்னைக் கேட்டால்
வல்லகலே சூரியனில் வலமே கேட்கில்
வளர்ந்திருக்கும் பாலகன்ரு ணுணே யாகும்
அல்லவலன் சூனியத்தி னின்று கேட்கி
லாணுது மதன்கால மற்றுப் போகும்
நல்லகலே சந்திரனிற் பூர ணந்தான்
நாரியின்சூல் பெண்ணென்று நாட்டு வாயே.

(திருமணிவுரை) யாராகிலும் ஒருவன் உன்னிடத்தில் ஒரு கற்பஸ்திரீயைக் கொண்டு வந்து விட்டு இவளுடைய கற்பத்தில் முதிர்ந்திருக்கிற சிசுவானது ஆணு? அல்லது பெண்ணு? என்று குறி கேட்கும் பட்சத்தில் அப்போது நீ அவகே நாடி உன கலேயை நோக்கி வல்லமையுள்ள சூரிய சரமானது வலது பாரி சம் பாயும் பட்சத்தில் உறுதியாக அது ஆண் பிள்ளே என்று சொல்லிவிடு, அல்லது நான் மேலே சொன்ன விபரத்தின் படியான சூனிய சரத்தில் நின்று கேட்கும் பட்சத்தில் அந்த சிசுவானது ஆண்தான். ஆனல் பிரசவித்தவுடன் அல்லது கற்பத்தில் வைத்தே மறித்துவரும். என்று கட்டளே செய்துவிடு, அல்ல அவ்வாறு இல்லாமல் அந்தஸ்திரீயின் சரமானது சந்திரன் இடத்தில் நின்றும் வருமாகில் உடனே அந்த சிசுவானது பெண் குழந்தை என்று கூறுவிடு அப்படி பெண்ணக இருக்கும் பட்சத்தில் சந்திரனில் இருந்து பாயும்படியான சரமானது அதிக உஷ்ணமான பூரண வாசியில் குதிகொண்டு ஓடவேண்டும் இதை நன்ருகக் கவனித்து சொல். இது போலவே ஆண் குழந்தைக்குச் சொல்லும்போது சூரிய சரமானது பூரணங் கொண்டோடுவதை நோக்கித்தான் சொல்ல வேண்டியது என்பதே.

18-வது திருப்பாடல்

நாட்டிடுவாய் சூனியத்தி னின்றே கேட்கில்
நாரியின்சூல் பெண்ணதுவு நமனைச் சேரும்
நாட்டிலின்ன மாதினுக்கு மதலே யுண்டோ
நன்ருகச் செல்லுமென்றே யொருவன் கேட்கில்
கூட்டியதோர் பூரணமே குழந்தை யுண்டு
கொடிதான சூனியமே குலமற் றுப்போம்
தீட்டியநாள் சூரியனுந் திக்கண் மாது
தீர்க்கமதாய் நீயெவர்க்குஞ் செப்ப லாமே.

(திருமணிவுரை) அப்படி சந்திரனில்கேட்ட வாசியானது அதிலும் ஒட்டமெலிந்த நாடியில் அசந்து வரும் பட்சத்தில் அந்த சரமாது சுந்திர சூனியம் என்று உணர்ந்து அந்தப் பெண் குழந்தையும் உடனே இறந்து போய்விடும் என்று உத்திரவு செய்து போடு. இது நிற்க உன் முகம் ஒருவன் வந்து இந்த ஸ்திரீயானவளுக்கு உலகத்தில் பிள்ளேகள் உண்டாகுமா? என்று உன்னைகேட்டால் அந்த சமயம் அந்த ஸ்திரீக்கும் உனக்கும் வாசியானது பூரணத்தில் பேசுமானுல் அதே மாதத்தில் குழந்தை ஜனிக்கும் என்று சொல், அல்லது இவ்வாறே சூனிய சரம் பேசுமானுல் கருவே கிடையாது வங்கிஷத்தின் வேருனது அற்றுப் போகும் என்று கூறிவிடு. உண்டும் என்று சொல்கிற குழந்தையானது என்ன பால் என்பது அதாவது:—பூரண கலேயானது, சந்திரனுனல் பெண்பால், என்றும் சூரியனுனல் ஆண்பாலென்றும், சொல்லிவிடு என்பதே.

19-வது திருப்பாடல்

செப்பியதோர் கருவைகதா னேதென் குலுஞ்
செடமாமோ குறைவாமோ வென்று கேட்டால்
தப்பாது சூரியனிற் பூரணத்தான்
தப்பிவிட்ட நாளாகுஞ் சூனி யத்தில்

மெய்ப்பான சுந்திரனின் மெதுவாய்ச் சேரும்
வேருகுஞ் சூனியத்திற் கரும மெல்லாம்
ஒப்படனே காணுத முதலிக் கேட்டு
லுடன்வருமே பூரணசந் திரனிற் ருனே.

(திருமணிவுரை) இன்னும் ஒரு கேள்வி உன்னிடம் ஒருவன் வந்து இந்த பெண்ணைவளுக்கு வயிற்றில் கெற்பஞ் சேர்ந்து வருமா? அல்லது கரைந்து போகுமா? என்று கேட்டால் அந்த சமயத்தில் அது கேட்டவனுடைய வாசியானது சூரிய பூரணத்தில் பேசுமாகில் உடனே திட்டமாக சேர்ந்து வருமென்று உத்திரவு பண்ணு. அங்ஙனமன்றி சூனியத்தில் வாசி பேசுமாகில் அட்சணமே ஒன்றும் சேராது, மலடிதான் என்று பேச்சை ஒப்பித்துவிடு. அதுவுமன்றி சந்திரனில் வாசி பேசும் பட்சத்தில் கருவானது மெதுவாக நாளாவட்டத்தில் கூடித்தரிக்கும் என்று உறுதி கூறுவாயாக. (இன்னும்) ஒருவன் என் திரவியம் காணுமற் போய் விட்டது, அது வரும்வழி எவ்விதம் என்று கேட்டால் உடனே சந்திர பூரணத்தில் வாசி இடது பால் பேசினால் அந்தப் பொருளானது உடனே அகஸ்மாத்தான வழியில் வந்து சேரும் என்று கட்டுரைத்துச் சொல் என்பதே.

20-வது திருப்பாடல்

சந்திரனிற் சூனியமும் பிரயா சந்தரன்
சார்ந்துபோஞ் சூரியனிற் பூர ணந்தான்
எந்திரமாஞ் சூரியனிற் சூனி யந்தா
னெத்தேச காலமில்லே யிழந்து போச்சு
சந்திரனில் யாத்திரைசெய் வோர்க்கு மேற்குந்
தப்பினதாற் றங்கடங்க டமக்கே யாச்சு
உந்திவருஞ் சூனியனிற் கீழ்வ டக்கு
முற்றவகை தப்பினதா லுனக்கா காதே.

(திருமணிவுரை) இன்னும் கேட்பாயாக, சந்திரனுகிய சுவாசத்தில் சூனியங் கலந்தால் ஒன்றும் பலியாமற் போய்விடும். இன்னும் சூரிய பூரணமானது ஓடுப்போது தானே எடுத்தவன்

கொண்டுவருவான். நடக்கையில் சாதாரணமாக ஒடும் வகையானது தப்பிப் போய் சூரிய சூனியமே ஏற்பட்டாலோ இனி ஒரு நாளாவது அவனுக்கு நிட்சயமென்று சொல்வதற்கிடமில்லே யென்று சொல்லிவிடு. மேற்க்கு திசை யானதல்லாமல் மற்ற எந்த திசைக்காவது சந்திர ஓட்டத்தில் யாத்திரை போவானுகில் தடையன்றி அவனுக்கு போகும் பாதையில் பெரிதான தோக் ஷத்து வந்து மெதுவாக நீங்கும். சூரிய ஓட்டத்தின் கிழக்கு அல்லது வடக்கு திசையாக இருக்காமல் மற்ற திசை யெதுவானலும் சரியே திடனுக அவனுடைய பிராணனுக்கே சேதம் வந்து சம்பவிக்கும். ஈரப்ப இதை மனதில் ஆராய்ச்சி செய்து வந்தவனே! இது உனக்குந்தான் ஆனதால் நீ இதில் பலே ஜாக்கிரதையுடன் வேலே பார்த்து வரவேணும் என்பதே.

21-வது திருப்பாடல்

உனக்கரச் சூரியனிற் பயணம் போக
வொற்றையடி மூன்று தரம் வலது காலால்
இனிதாகக் குதித்தன்றே தத்திப் போத
வியவ்பாகு மிருசரமு மொன்று மாகில்
தனக்குள்ள வீருகாலு மொன்றுய்க் கூட்டித்
தத்திப்போ மூன்றுதர மூச்சு டக்கித்
தனேயவ்வான் மற்றெருவ ரறியொண் ணுது
தங்காம னிரைத்துவரும் மடையைக் கண்டால்

(திருமணிவுரை) உண்மையை விசாரனே செய்ய வந்தவனே! இது உனக்காகச் சொல்கின்றேன். சூரிய வாசியில் அதற்குடைய கிழக்கு வடக்குத் திசையாக நீ யாத்திரை செய்ய எத்தனித்தாலும் இடது காலே மேலே தூக்கி வலது காலே நிற்பாட்டிவைத்து மூன்றே மூன்று அடி மாத்திரம் குதித்து நடந்து அப்பால் சாதாரணமாக நடந்து போக வேண்டியது. சரநூல் சாஸ்திரிகளான நாதாக்களின் அதிக கண்டிப்பான கட்டளையாக இருக்கின்றது. அங்ஙனமன்றி சந்திரனும் சூரியனும் ஒன்று சேர்ந்து

ஒடிற்றுனல், உன் இரண்டு கால்களையும் ஒன்றுகக் கூட்டி குதித்துக் குதித்து மூன்று அடிவைத்து, அப்பால் நடக்கவேண்டியது. அது ஸமயம் உன் சுவாசத்தை அடைக்கி வைக்க வேண்டியது. இது ரகசியம் நீயே ஒன்றி மற்ற யாருக்குந் தெரியவே படாது. அதாவது, உன் குதியான நடையையல்ல நீ மூச்சடக்கி விட்டதை யாக இருக்கும். இதில் அநேக பாய்தாக்கள் இருக்கிறதினால் தான் மஹாத்மாவாகிய நாயகமவர்கள் அதைவற்புறுத்திக் கூறினர்கள். இதில் தப்பைச் சொல்ல வேண்டுமானால் அந்த நிலைமையில் ஆகி ஒன்னிடம் வந்து கேளு அப்போது அந்த ரகசியம் இதுதான் என்று நான்சொல்கிறேன். உரையா கிரியன் என்பதே.

22-வது திருப்பாடல்

படைபொருதச் சந்திரனிற் கச்சை கட்டிப்
பரிவுடனே சூரியனிற் பாய்ந்து செல்லச்
சடுதிவரும் படையானுந் சந்த்ர னுகிற்
சறுகுதலாய்ப் பின்பற்றித்து முன்னே செல்ல
அடவுடனே சுழிமூனேதா னியங்கு மாகி
லகலாம விருகாலுங் கூட்டி யொன்றாய்
இடைதாணு நிலைபிரியா திருத்து மூச்சை
யெழும்பிநின்று மேலேறுக்கி யேற்று வாயே.

23-வது திருப்பாடல்

ஏற்றிடுவாய் சூரியனில் மாற்றுவ் நன்னே
யேறிடுவாய் பூரணத்தி லெய்திநி பட்டான்
ஒற்றையாட சூரியனு சாணே யாகு
முத்தமியாள் சந்திரனு மொருரண் டாகும்
ஒன்றைநிலை கைக்கருவு மாண்பா லப்பா
வோடிவருஞ் சந்திரனி லொருபெண் ணுதும்
வித்தையடா வூட்டலுக்கு ளடைந்த வாவு
வெளிகமன்று வெறுங்கூடாம் விதத்தைக் கேளே.

(திருவணி உரை) இன்னும் போர்க்களத்திற் போய் நின்று யுத்தஞ் செய்ய வேண்டுமானால். அதற்குரிய முஸ்தீபுகளே சந்திர வாசி யோடும்போது அணிந்துகொண்டு ஆயுததாரியாக தயராகி, சூரிய வாசியானது திரும்பின உடனே படை முகத்திற் பாய வேண்டியது. அதே சமயத்தில் சந்திரவாசி நடைபெற்ற தாகில் உடனே அந்த மாற்றுன் படையானது சீக்கிரம் வெள்ளம் போல் வந்துவிடும். அந்த சமயம் நீயும் உன் தளங்களும் சற்றுப் பின்வாங்கிக்கொண்டு அப்பால் முன்னேறு. அங்ஙனம் அன்றி பூரணத்தில் சுழிமுனை சரமானது வாங்கிற்றுனல் உன் இரண்டு பாதங்களையும் ஒன்றுய்க் கூட்டி ஒன்றுய் வைத்துக் கொண்டு நிறுத்தும் நிலையானது பிரியாமல் மூச்சை நிலையளவில் நிதானித்து இருத்தி வைத்துக்கொள், அவ்விதம் இருத்திய வேகத்துடனே ஸ்வாசத்தை சற்று மெதுவாக எழுப்பி நிறுத்தி மேல் நாடிகள் என பூவல்நானத்தளவில் ஏற்றிக்கொண்டால், அப்படி ஏற்றுகிற சுவாசம் சூரியனுனல் உடனே மர்ற்றுனுடைய தளமுழுவதும் நின்றது நிற்க எல்லாம் பாடுசாய்ந்து அர்தநாசம் அடைந்து போகும், அது பூரணமாக இருக்கும். பட்சத்தில் அரசனும் உன் வசமால் வெட்டுப்படுவான், எனென்றுல் சூரியன் என்பது உன் தந்தையின் இந்திரியத்துடல் கலந்து வந்த வாசியாக இருக்கும். சந்திரனே உன் தாயின் சுரோணிதத்தில் கலந்து வந்து சேர்ந்த பெண் வாசியாக இருக்கும். ஆகவே இவை இரண்டு வெற்றியையே தரும் என்று நீ ஒவ்வொரு கருமங்களுக்கும் உபயோகித்து வரவேண்டியது. இதுபோலவே சந்திர நடையில் தரிக்கின்ற கருவானது பெண் சொருபமாகவும், சூரிய வாசி நடக்கும்போது தரிக்கின்ற கருவானது ஆண் சொருபமாகவும் தரிக்கும். இனி வரக்கூடிய அபூருபமான சர நடைகளைச் சொல்கின்றேன் கேட்பாயாக என்பதே.

24-வது திருப்பாடல்

விதமாக வூட்டலுக்கு ளடைந்த மூச்சு
விருத்தியொடு சூஸ்திரமா யிருக்கும் போது

இதமாக விராறங் குலமே யோடு
மிருநான்கு வங்குலமே யேறு முள்ளே
துதியாகப் பேசுகையிற் பதினு ரேடுந்
துடியாக விருநான்கு தொடுத்துள் ளேறும்
கதிநடையி லிருபதுபோய்ப் பத்து மீளும்
கடும்வேலைக் கறுநான்கின் முந்நாள் கேறும்.

25-வது திருப்பாடல்

முன்னேறுஞ் சண்டையிலே யாரு ரேடின்
மூவெட்டு வங்குலமே முறையிற் செல்லும்
கண்மூடிச் சயனமிடி லாறெட் டோடிக்
கடுகிவரு மையாறு கருதிப் பாராய்
உன்னியுன்னி யோடுகையி லொன்ப தாறி
லொன்றுக்குப் பாதியடா வுயர வேறும்
இன்முலையான் சேர்க்கையிலே யெட்டெட் டோடி
யென்மூன்று வங்குலமே யேறும் பாரே.

(திருமணிவுரை) சரயோகஞான தந்திரத்தைக்காண வந்த வனே! கேள் பலபல விதங்களாக ஜடலத்திற்குள்ளே நுழைந்து கொண்ட சுவாசமானது, நல்ல விர்த்தியான குஸ்திரமாக இருக்கும்போது, கலையானது 12. அங்குலம் கீழ்நோக்கி ஓடி, 8-அங்குலம் மேல் நோக்கி ஒடும். மனிதன் பேசும்போதும், கலையானது, 16. அங்குலம் கீழே ஓடி, 8-அங்குலம் கலைகள் மேலே ஓடும். மனிதன் நடக்கும் போது, கலையானது 20-அங்குலம் கீழ் நோக்கி ஓடி, 10-அங்குலம் மேல் நோக்கி செல்லும். கடுமையான தொழில்கள் செய்யும்போது கலையானது 24-அங்குலம் கீழ்நோக்கி சென்று, 12-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும், சண்டை சச்சரவு நடக்கும் போது கலையானது 36-அங்குலம் கீழ் நோக்கி சென்று, 24-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும், மனிதன் தூங்கும்போது கலையானது 48-அங்குலம் கீழ் நோக்கி சென்று, 30-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும். குதித்து ஓடும்போது கலையானது, 54-அங்குலம் கீழ்நோக்கிச் சென்று, 27-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும். ஸ்திரிகளுடன் சல்லாப்செய்யும்போது கலையானது 64-அங்குலம் கீழே நோக்கிச் சென்று, 24-அங்குலம், மேலே செல்லும், இதை நல்ல ஆராய்ந்துபார் அப்பொழுது தெரியும் என்பதே.

26-வது திருப்பாடல்

பாரப்பா யிவ்விதத்தா லாவி யெல்லாம்
பறந்தோடிப் போறதினாற் பிராணன் போச்சு
நீரப்பா கால்வயிறே யருந்த வேண்டும்
நித்தியமு மரைவயிறே யமுத ருந்தல்
நேரப்பா முப்பாகந் தினமொன் றுக்கு
நித்திரையை நெடுநாளி னிறுத்திப் போடு
சீரப்பா வறுகோணத் தெழுந்த வாய்வைச்
சிந்தையிலே யுள்ளடக்க விதத்தைக் கேளே.

(திருமணிஉரை) நீ நன்றாக உணர்ந்துபார். இந்த விதங்களினாலேதான் ஒவ்வொரு ஆவியாகப் பறந்து போகிறதினாலே தான் நாளாவட்டத்தில் குறைந்துபோய் கடைசியாக றாஹூ என்கிற பிராணனும் இல்லாமற் போகின்றது. ஆனதால் நீ சாப்பிடும்போது சோற்றை அறைவயிறுக்குத்தான் திண்ணவேண்டியது. தண்ணீர் கால்வயிறுதான் அருந்த வேண்டியது. இதுபோலவே ஒருநாளை மூன்று பங்கு வைத்து அதில் ஒரு பங்கு நேரத்தான் நீ நித்திரை செய்து, அப்படியே நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகத் தூக்கத்தைத் தேய்த்துப் போடவேண்டியது. இன்னும் ஆறு ஆதாரம் என்ற பிண்டத்தில் எழுந்த பிராணவாய்வை சிந்தையாகி இருதயத்தில் உள்ளடக்கி வைத்துக்கொள்ள தந்திரம் என்னவென்றால் அதைக் கேட்பாயாக என்பதே.

27-வது திருப்பாடல்

விதமென்ன வொழியாம லோடு நாடி
வீவெரு மோரெழுத்தை விளம்பிக் கொண்டு
இதமான வாசானி யெழுத்தைக் கேட்டே
எள்ளளவும் பிசகாமற் சரத்தி னுன்றி
ஒதுறவே வாய்திரந்தா லொழுகிப் போச்சு
ஓகோகோ சரமதனை யொன்றுய் மாட்டி
மாதிரத்தின் வாய்மூடி மனதிற் பூட்டி
வாசித்தால் மரணகலே சாகாதப்பா.

(திருமணி உரை) அப்பா! அந்த விதமாகிறதென்ன வென்றாலோ! எந்த நேரமும் ஒழியாமலே ஓடிக்கொண்டிருக்கின்ற நாடியானது சீர ஆதிக்கமும் வீசிவருகின்ற (ஹம்) என்று சொல்லக்கூடிய கலிமாவின் உயிர் எழுத்தானதை நல்லபடியாக ஆசானது சமூகத்தில் தீர்ச்சையாக வரம் வாங்கிக் கொண்டு, அவர் சொல்லக்கூடிய முறையில் ஒரு எள்ளளவும் பிசகுவரா தபடி, சரத்தை நான் இந்த சதநூலில் பூரணமார்க்கம் கூறிவந்த ஆஸ்பத நேர்த்தியைப்போல் நீ தவறி விடாமல் ஊன்றிப் பிடி. அந்த சமயம் நீ அந்த அட்சரத்தை மதில்தான் நினைத்து சரம் உன்னவேண்டியதே அல்லாமல், வாய்திறந்து ஓத நினைத்தால் உடனே வாயின் இடமாக ஒழுகி ஓடிவிடும். ஓகோகோ இந்த தந்திரத்தில் அமர்ந்து எல்லாப் பூரண சரங்களையும் ஒன்றுக மனதிடத்தில் கூட்டிப்பிடித்து ஒரே சூரிய பூரணத்தில் கொண்டுபோய் மாட்டிக்கொண்டு, மாட்டிக் கொள்ளையோனுலே மரணகலையானது ஒருபோதும் சாகாமல் உன் ஜடலத்திலேயே தங்கிவிடும் அப்போது நீ எப்போதும் சாகாவரம்பெற்று நீடுழிகாலம் சிரஞ்சீவியாக இருந்து வருவாய். இதன் திறமைகளைத் தெரியாத மூடர்கள் நம்மவே மாட்டார்கள் என்பதே.

28-வது திருப்பாடல்

சாகாது தவருமலோடும் நாடி
சரமொன்று தப்பிவிடிற் சற்றே போச்சு
வாகாக வோரெழுத்தா லிழுத்து மூச்சை
வாசித்து வெளிவீச வழுக்க மாகும்
ஓகோகோ வெளிமூச்சுக் கிருக்கா லோதே
உத்தமனே யொருமூன்று நாளிற் றேறு
பாகமதா யொருபதுநா ளுயி ரந்தான்
பழக்கமதாய்க் கொண்டுவச மணையே நாளில்

(திருமணி உரை) அவ்விதம் சாகாமல் நிலைநின்று ஓடக்கூடிய குருநாடியானது ஒரு சமம் அதில் தப்பிவிட்டால் சற்று தனுவானது குறையும். அதை அந்த (ஹம்) என்ற திருவெழுத்தின் மந்திர தந்திரத்தாலே உயிரே இழுத்துக்கட்டி கழற்றி வீசவீச அதுதான் பழக்கப்பட்டு விடும். வெளிமூச்சுத் தங்கினசூனியசு வாசங்களுக்கு இரண்டு தடவை (ஹம்) உச்சரிக்க வேண்டும். அது மூன்று நாளைக்குள் நடப்பிலே பழக்கமானவுடன் உன் அடங்காத சரீரகட்டையானது சுலேற்றம்பெறும். அதற்கடையாளம் தானே தெரியவரும். இப்படியாக பதினுயிரம் சரநிலைகளாக நீ ஏற்ற இரக்கங்களில் மாற்றிவந்து உன் ஜனனகண்டங்களை நீக்கிக் கொள்ள வேண்டியது. அதாவது:—வாசியை வசஞ்செய்து கொள்ள வேண்டியது. இது நானாவட்டத்தில் சிறுகச் சிறுக பழகிக்கொள்ள வேண்டியது.

29-வது திருப்பாடல்

நாளுக்கு நாட்பழக்க மதிக மாக
நடந்தேறு நாதத்தை நன்ருய்ச் சூட்டி
வேழுத்தைத் துப்பியிலே கட்டொண் ணாது
விதமென்ன கலையதையே விரும்பிக் கொள்ளு
நாளுக்கு நாளாவி வளர்ந்தே யேறும்
நலமான சுத்திதனைச் செய்து கொள்ளு
ஊழுழி காலமெல்லா முண்டே நானு
முலகுவர்க்கு விந்நூலை யோதி னேனே

(திருமணி உரை) அப்படி நாளுக்குநாள் பழக்கஞ்செய்து அதிக நீதத்தில் வந்து கூடினவுடனே வேழம் என்ற ஆண்யானை போல் மதங்கொண்டு கழன்று செல்லாநின்ற சூரிய பூரணத்தை தும்பி என்ற பெண் ஆனையைப்போல் சாந்தங்கொண்டோடுகிற சந்திர பூரணத்துடன் ஒன்றுசேர விடாமலும், ஒன்றுக்கட்டி இணங்கிவிடாமலும் என்னவிதம் எந்தக்கலையால் நிறைவேறுமோ அத்தகைபோல் சக்ரம் ஆடிக்கொள்வாயாக. இனிமேல் உன் றூஹானது பரிபூரணத்தின் சகவாசத்தாலே கொஞ்சங் கொஞ்சமாக எற்றங்கொண்டுவரும். அதிலும் சுவாசசுத்தி என்கின்ற சூனிய சரத்தை எதிலுங் கலக்கவிடாமல் தடுத்துக்கொள்ளு. இந்த ஊழூழிகால வாழ்வாகிய பூரணநிலையில் நான் கண்ட பரமானந்தத்தை இனி ஒரு அணுத்தனையேனும் வஞ்சகம் இல்லாமல் உலகவாசிகளுக்கு நான் சொல்லிவிட்டேன்! சொல்லிவிட்டேன்! அறிவும் அன்பும் உடைய கெட்டிக்காரர்களாக இருப்பீர்களானால், இந்த வல்லமை குணத்தில் பிரயாசையெடுத்தால் முத்தி மோட்சம் பெற்றுக்கொள்வீர்கள். இந்த என்னுடைய சரநூலானது உலகத்தார்களுக்கு இன்றியமையாத ஒரு பெரிய தெய்வ அமிர்தத்திரளுக் கொப்பாக அதற்கு மேலானதாகவே இருக்கின்ற தென்பதை அந்த நடையில் வந்தவர்களுக்கே தெரிந்து ஷுக்ரு செய்வார்கள் என்பதே.

30-வது திருப்பாடல்

ஏதுகின்ற சரமதனை யுலகத் தோர்க்கு
மொளியாம லுரைத்தவித முவந்த போக்கு
வேதகுவ வ்வாஞ்சி பேரு ளான
வேந்தரெனும் சிறுமலுக்க ரீன்றபாலன்
நீதமிலா தின்நூலைப் பொய்யென் றுமலி
நிலைநிறுத்தப் பீர்முஹம்ம தென்போன் யானே
வேதமெலு மெய்ஞ்ஞான சரநூ லென்றே
விளம்பினேன் கவிமுப்ப தாகு முற்றே

(திருமணி உரை) இந்த உலகத்தில் சுவாசத்தைப் பற்றிய சாஸ்திரவிதியை மானிடவர்க்கத்தார்களுக்கு யாதொரு ஒளிப்பு மறைப்புமில்லாமல் தீர்மையான வழியாக சொல்லியவர் யாரென்றாலேரி இஸ்லாம் மார்க்கத்திற்கிறத்த தோத்திரவந்தராகிய வாவாஞ்சி அவர்களின் பேரப்பிள்ளையாகிய சிறுமலக்கரவர்கள் பெற்ற குமாரராகிய தற்கலீயூர் மெய்ஞ்ஞான சொரூபராகிய பீர் முஹம்மது சாஹிபு என்னும் மஹாத்மாவால் ஞானசரநூல் இன்னமாதிரிதான் என்று நிலைநாட்டும் பொருட்டுச் செய்த திருக்கவிதை முப்பது ஆகும் என்பதே.

இந்த இடத்தில் ஆசிரியர் தன்னைத் தாழ்த்திச் சொல்லியிருந்த உண்மையுடன் பாட்டின் முறையில் கவி நடத்தினதாக இருந்த போதைக்கு அதை உரை எழுத்த எனக்கு அவ்விதம் தன்மை முன்னிலையில் எடுத்துக் காண்பிப்பது அவ்வளவு உசிதமாகாது என்று கருதி படாக்கையுடன் பாட்டாக எழுதினேன் என்று ஆன்றோர் கண்டு கொள்ளவும்.

திருமணி உரை முற்றிற்று